
2013, May 01 - 15

எக்ஸ்பிரஸ் நியூஸ் பேப்பர்ஸ் வெளியீடு

# சமகாலம்

Registered in the Department of Posts of Sri Lanka under No: QD/News/72/2013



## தொடர்ந்து வரும் அகதிப் படகுகள்

## தடுமாறும் அவுஸ்திரேலிய அகதிச்சட்டம்

14 MAY 2013



வெளியுறவு கொள்கையில் ஒவ்வாமைகள்



மின்சார அதிர்ச்சி



டாக்டர் ராமதாஸை சிறைக்கு அனுப்பிய காதல் விவகாரம்

| | | |
|---|---|---|
| INDIA................IN₹ 50 | CANADA........CAN$ 10.00 | USA..........US$ 10.00 |
| SRI LANKA....SLR 10 | AUSTRALIA...AUS$ 10.00 | UK.............GB£ 5.00 |
| SINGAPORE...SG$ 14 | SWISS.............CHF 10.00 | EUROPE..EU€ 5.00 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1001-



# எம்முடன் இணைந்து உலகை காண வாருங்கள்



## எமது சேவைகள்

- Flight Reservations & Ticket Issuance
- Assistance in obtaining VISA
- Travel Insurance
- Travelers Cheque
- Hotel Package
- Additional Services

Your journey may be an excursion or a business trip or any other, Our ambition is to reduce your travel expenses.



Hotline : 0714 748 748

KT

பொதுசன நூலகம் யாழ்ப்பாணம்.

IATA ACCREDITED AGENT


# KEY TRAVELS (PVT) LTD

# 136/1, Main Street, Colombo 11, Sri Lanka.
Tel : 5331124, 2325994, 2432801 Fax : 5331125
E-mail : keytrav@sltnet.lk, www.keytravelslk.com

facebook.com/keytravelslk See The World With Us


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமகாலம்
2013, மே 01 - 15




வெளியுறவுகளில் ஒவ்வாமைகள்
- பேராசிரியர் ரஜீவ விஜேசிங்க

13 குறுக்கு வழிகள்
தாரிக் அலி




மனிதக்கணினி சகுந்தலாதேவி




வயலின் மேதை
லால்குடி ஜெயராமன்

43 சச்சினுக்கு 40
ரி.எஸ்.கணேசன்

35 இது இன்னும் இந்திய சமுத்திரமே
நிலாந்தி சமரநாயக்க

56 டேவிட் - தமிழ் சினிமாவில் ஒரு திருப்பம்
- மீனா

62 வன்னியிலிருந்தோர் நாவல்
மு.பொ.





உங்கள் செல்ல நாய் போல் ஒரு குளோனிங் குட்டி வேண்டுமா?
டாக்டர் எம்.கே. முருகானந்தன்




அமெரிக்க பொலிஸும் இந்திய பொலிஸும்

38 ஒரு கட்சித் தலைவரை சிறைக்கு அனுப்பி இருக்கும் காதல் விவகாரம்
- முத்தையா காசிநாதன்




தடுமாறும் அவுஸ்திரேலிய அகதிச்சட்டம்
கலாநிதி சந்திரிகா சுப்ரமண்யன்

30
சேர்பிய - கொசோவோ உடன்படிக்கை




மின்சார அதிர்ச்சி
- ராஜன் பிலிப்ஸ்

21 இன்னும் எத்தனை செப்டெம்பர், எத்தனை மார்ச்?
- என்.சத்தியமூர்த்தி

26 உலக முதலாளித்துவத்தின் சாத்தியமற்ற மீட்சி
குமார் டேவிட்




கடைசிப் பக்கம்
பத்மா சோமகாந்தன்

*Samakalam focuses on issues that affect the lives of people of Sri Lanka, the neighbourhood and the world*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசிரியரிடமிருந்து...

# சம்பந்தனும் கூட்டமைப்பும்

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை தனியான கட்சியாக தேர்தல் திணைக்களத்தில் பதிவு செய்து கொள்வது தொடர்பில் அதன் அங்கத்துவக் கட்சிகளில் பெரும்பாலானவற்றுக்கும் இலங்கைத் தமிழரசுக்கட்சிக்கும் இடையே நிலவுவதாகக் கூறப்படும் கருத்து பேதங்கள் குறித்து ஊடகங்களில் வெளியாகியிருக்கக்கூடிய செய்திகளும் விமர்சனங்களும் கூட்டமைப்பின் தலைவர்களின் அக்கறைக்குரியவையாக இருந்திருக்கின்றன என்பதில் சந்தேகமில்லை. அண்மையில் தந்தை செல்வாவின் 36ஆவது நினைவு தினத்தை முன்னிட்டு கொழும்பு பம்பலப்பிட்டி புதிய கதிரேசன் மண்டபத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நிகழ்வில் தலைமையுரையாற்றிய தமிழரசுக் கட்சியின் தலைவரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்றக் குழுத் தலைவருமான இரா.சம்பந்தன் அவர்கள் கூட்டமைப்பிற்குள் இருக்கக்கூடிய முரண்பாடுகள் தொடர்பில் கருத்துக் கூறியபோது 'ஊடகங்களின் ஊகங்கள்' பற்றி குறிப்பிடத்தவறவில்லை. அந்த 'ஊகங்களில்' சில தீய நோக்குடையவையாகவும் விசமத்தனமானவையாகவும் இருப்பதாகக் கூட அவர் கூறத்தவறவில்லை.

தமிழ்மக்களின் எதிர்காலத்தைப் பொறுத்தவரை, தமிழ்த்தேசியக் கூட்டமைப்பிற்குள் எந்தவிதமான கொள்கை வேறுபாடுமே கிடையாது என்றும் தங்களுக்கிடையேயான உள்விவகாரங்களில் இருக்கக் கூடிய எந்த வேறுபாட்டையும் இணக்கபூர்வமாகத் தீர்த்துக்கொள்ளக்கூடிய ஆற்றலும் உறுதிப் பாடும் அங்கத்துவக் கட்சிகளிடம் இருக்கின்றது என்றும் அவர் கூறியிருந்தார். மூத்த அரசியல் தலைவரான சம்பந்தன் அவர்களிடமிருந்து வந்த இக்கூற்றை தமிழ்த்தேசியக் கூட்டமைப்பைச் சிதையவிடாமல் வைத்திருக்க வேண்டுமென்பதில் அவருக்கு இருக்கக்கூடிய பற்றுறுதியின் வெளிப்பாடாக நாம் கருதுகின்றோம்.

தங்களது அரசியல் உரிமைகளுக்கான போராட்டங்களைப் பொறுத்தவரை இலங்கைத் தமிழர்கள் மிகவும் இடரார்ந்த கால கட்டத்தில் வாழ்ந்துகொண்டிருக்கும் நிலையில், அவர்களுக்கு நம்பகத்தன்மையும் துணிவாற்றலும் கொண்ட அரசியல் தலைமைத் துவத்தை வழங்கக் கூடிய ஒரு வலுவான சக்தியாக தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு விளங்க வேண்டும் என்ற நோக்கிலேயே பெரும்பாலான தமிழ் ஊடகங்கள் இந்த விவகாரத்தை அணுகி வந்திருக்கின்றன.

(51ஆம் பக்கம் பார்க்க...)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடிதங்கள்













### யாரின் சார்பில் சத்தியமூர்த்தி?

என்.சத்தியமூர்த்தி எழுதிவருகிற அரசியற் கட்டுரைகளை தொடர்ச்சியாக வாசித்துவருபவன் என்ற முறையில் ஒரு கருத்தை மாத்திரம் கூறிவைக்க விரும்புகிறேன். இலங்கை மீதான சர்வதேச சமூகத்தின் நெருக்குதல்களினால் தமிழர்களுக்கு எந்தப் பயனும் வந்துசேரப்போவதில்லை என்பதே அவரின் உறுதியான நிலைப்பாடாக இருக்கிறது. அதேவேளை, தமிழர்களுக்கு ஆதரவாக இந்திய மத்திய அரசின் கொள்கையிலும் பெரிய மாற்றம் ஏற்படுவதற்கில்லை என்பதையும் சத்தியமூர்த்தி சொல்லத் தவறுவதில்லை. அவர் யாரின் சார்பில் எழுதுகிறார்? தெளிவுபடுத்துவாரா?



எம்.பஞ்சாட்சரம், சாவகச்சேரி.


### ஆண்டு மலர்

இதுவரை வெளியான சமகாலத்தின் இருபது இதழ்களையும் தவறாமல் வாசித்து வந்திருக்கிறேன். சமகாலத்தைக் கையில் எடுத்ததும் குறிப்பிட்ட இருவாரங்களுக்குள் தேசிய அரசியலிலும் சர்வதேச அரசியலிலும் இடம்பெற்றிருக்கக்கூடிய முக்கிய நிகழ்வுகள் பற்றிய ஆய்வுகள், அபிப்பிராயங்களை மிகவும் தெளிவாக அதேவேளை இரத்தினச் சுருக்கமாக படிக்கலாம் என்ற நம்பிக்கை ஏற்படுகிறது. சமகாலம் இன்னும் சில வாரங்களில் ஒருவருடத்தைப் பூர்த்தி செய்யப்போகிறது. அப்போது ஓராண்டு நிறைவு மலர் ஒன்றை கூடுதலான பக்கங்களில் கனதியான விடயதானங்களுடன் வெளியிடுவதற்கு ஆசிரியர்குழு முன்வரவேண்டுமென்ற கோரிக்கையை முன்வைக்கிறேன்.

சதாசிவம் பரமேஸ்வரன்
கல்வியங்காடு, நல்லூர்.

### அசோகா கிளாஸும் பழைய சாராயமும்

சரத்பொன்சேகாவின் அரசியல் பயணம் என்ற குசல் பெரேராவின் கடந்த இதழ் கட்டுரையில் ஒரு குறிப்பைப் பார்த்ததும் குபீர் என்று சிரிப்புத்தான் வந்தது. இன்றைய அரசாங்கத் தலைவர்கள் கடைப்பிடிக்கிற அதே சிங்கள பௌத்த மேலாதிக்கக் கொள்கைகளையே சரத்பொன்சேகாவும் கடைப்பிடிக்கிறார். எதுவுமே அவரிடம் புதிதாக இல்லை என்பதை விளக்க குசல்பெரேரா 'அதே பழைய அசோகா கிளாஸில் அதே பழைய சாராயம். ஆனால் வேறு தட்டில் வைத்துப் பரிமாறுவதற்கு அவர் முயற்சிப்பதாக இருக்கக்கூடும்' என்று வர்ணனையைச் செய்திருந்தார். எத்தனை பேருக்கு இது பிடித்ததோ - இல்லையோ உண்மையில் சுவாரஸ்யமான வர்ணனை என்பதிற் சந்தேகமில்லை.



செல்லத்துரை ஸ்ரீராம்
கரவெட்டி கிழக்கு.

### செய்திச்சரத்தின் சிறப்பு

செய்திச்சரத்தில் வெளியாகின்ற செய்திகளின் ஊடாகக் கூட ஒரு கருத்து இழையை ஓடவைக்கும் சமகாலம் ஆசிரியர் குழுவின் சிறப்பான பணியை பாராட்டுகிறோம். பணி மேலும் சிறக்க எமது ஒத்துழைப்புகள்.

நிஷாந்தன் சண்முகநாதன்
வெள்ளவத்தை

விளம்பரங்களுக்கு : தொலைபேசி: 011-7767702, 011-7767703, 011-7322736

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## குமார் டேவிட்டுக்கு ஏன் தடுமாற்றம்?

குமார் டேவிட் ஆழமான ஒரு அரசியல் ஆய்வாளர். ஆனால், அவரது பல கட்டுரைகளில் சோபித தேரோ வைப் பற்றி நம்பிக்கையூட்டும் வகையிலான கருத்து களை அடிக்கடி காணக்கூடியதாக இருக்கிறது. ஒரு இடது சாரி சிந்தனையாளரான குமார் டேவிட் இத்தகைய தடுமாற்றத்துக்கு உள்ளாவது ஏன்?

வாமதேவன் பரிமளா, கினிகத்தேனை.

## மார்க்ஸின் கருத்துகள்



தமிழகப் பேராசிரியர் அ.மார்க்ஸ் இலங்கையில் இராணுவ மயமாக்கலின் பரிமாணங்கள் என்ற தலைப்பில் கடந்த இரு சமகாலம் இதழில் எழுதிய கட்டுரைகள் கனதியானவை. இலங்கையில் இருக் கின்ற அரசியல் அவதானிகள், ஆய்வாளர்கள் செய்யாத அளவுக்கு ஆய்ந்தறிந்து பெருவாரியான தகவல்களுடனும் பகுத்தாய்வுத் தன்மையுடனும் வெளிவந்த இக்கட்டுரைகளை ஆங்கிலத்திலும் வெளிவரச் செய்து பரந்தளவிலான மக்களை அவ ரின் அந்தக் கருத்துகள் சென்றடைய உதவினால் பயனுறுதியுடைய பணியாக அமையும்.

உ.தபேந்திரன், கரணவாய்.



## பேராசிரியர் நுஃமானுக்கு...

பேராசிரியர் சுச்சரித்த கம்லத்தின் மறைவைப் பற்றிய பேராசிரியர் எம்.ஏ.நுஃமானின் குறிப்பை கடந்த சமகாலம் இதழில் வாசிக்கக் கூடியதாக இருந் தது. பெரும்பான்மையினத்தவர்கள் மத்தியில் இருந் திருக்கக்கூடிய இடதுசாரிப் புலமையாளர்களில் முக்கியமானவர் என்று தானே மெச்சும் அந்த மனித ரைப் பற்றி நுஃமான் அவர்கள் மிகவும் விரிவான ஒரு கட்டுரையை சமகாலம் மூலம் தந்தால் என்ன?

எம்.ஏ.முஹம்மத், திக்குவெல்லை.




இருவாரங்களுக்கு ஒருமுறை

ISSN : 2279 - 2031

மலர் 01 இதழ் 21
2013, மே 01 - 15


A Fortnigtly Tamil News Magazine

**எக்ஸ்பிரஸ் நியூஸ் பேப்பர்ஸ் (சிலோன்) (பிரைவேட்) லிமிடெட்**
185, கிராண்ட்பாஸ் ரோட்,
கொழும்பு-14,
இலங்கை.
**தொலைபேசி : +94 11 7322700**
ஈ-மெயில்: samakalam@expressnewspapers.lk

**ஆசிரியர்**
வீரகத்தி தனபாலசிங்கம்
(e-mail : suabith@gmail.com)

**உதவி ஆசிரியர்**
தெட்சணாமூர்த்தி மதுசூதனன்

**ஒப்பு நோக்கல்**
என்.லெப்ரின் ராஜ்



நேர்மையான மனிதன் எப்போதுமே
குழந்தையாக இருக்கிறான்
- சோக்ரடீஸ்

பொது நூலகம்
யாழ்ப்பாணம்.

வாசகர் கடிதங்களை அனுப்ப
வேண்டிய முகவரி:
ஆசிரியர்,
**சமகாலம்**
185, கிராண்ட்பாஸ் ரோட்,
கொழும்பு -14.
இலங்கை.
மின்னஞ்சல் : samakalam@expressnewspapers.lk



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாக்குமூலம்....



ஒரு மாணவனாக, இளைஞனாக, தொழிற்சங்கத் தலைவனாக, ஆளும் கட்சியினதும் எதிர்க்கட்சியினதும் பாராளுமன்ற உறுப்பினராக, தொழில் அமைச்சராக, எதிர்க்கட்சித் தலைவராக, பிரதமராக, இறுதியில் நாட்டின் ஜனாதிபதியாக நான் பல தசாப்தங்களாக மேதினப் பேரணிகளில் கலந்துகொண்டிருக்கிறேன். ஆனால், இன்று திரண்டிருப்பதைப் போன்ற மக்கள் வெள்ளத்தை நான் முன்னர் ஒருபோதுமே மே தினத்தில் கண்டதில்லை.

மேதினப் பேரணியில்
ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ



இந்திராகாந்தி பிரதமராக இருந்த காலகட்டத்தில் ஒரு தடவை தமிழ்நாட்டு மீனவர்களை இலங்கை காப்டன் ஒருவர் தாக்கிய சம்பவம் அவருக்கு பெரும் சீற்றத்தை ஏற்படுத்தியது. இந்திரா காந்தியின் உத்தரவின்பேரில் இந்தியக் கடற்படை அந்த காப்டனைப் பிடித்து மண்டபத்தில் தடுத்து வைத்தது. காப்டனும் அவரைச் சார்ந்தவர்களும் மன்னிப்புக் கேட்டுக் கொண்டதன் பிறகு தான் விடுதலை செய்யப்பட்டார்கள். இந்திராகாந்தியைப் பின்பற்றி மத்திய அரசு தமிழ்நாடு மீனவர்கள் தாக்கப்படுகின்ற சம்பவங்கள் தொடர்பில் நடந்து கொள்ள வேண்டும்.

தி.மு.க.தலைவர் மு.கருணாநிதி



கொழும்பில் உள்ள அமெரிக்கத் தூதுவர் காலிமுகத்திடலில் கடற்கரையைத் துப்புரவு செய்தார். அது நல்லது தான். ஆனால், இராணுவப் பிரசன்னத்தின் மூலமாக கடல் நீரை அமெரிக்கா மாசுபடுத்துவதுதானே பெரிய பிரச்சினை. கடற்கரையைத் துப்புரவு செய்ததுபோன்று, ஆப்கானிஸ்தான், சிரியா, லிபியாவில் செய்த குளறுபடிகளையும் அமெரிக்கா அகற்ற வேண்டும்.

ஜனதாவிமுக்தி பெரமுனை தலைவர்
சோமவன்ச அமரசிங்க



சீனாவில் நாடும் அரசாங்கமும் கம்யூனிஸ்ட் கட்சியின் தலைமைத்துவத்தின் கீழ் இருக்கின்றன. எங்கு சென்றாலும் மாஓ சேதுங்கின் பெரிய படங்களைக் காணக் கூடியதாக இருக்கிறது. இவற்றையெல்லாம் பார்க்கும் போது, கம்யூனிசத்துடன் ஒரு உணர்வுபூர்வமான பிணைப்பு இருக்கிறது என்பதைப் புரிந்துகொள்ள முடிகிறது. ஆனால், சீனா அபிவிருத்தியடைந்திருக்கின்ற விதத்தைப் பார்க்கும் போது அது ஒரு பாரம்பரிய கம்யூனிஸ்ட் நாடாகத் தோன்றவில்லை. எங்கு பார்த்தாலும் வானளாவ உயர்ந்த கட்டிடங்களும் தொழிற்சாலைகளும் தான். இது ஒரு புதியவகையான கம்யூனிஸம் போலத் தோன்றுகிறது.

நேபாள மாவோயிஸ்ட் தலைவர் பிரசண்டா

உருளைக்கிழங்கு, வெங்காயம் கொண்டுவரப்படுகின்ற கொள்கலன்களுக்குள் மறைத்துவைத்து கருத்தடை மாத்திரைகளும் ஊசி மருந்துகளும் நாட்டுக்குள் கடத்தி வரப்படுகின்றன. எந்த இனத்தை மலடாக்குவதற்காக இவையெல்லாம் கொண்டுவரப்படுகின்றன என்பதை நாம் அறிந்தாக வேண்டும். உருளைக்கிழங்கு, வெங்காயம் மற்றும் பேரீச்சம்பழக் கொள்கலன்களின் பின்னணியில் தீவிரவாத அடிப்படைவாதக் குழுக்கள் இருக்கின்றனவா என்பதை நாம் தெரிந்துகொள்ள விரும்புகிறோம்.

ஜாதிக ஹெல உறுமய தேசிய அமைப்பாளர்
நிஷாந்த ஸ்ரீவர்ண சிங்க



மக்களுக்கு நிவாரணம் தருமாறு அரசாங்கத்தை நாம் திரும்பத் திரும்ப வலியுறுத்தி வந்திருக்கிறோம். மீண்டும் அவ்வாறு நாம் செய்யப்போவதில்லை. சாத்தியமானளவு விரைவாக அரசாங்கத்தை நாம் கவிழ்க்கப் போகிறோம். அதனால், மதகுருமார், சிவில் சமூகத்தினர் உட்பட சகல பிரிவினரையும் வீதிகளில் இறங்குமாறு அழைப்பு விடுக்கிறோம்.

மின்கட்டண அதிகரிப்புக்கு அரசாங்க அமைச்சர்கள் கூறுகிற காரணங்களைப் பார்த்தால், போகிற போக்கில் இலங்கையில் முதல் நீர்மின் திட்டத்தை ஆரம்பித்த சேர்.ஜோன் கொத்தலாவலயைக் குற்றஞ்சாட்டுவதற்கும் கூட நீண்ட நாட்கள் செல்லாது. 19 ஆம் நூற்றாண்டில் மின்குமிழைக் கண்டுபிடித்த தோமஸ் அல்வா எடிசன் புலம் பெயர் தமிழர்களுடன் சேர்ந்து தீட்டிய சதித்திட்டமும் மின் கட்டண அதிகரிப்புக்குக் காரணமாக இருக்கும் என்று இவர்கள் கூறினாலும் ஆச்சரியப்பட ஒன்றுமில்லை.

எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

▶▶ செய்தி ஆய்வு ◀◀

# மின்கட்டண அதிகரிப்பும் அரசியல் நாடகங்களும்



முன்னென்றுமில்லாத அளவுக்கு மின்கட்டணங்கள் அதிகரிக்கப்பட்ட சில தினங்களில் கொழும்பில் ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் மேதினப் பேரணியில் உரையாற்றிய ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ மின் பாவனையாளர்களுக்கு நிவாரணம் தரக்கூடிய தென்ற நினைப்பில் சில சலுகைகளை அறிவித்தார். இச்சலுகைகள் எந்தளவுக்கு பாவனையாளர்களுக்கு குறிப்பாக குறைந்த வருமானத்தைக் கொண்ட குடும்பங்களுக்கு நிவாரணத்தைத் தருமென்ற இலட்சணத்தை அவை நடைமுறைக்கு வரத் தொடங்கிய பிறகு மாத்திரமே தெரிந்து கொள்ளக்கூடியதாக இருக்கும்.

ஜனாதிபதி அச்சலுகைகளை அறிவித்த தோரணையைப் பார்த்தால், மின் கட்டணங்களை அதிகரிப்பதற்கு மேற்கொள்ளப்பட்ட தீர்மானத்தில் தனக்குச் சம்பந்தமில்லை என்பது போலவும் மக்களின் வெறுப்பைச் சம்பாதிக்கக்கூடிய தீர்மானத்தை அரசாங்கத்தில் உள்ள வேறுயாரோ எடுத்ததைக் கண்டு பொறுத்துக்கொள்ள முடியாத நிலையில் மே தினப் பேரணியில் சலுகைகளை அறிவித்தது போலவும் அல்லவா இருக்கிறது.

மின் கட்டணங்களை அதிகரிப்பதற்கு அமைச்சரவை முடிவெடித்த கூட்டம் ஜனாதிபதியின் தலைமையில்தானே நடந்திருக்க முடியும். அமைச்சரவைப் பேச்சாளரான தகவல், ஊடகத்துறை அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல, மின்கட்டண அதிகரிப்பு அமைச்சரவையின் கூட்டுத் தீர்மானம் என்று கூறியிருக்கிறார். இதனிடையே கட்டண அதிகரிப்பு யோசனைகள் தான் சக்தி, வலு அமைச்சராக நியமிக்கப்படுவதற்கு முன்னர் முன்னெடுக்கப்பட்டவை என்று தற்போதைய அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி கூறினார். இதனால் ஆத்திரமடைந்த முன்னாள் சக்தி, வலு அமைச்சர் சம்பிக்க ரணவக்க மின் கட்டணங்களை அதிகரிக்கக் கூடாதென்று தான் தொடர்ந்து வலியுறுத்தி வந்ததாக அறிக்கை விடுத்ததைக் காணக்கூடியதாக இருந்தது.

மின் கட்டண அதிகரிப்புக்கு எந்தவொரு அமைச்சரையும் தனிப்பட்ட முறையில் குறைகூற முடியாது. அரசாங்கத்தின் செயற்பாடுகளுக்கு அதன் தலைவர்கள் சகலரும் பொறுப்பேற்றேயாக வேண்டும். தனிப்பட்டவர்களைப் பொறுப்பாக்குவது மக்களின் கவனத்தைத் திசைதிருப்பும் நோக்குடனான ஒரு தந்திரோபாயமே தவிர, வேறு ஒன்றுமில்லை.

இதனிடையே, இதுவிடயத்தில் எதிர்க்கட்சிகளின் செயற்பாடுகள் கோமாளித்தனமானவையாக காணப்படுகின்றன. மின் கட்டண உயர்வைக் கண்டனம் செய்த எதிரணிக்கட்சிகள் உடனடியாக மக்களை அணிதிரட்டி ஜனநாயக ரீதியான போராட்டமெதையும் முன்னெடுப்பதில் அக்கறை காட்டவில்லை. விரைவில் போராட்டங்களை நடத்தப்போவதாக அறிவிப்புகளை மாத்திரமே அக்கட்சிகள் செய்துகொண்டிருந்தன.

மே தினப் பேரணியில் ஜனாதிபதி சலுகைகளை அறிவித்த மறுநாளே, பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியும் ஜனதா விமுக்தி பெரமுனை(ஜே.வி.பி)யும் தங்கள் ஆட்சேபங்களின் விளைவாகவே ஜனாதிபதி அவ்வாறு செய்ய நிர்ப்பந்திக்கப்பட்டதாக தங்கள் மட்டில் பெருமைப்பட்டுக் கொள்கிற விசித்திரத்தையும் காணக்கூடியதாக இருக்கிறது. இதுபோதாதென்று அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சிக்கு எதிராக பாராளுமன்றத்தில் நம்பிக்கையில்லாப் பிரேரணையைக் கொண்டு வருவதற்கு ஐ.தே.க.தீர்மானித்திருக்கிறது. வாழ்க்கைச் செலவு அதிகரிப்பினால் திணறிக் கொண்டிருக்கும் அதிகப்பெரும்பான்மையான மக்கள் அடுத்த நாள் செலவுக்கு என்ன செய்யப் போகிறோம் என்று ஏங்கிக் கொண்டிருக்கும் நிலையில், எதிரணிக்கட்சிகள் வெறுமனே அரசியல் கோமாளி நாடகம் ஆடிக்கொண்டிருக்கின்றன. ■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

▶▶ செய்தி ஆய்வு ◀◀

# ஈராக்கில் செய்ததை சிரியாவில் அமெரிக்காவால் செய்ய முடியுமா?

சிரியாவில் அரசாங்கப் படைகள் இரசாயன ஆயுதங்களைப் பயன்படுத்தியிருப்பதாகக் கூறப்படுவது குறித்து அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா வெளியிட்டிருக்கும் கருத்து பேராபத்தை முன்னுணர்த்துகின்ற ஒன்றாக இருக்கிறது. சிரியாவின் நிகழ்வுப் போக்குகளைப் பெரிதும் மாற்றியமைக்கக்கூடியது என்று அதை அவர் வர்ணித்திருக்கிறார். ஆங்கிலத்தில் அதை அவர் 'Game changer' என்று கூறியிருக்கிறார்.

சிரியாவின் உள்நாட்டுப் போரில் கூடுதலான அளவுக்கு முனைப்புமிக்க இராணுவப் பாத்திரமொன்றை வகிக்க வேண்டுமென்பதில் வாஷிங்டனுக்கு இருக்கின்ற ஆவலின் அறிகுறியாகவே ஒபாமாவின் வர்ணனையை நோக்க வேண்டியிருப்பதாக அவதானிகள் அபிப்பிராயம் தெரிவித்திருக்கிறார்கள். ஜனாதிபதி பஷார் அல்-அசாத்தை அதிகாரத்திலிருந்து தூக்கியெறிவதை நோக்கிய மேற்குலக இராணுவ ஆக்கிரமிப்பொன்றுடன் சம்பந்தப்பட்டதாகவே அமெரிக்கா சிரியாவிலான அதன் பாத்திரத்தை கருதமுடியுமே தவிர வேறு ஒன்றுமாக இருக்க முடியாது.



**சிரியப்படைகள் இரசாயன ஆயுதங்களை பயன்படுத்துவதாக மேற்குலகு முன்வைக்கும் குற்றச்சாட்டுகளின் நோக்கம் என்ன?**

சிரியப் படைகள் இரசாயன ஆயுதங்களைப் பயன்படுத்தியிருப்பதாகக் கூறப்படுவதாக செய்திகள் வெளியானதையடுத்து பல்வேறு மேற்குலகத் தலைநகரங்களில் இருந்து வெளிவருகின்ற "குற்றஞ்சாட்டும் தோரணையிலானதும் போர்விருப்பம் கொண்டதுமான" கருத்துகள் ஒரு தசாப்தகாலத்துக்கு முன்னதாக அமெரிக்கா தலைமையில் ஈராக் மீது மேற்கொள்ளப்பட்ட ஆக்கிரமிப்பின் போதான நிகழ்வுகளை நினைவுக்குக் கொண்டுவருகின்றன. பேரழிவு தரக்கூடிய ஆயுதங்களை ஈராக் வைத்திருப்பதாக குற்றஞ்சாட்டிய அமெரிக்காவும் வட அத்திலாந்திக் ஒப்பந்த நாடுகள் அமைப்பைச் சேர்ந்த (நேட்டோ) நேச நாடுகளும் ஈராக் மீதான தாக்குதலையும் ஆக்கிரமிப்பையும் நியாயப்படுத்துவதற்காக அரைகுறையான சான்றுகளைப் பயன்படுத்தின. இறுதியில் ஈராக்கில் எந்தவொரு பேரழிவு ஆயுதத்தையும் கண்டுபிடிக்கவில்லை என்பது அண்மைக்கால வரலாறு. அதே வரலாறு இப்போது சிரியாவில் திரும்பிவருகிறதா?

சிரியாவில் ஆயுதக் கிளர்ச்சி மூண்டு இரண்டு வருடங்கள் கடந்துவிட்டபோதிலும், அரசாங்கப் படைகளோ, கிளர்ச்சிப்படைகளோ வெற்றியைப் பெற இயலாமல் இருக்கிறது. ஜனாதிபதி அசாத் கட்டுப்பாட்டை இழக்கும் அறிகுறி எதையும் காட்டுவதாக இல்லை. இந்த நிலைவரம் மேற்குலக நாடுகளுக்கும் அரபுலகின் முக்கிய நாடுகளுக்கும் பெரும் எரிச்சலை ஏற்படுத்தியிருக்கிறது. இந்த நாடுகள் கிளர்ச்சியாளர்களுக்கு வழங்குகிற ஆயுதங்கள் அசாத்தைப் பலவீனப்படுத்தத் தவறிவிட்டன என்பது வெளிப்படையானது. பேராபத்தான ஆயுதங்களைக் கிளர்ச்சியாளர்களுக்கு வழங்கவில்லை என்று அமெரிக்கா கூறிக்கொள்கிறது.

தங்களது இதுகாலவரையான அணுகுமுறைகளும் செயற்பாடுகளும் அசாத்தை பலவீனப்படுத்தத் தவறியதைக் கண்ட மேற்குலக நாடுகள் புதிய மார்க்கங்கள் குறித்து யோசிக்க நிர்ப்பந்திக்கப்பட்டிருக்கின்றன. இதில் இராணுவத் தாக்குதலும் அடங்கும் என்பதில் சந்தேகமில்லை. இத்தகையதொரு பின்னணியிலேயே சாரின் என்ற இரசாயனத்தை சிரிய அரசாங்கப்படைகள் பயன்படுத்தியதாக கிளம்பும் கூச்சல்களை நோக்கவேண்டியிருக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிரியாவை ஆக்கிரமிக்க நேட்டோ களத்தைத் தயார் செய்கிறதா?

ஒபாமா மிகவும் ஜாக்கிரதையாகவே இதுவிடயத்தில் பேசுவதைக் காணக்கூடியதாக இருக்கிறது. சிரியா இரசாயன ஆயுதத்தைப் பயன்படுத்தியிருக்கிறதென்பதற்குக் கூடுதலான அளவுக்கு தீர்க்கமான சான்றுகள் தேவை என்றே அவர் இதுவரையில் கூறியிருக்கிறார். சிரியாவில் சண்டையில் இறங்குவதற்கு அவர் அவசரப்படவில்லை என்பதை இது உணர்த்துகிறது. ஈராக்கை விடவும் சிரியாவின் நிலைவரம் சிக்கலானது. இன்னொரு சகதிக்குள் வீழ்வதைத் தவிர்ப்பதில் ஒபாமா அக்கறை கொண்டிருக்கிறார் போல் தெரிகிறது. ஈராக்கில் போரில் இறங்குவதை சகலரும் எதிர்த்ததையும் பொருட்படுத்தாமல் நடந்த புஷ்ஷின் வழியில் போவதை ஒபாமா தவிர்க்கிறார் என்பது வெளிப்படையாகத் தெரிகிறது. ஆனால், எவ்வளவு காலத்துக்கு இவ்வாறு அவர் இருப்பார் என்பதைப் பொறுத்திருந்தே பார்க்க வேண்டும்.

சிரிய அரசாங்கம் அதன் மக்களுக்கு எதிராக உண்மையிலேயே இரசாயன ஆயுதங்களைப் பயன்படுத்தியிருந்தால், அது நிச்சயமாக பாரதூரமான விடயம். அதற்கு எதிராக நடவடிக்கை தேவை என்பதில் சந்தேகமில்லை. ஆனால், அந்த நடவடிக்கை ஐக்கிய நாடுகள் சபையினால் மேற்கொள்ளப்பட வேண்டுமேயன்றி, நேட்டோவினால் அல்ல. சிரியாவுக்கு எதிரான நடவடிக்கைக்கான மார்க்கங்கள் குறித்து ஐ.நா.வே விவாதித்து தீர்மானம் எடுக்க வேண்டும்.

நம்பகத்தன்மையானதும் சுயாதீனமானதுமான சர்வதேச அமைப்பொன்றே இரசாயன ஆயுதங்கள் தொடர்பான குற்றச்சாட்டுகளை விசாரிக்க வேண்டும். ஈராக் மீதான ஆக்கிரமிப்புக்கு முன்னரான காலகட்டத்தில் இடம்பெற்ற நிகழ்வுப்போக்குகளை அடிப்படையாகக் கொண்டு நோக்கும்போது சிரியா விவகாரத்தில் அமெரிக்காவினாலோ, பிரிட்டனினாலோ அல்லது நேட்டோவினாலோ நடத்தப்படக்கூடிய எந்தவொரு விசாரணையுமே நம்பகத்தன்மையானவையாக இருக்கப்போவதில்லை. எவராலும் எளிதில் புரிந்து கொள்ள முடியும்.

சிரியாவுக்கு எதிராக ஐ.நா.வின் ஊடாக நடவடிக்கை எடுப்பதென்பது விரக்தி தரக்கூடிய அளவுக்கு தாமதமான ஒன்றாகவே இருக்குமென்பதால், இராணுவ நடவடிக்கையில் இறங்குவதற்கு அவசரம் காட்டு முன்னதாக சர்வதேச ரீதியில் கருத்தொருமிப்பை ஏற்படுத்த முயற்சிகள் துரிதமாக மேற்கொள்ளப்படவேண்டும். போர் எப்போதுமே விரும்பத்தக்கதொரு மார்க்கமில்லை. அதை ஒபாமாவும் நேட்டோ நேச அணிகளும் தவிர்ப்பதே உகந்ததாகும். ■




பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பேராசிரியர் ரஜீவ விஜேசிங்க எம்.பி.

# வெளியுலகுடனான இலங்கையின் உறவுகளில் ஒவ்வாமைகள்

**கடந்த காலத்தில் தவறாகப் போயிருக்கக்கூடியவற்றை நாம் ஆராய்ந்து பார்க்காத காரணத்தாலும் எடுத்த தீர்மானங்களைப் பொறுத்தவரை அடுத்தகட்ட தொடர் நடவடிக்கைகளில் அக்கறைகாட்டாத காரணத்தினாலுமே ஜெனீவாத் தீர்மான விவாதத்தைக் கையாளுவதில் எமக்கு தோல்வி ஏற்பட்டது**

இலங்கை தொடர்பிலான அமெரிக்காவின் அண்மைக்கால நகர்வுகளைப் பற்றியும் அவற்றுக்கு இலங்கை வெளிக்காட்டிய பிரதிபலிப்பு களைப் பற்றியும் பேசும் போது, எனக்கு மிகுந்த அதிர்ச்சி வேதனையைத் தருவது அந்த நகர்வுகளை விளங்கிக் கொள்வதற்கு வெளி யுறவுக் கொள்கையின் கோட்பாடுகளை வகுப்பதற்கு பொறுப்பாக உள்ளவர்கள் தவறியமையேயாகும். உள்நாட்டுப் போரின் இறுதிக்கட்டங்களில் இலங்கைக்கான அமெரிக்கத் தூது வராக இருந்த தற்போதைய உதவி இராஜாங்க அமைச்சர் றொபேர்ட் பிளேக் அண்மையில் மேற்கொண்ட விஜயத்திற்குப் பிறகு அதுவும் குறிப்பாக, ஒப்பீட்டளவில் ஆதரவுப் பாவனைப் பாங்கிலான அணுகுமுறை க்குப் பிறகு, இலங்கைக்கும் அமெரிக்காவுக்கும் இடையிலான உறவுகள் உன்னதமானவையாக இருக்கின்றன என்று இலங்கையின் சிரேஷ்ட வெளியுறவு விவகார அதிகாரி ஒருவர் உறுதிப்பட என்னிடம் கூறினார். பத்திரிகைகளில் வெளியான எதிர்மறையான செய்திகள் மிகைப்படுத்தப்பட்டவை என்றும் அவர் கூறினார்.

அதேபோன்று, இவ்வருடம் ஜெனீவாவில் எங்களுக்கு எதிராக அமெரிக்கத் தீர்மானம் எதுவும் கொண்டுவரப்படமாட்டாது என்று ஜனாதிபதிக்கும் அமெரிக்கர்களுக்கும் நெருக்கமானவர்கள் என்று தங்களை உரிமை கோரிக்கொள்கின்ற பேர்வழிகள் சிலர் என்னிடம் கூறினார்கள். அமெரிக்கர்கள் வேண்டுமென்றே எமக்குத் தவறான எண்ணம் ஏற்படக்கூடியதாக நடந்துகொண்டார்கள் என்பதை இப்போது நினைத்துப்பார்க்கக்கூடியதாக இருக்கிறது. ஆனால், உண்மை அதுதான் என்று நான் நினைக்கவில்லை. எம்மை கண்டனம் செய்வதே அவர்களின் நிகழ்ச்சி நிரலில் உள்ள விடயம் என்பதை பிளேக்கின் அறிவிப்புகளில் இருந்து மாத்திரமல்ல, அவருக்குப் பிறகு கொழும்பில் அமெரிக்காவின் தூதுவர்களாகப் பதவியேற்ற இரு பெண்மணிகளின் கருத்துகளில் இருந்தும் கூட, வெளிப்படையாகத் தெரிந்தது. ஏன் இது விளங்கிக் கொள்ளப்படவில்லை. ஏன் நாம் ஒருவித மெத்தனப்போக்கிற்குள் மூழ்கிக் கிடந்தோம்? எல்லாவற்றுக்கும் மேலாக எங்களுக்கு எதிராக கூட்டணியொன்றை அமெரிக்கா எளிதாகக் கட்டியெழுப்பாதிருப்பதை உறுதிசெய்யக்கூடிய அதேவேளை, முன்வைக்கப்பட்ட (கூடுதலான அளவுக்கு நியாயபூர்வமான) விமர்சனங்களைக் கையாண்டிருக்கக்கூடிய வகையிலான பல காரியங்களை எம்மால் செய்திருக்க முடியும். ஆனால், நாம் எதையுமே செய்யவில்லை. பிறகு அமெரிக்கர்கள் மாத்திரமல்ல, ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் உள்ள பெரும்பான்மையான நாடுகள் குவியலாக எமக்கு எதிராக வந்தபோது அதிர்ச்சியடைந்தோம்.

கடந்த காலத்தில் பிழையாகப் போயிருக்கக்கூடியவற்றை நாம் ஆராய்ந்து பார்க்காத காரணத்தினாலும் மேற்கொண்ட தீர்மானங்களைப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


பொறுத்தவரை அடுத்தகட்ட தொடர் நடவடிக்கைகளில் அக்கறைகாட்டத் தவறிய காரணத்தினாலுமே இந்த விவகாரத்தைக் கையாளுவதில் தோல்வி ஏற்பட்டது. சுருக்கமாகச் சொல்வதானால், அறிவாற்றலிலும் நடைமுறைச் செயற்பாடுகளிலும் நாம் தவறிழைத்துவிட்டோம். இவ்வாறு சொல்வது விசித்திரமானதாகத் தோன்றக்கூடும். ஏனென்றால், பாராளுமன்றத்தில் இருக்கின்றவர்களில் மிகவும் பிரகாசமான அறிவாற்றல் கொண்டவர் எமது வெளியுறவு அமைச்சர் என்றல்லவா கருதப்படுகிறது. ஆனால், அவர் தற்போதைய பதவி நிலையில் தனது அறிவாற்றலைப் பயன்படுத்துவதாக இல்லை என்றே தோன்றுகிறது. அரசியல் ஏணியில் உயர உயரப் போக வேண்டுமென்றால், ஆய்வறிவு ஆற்றல் சகலதையும் மறந்தாக வேண்டுமென்று தீர்மானத்திற்கு அவர் வந்திருக்கக் கூடியது சாத்தியம். அத்துடன், மகிழ்ச்சிதராத ஆலோசனைகள் வேண்டாதவையாக இருக்குமென்று அவர் நினைத்திருக்கக்கூடியதும் சாத்தியம். வெளியுறவு அமைச்சு தற்போது அமைக்கப்பட்டிருக்கிற முறையில்(முன்னர் மேற்கொள்ளப்பட்டிருக்கக்கூடிய தீர்மானங்களைப் பொறுத்தவரை) அடுத்தகட்ட தொடர் நடவடிக்கைகள் சாத்தியமில்லை என்று அவருக்குத் தெரியும் என்பதால் பேசாமல் அமைதியாக இருந்திருக்கக்கூடும் என்பதே கூறக்கூடிய தயவார்ந்த விளக்கமாகும்.

அதன் விளைவாக, அமெரிக்காவின் நகர்வுகளுக்கு நாம் சடுதியானதும் முன்னுக்குப் பின் முரண்பட்டதுமான பிரதிபலிப்புகளை வெளியிட்டோம். அத்தகைய நகர்வுகள் அமெரிக்காவினால் மேற்கொள்ளப்படக் கூடுமென்று முன்கூட்டியே உணர்ந்து அவற்றைத் தடுப்பதற்கான எந்த முயற்சியையும் நாம் எடுக்கவில்லை.

ஜெனீவாவில் இவ்வருடம் படுதோல்வி ஏற்பட்டதற்குப் பிறகுதான் அமெரிக்காவுடனான எமது உறவுகள் எந்தளவுக்கு உன்னதமானவையாக இருக்க வேண்டும் என்று எமக்குக் கூறப்படுகிறது. உறவுகளை மேம்படுத்துவதற்காக அமெரிக்க பொது உறவுகள் நிறுவனமொன்றுக்கு பெருந்தொகைப் பணத்தை இப்போது வாரியிறைத்துக் கொண்டிருக்கிறோம். கடந்த சில வருடங்களாக பல்வேறு அமெரிக்கப் பொது உறவுகள் நிறுவனங்களுக்கு பெருமளவு பணத்தைச் செலுத்திக் கொண்டிருந்தோம் என்பதும் அந்தத் தந்திரோபாயம் முற்றுமுழுதாக தோல்வியடைந்திருக்கிறது என்பதும் மறுக்கப்பட்டுவிட்டது. தற்போதைய பொருளாதார நிலைவரத்தை அடிப்படையாகக் கொண்டு நோக்குகையில், இவ்வகையான பணவிரயம் என்பது நாம் செய்யக்கூடிய ஒன்றல்ல.

முன்னதாக அமெரிக்க நெருக்குவாரங்களைத் துணிச்சலுடன் எதிர்த்து நின்ற எவரையுமே வெளியுறவு அமைச்சில் உள்ள பிரகிருதிகள் கடந்த வருடம் கடுமையாக கண்டனம் செய்ததுடன், (பல்கலைக்கழகத்தில் நான் வாக்குவாதத்தில் ஈடுபடுகிற நண்பர் ஒருவரின் வார்த்தைகளில் சொல்வதானால்) அமெரிக்கர்கள் எம்மை ஏறி மிதிக்க விரும்பிய போது நாம் நிலத்தில் வீழ்ந்து உருண்டு அவர்கள் வசதியாக எம்மை மிதிக்க அனுமதிக்கத் தீர்மானித்தோம். எனவே, தமரா குணநாயகத்தை ஜெனீவாத் தூதுவர் பதவியில் இருந்து வெளியுறவு அமைச்சு நீக்கியது. அதன் மூலமாக அமெரிக்காவின் நகர்வுகளுக்கு எந்தவிதமான எதிர்ப்பையும் கட்டியெழுப்ப இயலாத நிலை உறுதிசெய்யப்பட்டது.

அமெரிக்கர்களுக்குத் தூண்டுதல் அளித்தது எது என்பதைப் பற்றிய ஒரு ஆய்வு நிலைவரத்தை எம்மால் எவ்வளவு எளிதாகக் கையாண்டிருக்கக் கூடியதாக இருந்திருக்கும் என்பதை உணர்த்தும், சீனாவின் மீது நாம் தங்கியிருக்கும் போக்கு அதிகரிப்பதுபோன்று தோன்றுகிற நிலைவரம் அமெரிக்காவின் சினத்துக்கு ஒரு காரணம். இது தொடர்பிலான அவர்களின் சொந்தக் கவலைகளுக்கு மேலதிகமாக, இந்தியா மீது நெருக்குதலைப் பிரயோகிப்பதற்கு இதை அவர்கள் பயன்படுத்தினார்கள். எமக்கு என்றைக்காவது வெளியுறவுக் கொள்கையில் வெற்றிகள் கிடைத்திருந்தால் அவற்றுக்கு அத்தி





**வெளியுறவு அமைச்சர் தற்போதைய பதவி நிலையில் தனது அறிவாற்றலைப் பயன்படுத்துவதாக இல்லை. அரசியல் ஏணியில் உயர உயரப் போக வேண்டும் என்றால் ஆய்வு, அறிவு ஆற்றல் சகலதையும் மறந்தாக வேண்டும் என்ற தீர்மானத்திற்கு அவர் வந்திருக்கிறார் போலும்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாரமாக அமைந்தது இந்தியாவுடனான விசேட உறவுமுறையே என்பதை மிகவும் தெளிவாகக் கூறுவதன் மூலம் வெகு இலகுவாக இதைக் கையாண்டிருக்க முடியும். துரதிர்ஷ்டவசமாக அந்த விசேட உறவுமுறையை நிர்மூலஞ்செய்வதற்கு திட சங்கற்பம் பூண்ட சக்திகள் வெளியுறவு அமைச் சில் இருக்கின்றன. 1980களில் ஜே.ஆர். ஜெயவர்தன வெளியுறவு விவகாரத்தைக் கையாண்ட வழியிலேயே இச்சக்திகள் இப்போது செயற்படுகின்றன. இவர்களைக் கட்டுப்படுத்த அறவே இயலாதவராக அமைச்சர் இருக்கிறார். அதனால், இப்போது இருப்பவர்கள் தீவிரவாதிகளாகவே காணப்படுகிறார்கள். அதாவது அவர்களில் சிலர் அமெரிக்காவுக்குப் பின்னால் நாம் ஓடவேண் டுமென்று விரும்புகிறார்கள். வேறு சிலர் (இவர்கள் வெளியுறவு அமைச்சுக்குள் இல்லையென்றாலும் இன்னமும் வெளியுறவுக் கொள்கையில் தலையீடு செய்கிறார்கள்) நாம் சீனாவுக்குப் பின்னால் ஒளிந்து கொள்ளலாம் என்று நினைக்கிறார்கள். இந்தியாவுடன் நாம் நல்லுறவைப் பேணவேண்டும். அத்துடன் சீனாவுடனும் துடிப்பான ஒத்துழைப்பை முன்னெடுக்க வேண்டும். அதேவேளை, எமது இத்தகைய அணுகுமுறை எவருக்கும் பாதிப்பை ஏற்படுத்தும் நோக்கம் கொண்டதல்ல என்பதையும் தெளிவுபடுத்த வேண்டும். இந்த உண்மை எமது கொள்கை வகுப்பாளர்கள் விளங்கிக் கொள்ளும் ஒன்றாக இல்லை.

இரண்டாவதாக, புலம்பெயர் சமூகத்தை நாம் செயல்முறைக்கொத்த வகையில் நல்லறிவுடன் கையாளவில்லை. அமெரிக்க நிகழ்ச்சி நிரலுக்கு தூண்டுதல் அளிக்கின்ற செல்வாக்குமிக்க பிரிவினராக இந்த புலம்பெயர் சமூகத்தினர் விளங்குகிறார்கள். இதற்கு மறுமொழி அவர்களது குற்றச்சாட்டுகளையோ முறைப்பாடுகளையோ திட்டமிட்ட முறையில் கையாளுவதேயாகும். அதேவேளை, தமிழர்களுக்கு நியாயமான தீர்வொன்று மாத்திரம் கிடைக்க வேண்டுமென்று விரும்புகிற (புலம்பெயர் சமூகத்தவர் மத்தியில் உள்ள) மிதவாதப் பிரிவினரின் மனத்தை வென்றெடுக்க முயற்சிக்க வேண்டும். எவ்வாறெனினும், இதுதொடர்பிலான (கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க) ஆணைக்குழுவின் மிகவும் நியாயமான விதப்புரைகள் முற்றாகவே அலட்சியம் செய்யப்பட்டிருக்கின்றன. (முன்னதாக ஓரங்கட்டப்பட்ட) திருமதி விஜேதிலக தலைவியாக நியமிக்கப்பட்டு நல்லிணக்க ஆணைக்குழு செயற்திட்டம் (LLRC Action plan) அண்மையில் புதுப்பிக்கப்பட்ட போதிலும், முழுமையாக அதிகாரமளிக்கப்பட்ட நல்லிணக்க அமைச்சொன்று ஏற்படுத்தும்வரை, எமக்குத் தேவைப்படுகிற வேகத்துடனும் பயனுறுதியுட னும் எம்மால் செயற்பாட்டில் இறங்க முடியுமென்று நான் நினைக்க வில்லை.

தயான் ஜெயதிலக்க போன்ற அறிவுத் திறனும் கோட்பாட்டுப் பற்றுறுதியும் கொண்டவர்களை ஓரம் கட்டுவதை விடுத்து அவர்களைப் பயன்படுத்தி நல்ல விளைவுகளைப் பெற வேண்டும்



இறுதியாக, எமது மனித உரிமைகள் நிலைவரத்தை நாம் மேம்படுத்த வேண்டியிருக்கிறது. ஏனென்றால், இதுவிடயத்திலான உண்மையான பிறழ்வுகள் இடம்பெறாத தவறுகளைப் பற்றிய குற்றச்சாட்டுகளுக்கு நம்பகத்தன்மையைக் கொடுக்கின்றன. போரைப் பொறுத்தவரை, எமது இந்திய நண்பர்கள் தெளிவாகக் கூறியிருக்கிறார்கள். எமக்கு எதிரான தீர்மானத்துக்கு அவர்கள் ஆதரவளித்த போதிலும் கூட, போர்க்குற்றங்கள் எனப்படுபவை ஒப்புக்கொள்ளத்தகாதவை என்பது அவர்களின் நிலைப்பாடாக இருப்பதைக் காணக்கூடியதாக இருக்கிறது. நம்பகத்தன்மையானவை என்று நல்லிணக்க ஆணைக்குழு கருதிய குற்றச்சாட்டுகள் தொடர்பில் விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று மாத்திரமே அவர்கள் எம்மிடம் எதிர்பார்க்கிறார்கள். ஏழு வருடங்களுக்கு முன்னர் திருகோணமலையில் இடம்பெற்ற கொலைகள் போன்ற சில சம்பவங்கள் தொடர்பில் நடவடிக்கைகளை எடுத்து. திட்டமிட்ட கொடூரக் கொலைகள் ஏற்புடையவையல்ல என்பதை எமது சொந்த மக்களுக்கு நாம் தெளிவுபடுத்தக் கடமைப்பட்டிருக்கிறோம்.

ஆனால், தங்களது சொந்தப் பாதுகாப்பு என்று வரும்போது அமெரிக்கர்கள் நினைப்பதைப் போன்று - எதுவுமே ஏற்புடையதுதான் என்றும் வெளிப்படையாகத் தெரிந்த எதிரிகளுக்கு எதிரான நடவடிக்கைகளில் இறங்கியமைக்காக தனிப்பட்டவர்கள் மீது குற்றச்சாட் டுகளை சுமத்தி அவர்களை விசாரிக்கக்கூடாது என்றும் நினைக்கும் பேர்வழிகள் எம்மத்தியில் இன்னமும்

(34ஆம் பக்கம் பார்க்க...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குறுக்கு வழிகள்

**இலங்கையில் இனங்கள், மதங்களுக்கிடையிலான தற்போதைய பதற்ற நிலைக்கு பொதுபல சேனாவைச் சேர்ந்த பிக்குமாரே பொறுப்பாக இருக்கிறார்கள். முஸ்லிம்களுக்கு எதிரான முட்டாள்தனமான கருத்து களை எல்லாம் இவர்கள் மாத்திரம்தான் பிதற்றுகிறார் கள் என்று இல்லை. சிங்கள அரசியல்- இராணுவ பொதுவோட்டத்தில் உள்ள பலரும் இத்தகைய கருத்துகளைக் கொண்டிருக்கிறார்கள்**



தாரிக் அலி




உள்நாட்டு அரசியல்

இலங்கை இராணுவத்தினரால் ஆயிரக்கணக்கில் தமிழர்கள் கொல்லப்பட்ட நிலையில், உள்நாட் டுப் போர் முடிவுக்குக் கொண்டுவரப் பட்டு நான்கு வருடங்களுக்குப் பிறகு மீண்டும் அந்தத் தீவில் பிரச் சினை மூண்டிருக்கிறது. இத்தடவை இராணுவம் நேரடியாகப் பொறுப் பாக இருக்கவில்லை; பதிலாக, சிங் களவர்கள் மத்தியில் தோன்றியிரு க்கும் அடிப்படைவாதக் குழுக்களில் மிகவும் தீவிரத் தன்மை கொண்ட தான பொதுபலசேனாவைச் சேர்ந்த பௌத்த பிக்குமாரே பொறுப்பாக இருக்கிறார்கள்.

இலங்கையர்களில் நான்கில் மூன்று பங்கினர் சிங்களவர்கள். அவர்களில் அதிகப் பெரும்பான்மையானவர்கள் பௌத்தர்கள். இத்தடவை பிக்குகள் சிறிய முஸ்லிம் சிறுபான்மையினத் தவர்களை குறிவைக்கிறார்கள். முஸ லிம்களின் இறைச்சி வெட்டும் களங் கள் முற்றுகையிடப்படுகின்றன; ஹலால் முறையில் கால்நடைகளை வெட்டுபவர்கள் தாக்கப்படுகிறார் கள். வீடுகள் தாக்கப்படுகின்றன. பொலிஸார் வெறுமனே கைகட்டிப் பார்த்துக்கொண்டு நிற்கிறார்கள். இல ங்கை தொலைக்காட்சி படப்பிடிப் பாளர்கள் வன்செயல்களை அமைதி யாக ஒளிப்பதிவு செய்து கொள்கிறார் கள். சில வாரங்களுக்கு முன்னர் பௌத்த பிக்குகள் சில குண்டர்களை ஏவிவிட்டு முஸ்லிமுக்குச் சொந்த மான காட்சியறையைத் தாக்கச் செய் தார்கள். அந்தக் காட்சி அறையின் ஊழியர்களில் ஒருவர் சிங்கள யுவதி யொருவருடன் ஓடிப்போய்விட்டார். அதை அந்த யுவதியின் தந்தை உள் ளூர் பிக்கு ஒருவரிடம் முறையிட் டார். இளைஞர் குழுவொன்று பின்தொடர பிக்கு ஒருவர் விகாரை யொன்றில் இருந்து வெளியே வந் ததை நேரில் கண்டவர்களை மேற் கோள் காட்டி 'சண்டேலீடர்' பத்தி ரிகை செய்தி வெளியிட்டிருந்தது. இக்குழுவினர் வசம் கற்கள், பொல்லு கள் இருந்தன. அவர்களிடம் மண்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ணெண்ணெய்க் கலங்கள் இருந்ததை மக்கள் பிறகு கண்டுபிடித்தார்கள்.

முஸ்லிம்கள் இலக்கு வைக்கப்படுவதற்கு பின்னணியில் உள்ள 'நியாயப்பாட்டை' பொதுபலசேனாவின் ஆதரவாளர் ஒருவர் தனது வலைப்பதிவில் பின்வருமாறு குறிப்பிட்டிருக்கிறார்.

'முஸ்லிம்கள் இந்த நாட்டில் 7 ஆம் நூற்றாண்டு முதல் வாழ்ந்து வருகிறார்கள். இப்போது மாத்திரம்தான் அவர்களுக்கு இலங்கையில் ஹலால் உணவு தேவைப்படுகிறது. சனத்தொகையில் முஸ்லிம்கள் 5 சதவீதத்தினர் மாத்திரமே. ஹலாலை நாம் அனுமதித்தால், அடுத்த தடவை அவர்கள் எம்மீது கத்னா (சுன்னத்)வை அறிமுகம் செய்ய முயற்சிப்பார்கள். அது ஒரு வழக்கமாக மாறுவதற்கு முன்னர் நாம் முளையிலேயே கிள்ளியெறிய வேண்டியிருக்கிறது. இலங்கையில் முஸ்லிம்களும் கிறிஸ்தவர்களும் எதையுமே கட்டுப்பாட்டில் கொண்டிருக்க ஒருபோதும் நாம் அனுமதிக்கக்கூடாது.... ஹிஜாப், புர்கா, நிகாப் ஆகியவற்றை இலங்கையில் தடைசெய்ய வேண்டும். சட்டமும் சட்டவாக்கசபையும் எப்போதும் சிங்கள பௌத்தர்களினதும் எமது தேசியவாத தேசபக்த ஜனாதிபதியினதும் கட்டுப்பாட்டின் கீழேயே இருக்க வேண்டும். எல்லாவற்றுக்கும் மேலாக, இலங்கை புத்தபெருமானிடமிருந்து சிங்களவர்களுக்குக் கிடைக்கப்பெற்ற ஒரு கொடையாகும்.'

ஒரு பௌத்தரினால் கத்னாவை எவ்வாறு 'முளையிலேயே கிள்ளியெறிய' முடியும் என்று கற்பனை செய்து பார்ப்பது கஷ்டமானதாக இருக்கிறது. 9.7 சதவீதமாக இருந்த முஸ்லிம்களின் சனத்தொகை எவ்வாறு இன்று 5 சதவீதமாக வீழ்ச்சி கண்டிருக்க முடியும்? சிங்கள பௌத்தர்களினாலும் தமிழர்களினாலும் பல தசாப்தங்களாக தங்குதடையின்றி மேற்கொள்ளப்பட்ட கொடுமைகளே இந்த வீழ்ச்சிக்குக் காரணம் என்பதில் சந்தேகமில்லை.

முட்டாள்தனங்களையெல்லாம் வெறுமனே பொதுபலசேனாவின் உறுப்பினர்கள் மாத்திரம்தான் பிதற்றுகிறார்கள் என்று இல்லை. சிங்கள அரசியல் - இராணுவ பொதுவோட்டத்தில் உள்ள பலரும் இத்தகைய கருத்துகளைக் கொண்டிருக்கிறார்கள். முஸ்லிம்கள் பெரும்பான்மையாக இருக்கும் பொத்துவில் நகரில் உள்ளூர் பிக்குகள் புத்தர் சிலைகளை நிர்மாணிப்பதற்கு படையினர் உதவிக் கொண்டிருக்கிறார்கள். காலையிலும் மாலையிலும் பௌத்த பாசுரங்களை பெரும் ஓசையுடன் ஒலிபெருக்குவதற்கு அனுமதிக்கப்படுகிறது. சொந்த நிலங்களைவிட்டு உள்ளூர் பெண்கள் விரட்டியடிக்கப்பட்டிருக்கிறார்கள். பௌத்த மடாலயங்கள் அந்த நிலங்களை அபகரிக்கின்றன. இதற்கு இராணுவம் அனுசரணையாக இருந்து பாதுகாப்பு வழங்குகிறது.

இலங்கை புத்தபெருமானிடமிருந்து சிங்களவருக்கு மாத்திரம் கிடைக்கப்பெற்ற ஒரு கொடையல்ல. புராதன கட்டிடக்கலை தொடர்பான கண்டுபிடிப்புகள் தமிழ் உருவங்களையும் பௌத்த உருவங்களையும் கொண்டிருக்கின்றன. வட இலங்கைக்கு நெருக்கமாக தென்னிந்தியா இருப்பதை அடிப்படையாகக் கொண்டு நோக்கும் போது இதில் ஆச்சரியப்படுவதற்கு எதுவுமில்லை என்று கூறினால் பௌத்த கடும் போக்காளர்கள் வெறுப்படைகிறார்கள். யார் முதலில் வந்தார்கள் என்பது காலனித்துவ காலகட்டம் பூராகவும் ஒரு பெரிய எரியும் பிரச்சினையாக விளங்கியது. 1948 ஆம் ஆண்டு பிரிட்டிஷாரிடமிருந்து இலங்கை சுதந்திரம் பெற்றதிலிருந்து தமிழர் பிரச்சினையில் சிங்களவர்கள் மத்தியில் இருக்கின்ற விட்டுக்கொடாப் பண்பின் பின்னாலுள்ள தூண்டுசக்தியாக பௌத்த அடிப்படைவாதமே இருந்து வந்திருக்கிறது. ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவரும் நாட்டின் நான்காவது பிரதமருமான எஸ்.டபிள்யூ.ஆர்.டி.பண்டாரநாயக்கா 1959ஆம் ஆண்டு பௌத்த பிக்கு ஒருவரினாலேயே சுட்டுக் கொல்லப்பட்டார். தமிழர்களுக்கு அளவுக்குக் கூடுதலான சலுகைகளை (உண்மையில் மிகவும் சொற்பமான சலுகைகளே) அவர் வழங்கியதாகக் கூறப்பட்டது. அதற்குப்பிறகு அரசியல்வாதிகள் பிக்குகளின் தப்பெண்ணங்களுக்கு வடிகால் தேடிக்கொடுக்கும் போக்கைக் கடைப்பிடிக்க ஆரம்பித்தார்கள். இதன் வழியாக தமிழர்களுக்கு எதிரான பாகுபாடுகள் நிறுவன மயப்படுத்தப்பட்டன. தங்களை விடுவித்துக்கொள்வதற்கு ஆயுதப் போராட்டமே ஒரே வழியென்று தமிழ் இளைஞர்கள் நம்பத் தொடங்கினார்கள். வங்காள முஸ்லிம்கள் மேற்கு பாகிஸ்தானில் உள்ள தங்களது சகோதரர்களிடமிருந்து பிரிந்து பங்களாதேஷை தோற்றுவிக்க முடியுமென்றால், ஏன் இலங்கையில் தமிழர்களினால் அவ்வாறு செய்ய முடியாது?

தமிழர்களுக்கு சுயாட்சியை நிராகரித்த சிங்களவர்கள் உள்நாட்டுப் போருக்கு முகங்கொடுக்க வேண்டியேற்பட்டது. 1976ஆம் ஆண்டு தமிழ்த் தீவிரவாதிகள் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தை அமைத்துக்கொண்டு தனித் தமிழ் ஈழம் என்ற சுதந்திர தாயகத்தைக் கோரினார்கள். போராட்டத்துக்கு நிதியைத் திரட்ட தமிழ் இளைஞர்கள் வங்கிகளைக் கொள்ளையடித்தார்கள். பொலிஸ் நிலையங்களைத் தாக்கினார்கள். அரசாங்க அதிகாரிகளைச் சுட்டுக் கொலை செய்தார்கள். அரச அடக்குமுறை தீவிரமடையவே தமிழ்த் தலைவர்கள் கிளர்ச்சியாளர்களை நியாயப்படுத்திப் பாதுகாப்பளித்தார்கள். அதை அவர்கள் பெருமையாக நினைத்தார்கள்.

விடுதலைப் புலிகளின் வீழ்ச்சி அவர்களைப் போன்ற வேறு இயக்கங்களுக்கு உலகின் வேறுபகுதிகளில் நேர்ந்த கதியைப் பிரதிபலித்தது. இராணுவங்களை போன்றே விடுதலைப் புலிகளும் எதிர்ப்பை அல்லது மாற்றுக்கருத்துகளைப் பொறுத்துக் கொள்ளாத தளபதிகளினால் தலைமைதாங்கி வழிநடத்தப்பட்டார்கள். மனவெழுச்சியைத் தூண்டுகிற பரபரப்பான பயங்கரவாதச் செயல்கள் அரசியல் தந்திரோபாயத்தைப் பதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீடு செய்தன. இதன் விளைவாக போராட்டத்தில் நேச அணிகளாக வரக்கூடிய சக்திகளுடனும் முரண்பட வேண்டியேற்பட்டது. அச்சக்திகள் விரக்தியடைந்தன. பிறகு அது தமிழ்க்குழுக்களுக்கிடையிலான மோதலாக மாறியது. கொழும்பில் உள்ள சிங்கள அரசியல் வாதிகள் இந்த மோதல்களை மிகுந்த மகிழ்ச்சியுடன் பார்த்துக்கொண்டிருந்ததுடன், தங்களுக்கு வசதியான தருணத்திற்காக காத்திருந்து பாரியளவில் அடக்கு முறையைக் கட்டவிழ்த்து விட்டனர். இந்த நடவடிக்கைகளில் பெரும் எண்ணிக்கையில் ஆண்கள், பெண்கள், சிறுவர்கள் என்று பெரும் எண்ணிக்கையில் தமிழர்கள் கொல்லப்பட்டனர். இவர்களில் பலர் விடுதலைப்புலிகளுடன் எந்தத் தொடர்பு மற்றவர்கள். சிங்களப் பேரினவாதமும் இலங்கைத் தீவின் அரசியல் மீதான அதன் கட்டுப்பாடுமே இந்தக் கொடூரங்கள் சகலவற்றுக்கும் பொறுப்பாகும். ஆனால், விடுதலைப் புலிகளையும் அவர்கள் தங்கள் சொந்த மக்களுக்கு எதிராக மேற்கொண்ட குற்றச்செயல்களுக்காக ஒருபோதும் மன்னிக்க முடியாது. தற்கொலைக் குண்டுத்தாக்குதல்களுக்கு ஆசியாவில் விடுதலைப்புலிகளே முன்னோடியாயமைந்தார்கள். அத்தகைய தாக்குதல் தந்திரோபாயங்கள் அந்த இயக்கத்தின் உயர் தலைவர், உறுப்பினர்கள் மீது கொண்டிருந்த கட்டுப்பாட்டை அடிக்கோடிட்டுக் காட்டின. ஒவ்வொரு கெரில்லாப் போராளியும் கழுத்தில் தொங்கவிட்டுக்கொண்டிருந்த சயனைட் வில்லைகள் தன்னழிவுக்கான ஊக்கிகளாக விளங்கின.

தற்போதைய அரசாங்கம் தமிழர்களின் குடியியல் உரிமைகளை நசுக்குவதற்கு பயங்கரவாதத் தடைச் சட்டத்தைத் தொடர்ந்தும் பயன்படுத்திக் கொண்டிருக்கிறது. தமிழ்ப்பிரதேசங்களில் இராணுவம் இன்னமும் தொடர்ந்தும் பரவலாக நிலை கொண்டிருக்கிறது, பத்திரிகைச் சுதந்திரம் தொடர்ந்தும் அச்சுறுத்தலுக்குள்ளாகிக் கொண்டிருக்கிறது.

கடந்த ஜனவரியில் நீதியரசர் திருமதி ஷிராணி பண்டாரநாயக்க ஊழல் குற்றச்சாட்டுகள் என்று கூறப்படுகின்றவற்றின் அடிப்படையில் குற்றப் பிரேரணை விசாரணைக்குப் பிறகு பதவி நீக்கம் செய்யப்பட்டார். ஆனால், உண்மையில் ஜனாதிபதியின் விருப்பத்திற்கு மாறான தீர்ப்புகளை பிரதம நீதியரசர் துணிச்சலுடன் வழங்கியதே பதவி நீக்கத்துக்கான அடிப்படைக் காரணமாகும்.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ பாதுகாப்பு, நகர அபிவிருத்தி, நிதி, துறைமுகங்கள் மற்றும் நெடுஞ்சாலைகள் என்று முக்கியமான அமைச்சுப் பொறுப்புகளைத் தன்வசமே வைத்திருக்கிறார். இதனால் குவிக்கப்படக் கூடிய தரகுப் பணத்தின் தொகையை கற்பனை செய்து பாருங்கள். ஜனாதிபதியின் இளைய சகோதரர் பசில் ராஜபக்ஷ பொருளாதார அபிவிருத்தி அமைச்சர். மூத்த சகோதரர் ஷமால் ராஜபக்ஷ பாராளுமன்ற சபாநாயகர். பெறாமகன் ஷசீந்திர ராஜபக்ஷ ஊவா மாகாண முதலமைச்சர். ஒன்றுவிட்ட சகோதரர் ஜாலிய விக்கிரம சூரிய வாஷிங்டனில் இலங்கையின் தூதுவர். இன்னொரு ஒன்றுவிட்ட சகோதரர் உதயங்க வீரதுங்க மாஸ்கோவில் தூதுவர். 25 வயதான மகன் நாமல் அம்பாந்தோட்டை எம்.பி. இந்த அம்பாந்தோட்டையில் நிர்மாணிக்கப்பட்ட பாரிய துறைமுகத்துக்கான நிதியுதவியை சீனா வழங்கியது. பாகிஸ்தானின் அமைச்சினால் திட்டமிடப்பட்டிருக்கும் குவடார் சுதந்திர வர்த்தகத்துறைமுகத்தைப் போன்று சீனாவின் கேந்திர முக்கியத்துவ "முத்துமாலை" (String of pearl) யின் ஒரு அங்கமாக அம்பாந்தோட்டைத் துறைமுகம் அமையும். சீனாவின் பாதுகாப்புத் துறையின் உயர்மட்ட அதிகாரிகள் அண்மையில் யாழ்ப்பாணத்தில் இராணுவத்துடன் நின்று போட்டோ எடுத்துக் கொண்டார்கள். வடக்கில் கரையோரப்பகுதிகளில் சீனாவின் திட்டங்கள் அமையவிருக்கும் இடங்களை அவர்கள் பார்வையிட்டிருக்கிறார்கள்.

தற்போது லண்டனில் வாழும் இலங்கைத் தமிழரான 80 வயதைக் கடந்த அரசியல் அவதானியும் அறிவு ஜீவியும் நாவலாசிரியருமான அ.சிவானந்தன் தமிழர்களுக்காக மாத்திரமல்ல, சிங்கள மக்களுக்காகவும் அச்சங்கொண்டவராகக் காணப்படுகிறார்.

அவர் கூறியது இதுதான்.

**"தோற்கடிக்கப்பட்ட நிலையில் தமிழர்கள் சகலவற்றையும் மீள் பரிசீலனைக்கு உட்படுத்துகிறார்கள். எந்த விமர்சனமும் இல்லாமல் விடுதலைப் புலிகளை கடுமையாக ஆதரித்த புலம்பெயர் தமிழர்களும் தான் இவ்வாறு மீள்சிந்தனை செய்கிறார்கள். அவர்கள் சுதந்திரத்தைப் பற்றி (அதாவது தனிநாட்டைப் பற்றி) இப்போது பேசுவதாக இல்லை. அரசியல் உரிமைகளையும் ஜனநாயகத்தையும் பற்றியுமே அவர்கள் பேசுகிறார்கள். அதற்கு நேரம் கடந்துவிட்டதா? உண்மையிலேயே எனக்குத் தெரியவில்லை. வைதீகத்தனமான பௌத்தர்கள் அல்லாத சிங்களவர்களைக் கண்டனம் செய்து கொண்டு பௌத்த பிக்குகளும் விரைவில் தங்கள் நடவடிக்கைகளைத் தீவிரப் படுத்துவார்கள். ராஜபக்ஷவும் குடும்பத்தினரும் நண்பர்களும் அவர்களை ஆதரிப்பார்களேயானால், அவர்கள் அதிர்ச்சிக்குள்ளாக வேண்டிவரலாம். எங்கும் மக்கள் கிளர்ச்சிமயமாகவே இருக்கப் போகிறது.** ■

***(தாரிக் அலி பிரிட்டிஷ் பாகிஸ்தானிய எழுத்தாளர், பத்திரிகையாளர்)***

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கை மின்சார சபையின் இழப்புகளை தற்காலிக நடவடிக்கைகளினால் ஈடுகட்டிவிட முடியாது. இந்த சிக்கலான பிரச்சினையை எவ்வாறு முடிவுக்கு கொண்டு வருவது என்பதை மாத்திரமல்ல, எங்கிருந்து தொடங்குவது என்பதைப் பற்றிக்கூட தடயம் எதையும் அறியாததாக அரசு இருக்கிறது

# மின்சார அதிர்ச்சி

அண்மைய மின் கட்டண அதிகரிப்பின் விளைவான அதிர்ச்சி ஒரு காலத்தில் இலங்கையின் அரச துறை நிறுவனங்களில் ஒரு அணிகலனாக விளங்கிய மின்சாரசபையின் தற்போதைய நிலைவரத்தை மாத்திரமல்ல, சகலவகையிலுமே ஒரு தேசிய நெருக்கடியாக உருவெடுத்திருக்கும் ஒரு விவகாரத்தைக் கையாளுவதில் அரசாங்கம் இழைத்திருக்கும் பரிதாபகரமான தவறையும் அம்பலப்படுத்தியிருக்கிறது. நேர்மையாகக் கூறுவதென்றால், இலங்கை மின்சார சபையின் நிதி மற்றும் விநியோக நெருக்கடிகள் இந்த அரசாங்கத்தினால் உருவாக்கப்பட்டவையல்ல. ஆனால், குறுகிய கால அடிப்படையிலோ அல்லது நீண்டகால அடிப்படையிலோ ஒரு நம்பகமான தீர்வைத் தர இயலவில்லை என்றாலும் கூட, ஏழு வருடங்களுக்கும் கூடுதலான காலமாக முழுமையான ஆட்சியதிகாரத்தில் இருந்த பிறகு அரசாங்கம் பிரச்சினையை ஓரளவுக்கேனும் விளங்கிக் கொண்டிருக்க வேண்டும். அத்தகைய விளக்கப்பாடு ஏற்பட்டது என்பதற்கான எந்த அறிகுறியையும் காணக்கூடியதாக இல்லை.

மின்கட்டண அதிகரிப்பு இலட்சக் கணக்கான மக்களுக்கு ஏற்படுத்திய பாதிப்பைப் பற்றி சொரணையற்றதாக அரசாங்கம் இருக்கிறது என்பது வெளிப்படையானது. இந்த அதிகரிப்பு உற்பத்திக்கும் ஏற்றுமதித்துறைக்கும் ஏற்படுத்தக்கூடிய பாதிப்புகளின் விளைவாக பொருளாதாரத்திற்கு ஏற்படக்கூடிய தாக்கத்தைப் பற்றி அலட்சிய மனோபாவத்துடன் அரசாங்கம் இருப்பது அதிர்ச்சியையும் ஆச்சரியத்தையும் தருகிறது. பொதுவசதிகள் ஆணைக் குழு மின் கட்டண அதிகரிப்பைச் செய்வதற்கு மின்சார சபையை அனுமதித்து விட்டு இப்போது அதன் நிதிக்கு ஆப்பு வைக்க கடுமையாக முயற்சிக்கும் போலத் தெரிகிறது. மின்சார சபையின் உள்ளக கணக்காய்வு பற்றிய பகிரங்கச் சச்சரவு முக்கியமான அடிப்படைப் பிரச்சினைகளில் இருந்து கவனத்தைத் திசை திருப்பும் நோக்குடனானது என்றே நினைக்க வேண்டியிருக்கிறது.

அண்மையில் இலங்கையின் பத்திரிகைகளின் ஆசிரியர்களையும் ஊடக நிறுவனங்களின் தலைவர்க



**தன்னால் கையாள முடியாத பொறுப்பை ஏற்றிருக்கும் பவித்திரா வன்னியாராச்சி பொது வசதிகள் ஆணைக்குழுவுக்கு மின்சார சபை சமர்ப்பித்த கட்டணஅதிகரிப்பு யோசனைகளுக்கு பொறுப்பேற்க வேண்டியது தனது பொறுப்புகளில் ஒன்று என்பதை தெரியாதவராக இருக்கிறார்**

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

ளையும் அலரிமாளிகைக்கு அழைத்து காலைவிருந்துபசாரம் அளித்து நாட்டு நிலைவரங்கள் குறித்துக் கலந்துரையாடிய ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, மின்கட்டணங்களில் செய்யப்பட்ட அதிகரிப்பு மின்சார சபைக்கு ஏற்பட்ட இழப்புகளை ஈடுகட்டுவதற்கான ஒரு தற்காலிக நடவடிக்கையே என்று கூறியதாக செய்திகள் வெளியாகின. நுரைச்சோலை அனல்மின் உற்பத்தி நிலையத்தின் இரண்டாம், மூன்றாம் கட்டங்கள் இவ்வருடம் டிசம்பர் மாதமளவில் பூர்த்தியாகும் போது மின் கட்டணங்களுடன் சேர்க்கப்பட்டிருக்கும் எரிபொருள் சீராக்கல் (Fuel adjustment Charges) வரிகளை படிப்படியாக நீக்குவது அரசாங்கத்துக்குச் சாத்தியமாகும் என்று அவர் குறிப்பிட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

ஆனால், நிபுணர்களின் அபிப்பிராயமும் விடயமறிந்தவர்களின் விளக்கப்பாடும் நிலைவரத்தை வேறுபட்டதாகவே காட்டுகின்றன. மின்சார சபையின் நிதிப்பிரச்சினைகள் கட்டமைப்புச் சார்ந்தவை. சபையின் இழப்புகளை தற்காலிக நடவடிக்கைகளினால் ஈடுகட்டிவிடவும் முடியாது. எரிபொருள் மிகை வரிகள் (Fuel Surcharges) 1970களிலும் 1980களிலும் அறிமுகப்படுத்தப்பட்டவை. அவை மின் கட்டணத்தை நிர்ணயிக்கும் செயன்முறைகளில் நிரந்தரமான ஒரு காரணியாகிவிட்டன. (இதை கலாநிதி திலக் சியாம்பலப்பிட்டிய நினைவுபடுத்தியிருக்கிறார்) எனவே, அவற்றை 'தற்காலிக நடவடிக்கை' என்று வர்ணிப்பது மக்களைத் தவறாக வழிநடத்துவதாகும். நுரைச்சோலை மின் உற்பத்தி நிலையத்தைப் பொறுத்தவரை அது அரசாங்கத்தினால் விடுபடமுடியாத இன்னொரு சீன சுமையாகிப் போய்விட்டது என்றுதான் கூற வேண்டும். அது இயங்கத் தொடங்கிய நாளிலிருந்து அதை இயக்குவதற்கும் பராமரிப்பதற்குமான செலவுகள் அரசாங்கத்துக்குப் பெருந்தலையிடியாகிப் போய்விட்டது. நுரைச்சோலை தேசிய மின்சக்தி விநியோகத்துக்கு செலவைக் குறைக்கக் கூடிய ஒரு நற்கொடையாக அமையுமென்று எதிர்பார்க்கப்பட்டது. ஆனால், நிலைமை அவ்வாறில்லை. அந்த மின் உற்பத்தி நிலையத்தின் முதலாவது கட்டத்தை பூர்த்திசெய்யும் பணிகளைத் துரிதப்படுத்தியமை தற்போதைய பிரச்சினைகளுக்கு ஒரு காரணமாகும் என்று இலங்கை மின்சார சபையின் முன்னாள் பிரதித் தலைவரான பொறியியலாளர் டபிள்யூ.டி.ஏ.எஸ். விஜேயபால சுட்டிக்காட்டியிருக்கிறார். அதன் இரண்டாவது கட்டத்



ராஜன் பிலிப்ஸ்

தையும் மூன்றாவது கட்டத்தையும் துரிதப்படுத்துவதில் இருக்கக்கூடிய விவேகத்தை விஜேபால சந்தேகிக்கிறார்.

### அமைச்சர்களுக்கு இடையிலான தகராறு

மின்சாரக் கட்டண அதிகரிப்பு தொடர்பில் எழுந்துள்ள பிரச்சினைகளை ஆராய்வதற்கு விசேட அமைச்சரவை கூட்டமொன்றைக் கூட்டுமாறு வாசுதேவநாணயக்கார விடுத்த கோரிக்கைக்கு ஜனாதிபதி இணங்கவில்லை. மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த விவகாரங்கள் தொடர்பில் தனிப்பட்ட முறையில் அமைச்சர்கள் பிரச்சினை கிளப்பியபோது ஒரு சில மாத இடைவெளிக்குள் இரண்டாவது தடவையாக அதை ஆராய்வதற்கு அனுமதி மறுக்கப்பட்டிருக்கிறது. நாணயக்காரவுக்கு முன்னதாக நீதியமைச்சர் ரவூப் ஹக்கீம் விடுத்த வேண்டுகோள் ஒன்று ஜனாதிபதியினால் நிராகரிக்கப்பட்டது. கொழும்புக்கு வெளியே பெப்பிலியான வில் ஃபாஷன் பக் நிறுவனத்தின் மீது மேற்கொள்ளப்பட்ட இன, மதவாத தாக்குதலையடுத்து நிலைவரங்களின் பாரதூரத்தன்மையை ஆராய்வதற்கு விசேட



இளம் பொறியியலாளரான சம்பிக்க ரணவக்கவுக்கு மின்சாரத்தைப்பற்றி நிறையவே அறிவிருந்த போதிலும் கூட சிக்கலான அமைச்சுப் பொறுப்பில் அவரின் சாதனைகளை அவரின் ஆரவாரப்பேச்சுகள் மேவிச்செல்வதற்கு அனுமதித்து விட்டார்

பொதுசன நூலகம் யாழ்ப்பாணம்.

உள்நாட்டு அரசியல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமைச்சரவைக் கூட்டமொன்றைக் கூட்டுமாறு ரவூப் ஹக்கீம் கேட்டிருந்தார். விசேட அமைச்சரவைக் கூட்டத்துக்கு ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுத்த இரு அமைச்சர்களுக்கும் இருபதுக்கும் கூடுதலான வயது வித்தியாசம் இருக்கிறது என்றாலும், இருவருமே கோட்பாடுகள் மற்றும் தார்மீக திரிசங்கு நிலையைப் பற்றியெல்லாம் பொருட்படுத்தாமல் அமைச்சர் பதவிகளைக் காப்பாற்றித் தப்பிப்பிழைத்துக் கொள்ள தங்களை இசைவாக்கிக் கொண்டிருக்கிறார்கள் என்பதைக் காணக் கூடியதாக இருக்கிறது. நாணயக்காரவையோ அல்லது ரவூப் ஹக்கீமையோ அலட்சியப்படுத்துவதில் ஜனாதிபதி எந்த அசௌகரியத்தையும் நோக்கியதாகத் தெரியவில்லை. மின் கட்டண நெருக்கடி குறித்து ஆராய விசேட அமைச்சரவைக் கூட்டமொன்றை கூட்டுவதை ஜனாதிபதி தவிர்த்ததற்கு உண்மையான காரணம் சக்தி, வலு அமைச்சராக தற்போது பதவி வகிப்பவருக்கும் முன்னர் அந்தப்பதவியில் இருந்தவருக்கும் இடையே அருவருக்கத்தக்க மோதல் ஏற்படுமென்பதேயாகும்.

புதிய சக்தி, வலு அமைச்சர் பவித்திரா தேவி வன்னியாராச்சி சில நாட்கள் எந்த தொடர்புமில்லாமல் இருந்துவிட்டு பிறகு பாராளுமன்றத்தில் தோன்றி தனது சொந்தப் பாட்டைப் பாடினார். மின் கட்டண அதிகரிப்பு யோசனைகளுக்கும் தனக்கும் எந்தச் சம்பந்தமும் இல்லை என்று அவர் பிரகடனம் செய்தார். தனக்கு முன்னர் சக்தி, வலு அமைச்சராக இருந்த சம்பிக்க ரணவக்கவின் குழந்தைதான் மின் கட்டண அதிகரிப்பு யோசனைகள் என்றும் அண்மைய அமைச்சரவை மாற்றத்தின் விளைவாகவே அந்தக் குழந்தையை தான் சுமக்க வேண்டியேற்பட்டிருக்கிறது என்றும் பவித்திராதேவி கூறினார். காலஞ்சென்ற கம்யூனிஸ்ட் தலைவர் பீட்டர் கெனமன் ஒரு தடவை அமைச்சரவை மாற்றம் பற்றி சுவாரஸ்யமாகக் கூறும்போது 'ஏஸ் இல்லாமல் வெறும் ஜோக்கர்களே மாத்திரம் இருக்கின்ற சீட்டுக்கட்டை மாற்றியமைப்பதில் எந்த அர்த்தமும் இல்லை' என்றார். பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்கவுக்கு எதிராக குற்றப்பிரேரணை கொண்டுவரப்பட்டு அவர் பதவி நீக்கம் செய்யப்பட்ட மோசடித்தனமான விவகாரத்தில் வகித்த பங்கிற்கு வெகுமதியாகவே பவித்திராவுக்கு முக்கிய அமைச்சுப் பொறுப்பு வழங்கப்பட்டது என்பது எம்மெல்லோருக்கும் தெரியும். தன்னால் கையாள முடியாத பொறுப்பை ஏற்றிருக்கும் பவித்திரா பொதுவசதிகள் ஆணைக்குழுவுக்கு மின்சார சபை சமர்ப்பித்த மின்கட்டண அதிகரிப்பு யோசனைகளுக்கு பொறுப்பேற்க வேண்டியது தனது பொறுப்புகளில் அடங்குகின்றது என்பது தனக்குத் தெரியாது என்று முறையிட முடியாது.

முன்னாள் சக்தி, வலு அமைச்சர் சம்பிக்க ரணவக்கவைப் பொறுத்தவரை, அரசியல் சண்டையொன்றுக்குள் புகுந்துகொள்வதற்கு அவருக்கு விசேடமாக அழைப்பு எதுவும் அனுப்பத் தேவையில்லை. அமைச்சரவைக்குள் மோதுவதற்கு வாய்ப்பு இல்லாமற் போன நிலையில் அவர் அமைச்சர் பவித்திராவின் கூற்றை மறுதலித்து கடிதமொன்றை பாராளுமன்ற உறுப்பினர்கள் மத்தியில் விநியோகித்தார். மின் கட்டணத்தை அதிகரிக்கும் யோசனையை தான் தொடர்ச்சியாக எதிர்த்துவந்ததாகவும் அந்த யோசனை பெருமளவுக்கு அவதூறுக்குள்ளாகியிருக்கும் நிதியமைச்சின் செயலாளரின் மூளையில் உதித்ததே என்றும் சம்பிக்க அக்கடிதத்தில் தெரிவித்திருந்தார். குறைந்தளவு மின்சக்தியைப் பயன்படுத்துபவர்கள் குறைந்த கட்டணங்களைச் செலுத்த வேண்டுமென்ற முற்போக்கான ஒரு கட்டண முறை மீதான தனது நம்பிக்கையை மீளவும் வலியுறுத்தினார். அத்துடன் ஒரு மின்பொறியியலாளர் என்ற வகையில், மின் கட்டணங்களை அதிகரிப்பதற்கு அரசாங்கம் தெரிவு செய்த தருணம் தனக்கு திகைப்பைத் தந்திருப்பதாகவும் அவர் குறிப்பிட்டிருந்தார். நீர்த்தேக்கங்கள் நிரம்பி வழிகின்றன. எண்ணெய்ச் செலவுடனான அனல் மின்சக்தி மீது தங்கியிருப்பதைக் குறைத்து நீர் மின்சாரத்தை முழு ஆற்றலுடன் உற்பத்தி செய்யக் கூடியதாக இருக்கும் என்று அதற்கு அவர் காரண விளக்கமும் கூறியிருக்கிறார்.

சம்பிக்க ரணவக்க அரசியலில் குறிப்பிடத்தக்க ஒரு ஆள். இளம் பொறியியலாளரான அவரிடம் நிறையவே அரசியல் விறுவிறுப்புத்தனங்களும் தொடர்பாடல் ஆற்றல்களும் உறைந்து கிடக்கின்றன. சகல தரப்பினரையும் அரவணைத்துச் செல்லக் கூடிய அரசியல் அணுகுமுறைகளைக் கடைப்பிடித்திருந்தால் அவரால் தனக்கும் நாட்டுக்கும் நல்ல பல காரியங்களைச் செய்திருக்க முடியும். துரதிர்ஷ்டவசமாக, 1980களின் பிற்பகுதியில் ஜனதா விமுக்தி பெரமுனையின் (ஜே.வி.பி) இரண்டாவது கிளர்ச்சி இடம்பெற்ற கொந்தளிப்பான வருடங்களில் முதலில் கிளர்ச்சியாளர்களின் இந்திய விரோதக்

> மின் உற்பத்தியும் கட்டண நிர்ணயமும் மின்சார சபையின் நெருக்கடி என்ற நாணயத்தின் இரு பக்கங்களாகும். மின்சாரத்தை அனுப்புவதிலும் விநியோகிப்பதிலும் உள்ள செலவுகள் ஓரளவு கட்டுப்படுத்தப்படக் கூடியவையாக இருக்கிற அதேவேளை, மின் உற்பத்திச்செலவை மின்சாரத்தின் ஒவ்வொரு அலகின் அங்கீகரிக்கப்பட்ட விலையையும் விட குறைவானதாக வைத்திருப்பதற்கு மல்லுக்கட்டுவது சாத்தியமில்லாததாக இருக்கிறது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொள்கையின் பக்கமாகச் சாய்ந்து சென்ற அவர் பிறகு இன-மத ரீதியான அரசியலில் நாட்டம் கொண்டு ஜாதிக ஹெல உறுமயவின் அடிப் படைவாதச் சேற்றுக்குள் காலை வைத்தார்.

சக்தி, வலு அமைச்சர் என்ற வகையில் சம்பிக்க ரணவக்கவுக்கு மின்சாரத்தைப் பற்றிய நிறைய அறிவு இருந்த போதிலும் கூட, சிக்கலான இந்த அமைச்சுப்பொறுப்பில் அவரது சாதனைகளை அவரது ஆரவாரப் பேச்சுகள் மேவிச் செல்வதற்கு அனுமதித்து விட்டார் என்று தான் கூறவேண்டியிருக்கிறது. 2010 ஆம் ஆண்டு வியன்னாவில் நடைபெற்ற மகாநாடொன்றில் இலங்கை மின்சார சபைக்கான தனது நோக்கை அவர் முன் வைத்தார். விரயத்தை ஒழிப்பதன் மூலமாகவும் இயக்குதிறனை அதிகரிப்பதன் மூலமாகவும் உற்பத்திச் செலவைக் குறைத்து மேலதிக வருவாயைக் கொண்டுவருவதன் மூலமாகவும் (பொருளாதாரத்துக்கு ஒரு சுமையாக இல்லாமல்) தேசிய அபிவிருத்திக்கு மின்சார சபை பங்களிப்புச் செய்ய வேண்டும் என்பதே அவரது அந்த நோக்கமாகும். அமைச்சரவை மாற்றத்துக்குப் பிறகு சம்பிக்க ரணவக்க தனது இணையத்தளத்தில் வெளியிட்ட செய்தியில் பணி பூர்த்தி செய்யப்பட்டது என்றே குறிப்பிட்டிருந்தார். சக்தி, வலு அமைச்சர் என்ற வகையில் இலங்கை மின்சார சபையிலும் அதனுடன் தொடர்புடைய நிறுவனங்களிலும் ஊழலையும் தவறான முகாமைத்துவத்தையும் கட்டுப்படுத்திய கவனத்தை ஈர்க்கும் செயற்பாடுகளுக்குப் பிறகு பாட்டலி சம்பிக்க ரணவக்க ஜனவரி 31 ஆம் திகதி தொழில்நுட்ப ஆராய்ச்சி, அணுசக்தி அமைச்சராகப் கடமைப் பொறுப்புகளை ஏற்றுக்கொண்டார் என்று இணையத்தளத்தில் தெரிவிக்கப்பட்டது. எல்லாவற்றுக்கும் மூலமாக, 2011 ஜூன் 11 ஆம் திகதி அவர் அளித்த சொற்பகடான வாக்குறுதி 2013 மார்ச்சில் ஒரு இணையத்தளச் செய்தியில் மேற்கோள்காட்டப்பட்டிருந்தது. 'இலங்கை மின்சாரசபையில் எந்த நிதி நெருக்கடியுமே இல்லை என்பதை மகிழ்ச்சியுடன் கூறிக் கொள்ள விரும்புகிறேன். எமது திட்டங்களின்படி நிருமாணிக்கப்பட விருக்கும் மின் உற்பத்தி நிலையங்கள் 2020 ஆம் ஆண்டளவில் இந்த நாட்டில் மக்கள் இருளின்றி வாழ முடியுமென்பதை உறுதிப்படுத்தும்' என்பதே அந்த வாக்குறுதியாகும்.

சம்பிக்க ரணவக்கவுக்கும் பவித்திராவுக்கும் இடையேயான சண்டை எந்த வழியில் தீவிரமடைந்தாலும், அதனால், மின் கட்டண அதிகரிப்பினால் பாதிக்கப்பட்டிருக்கும் மக்களின் கஷ்டங்களில் எந்த மாற்றமும் முன்னுணர்ந்து பார்க்கக்கூடிய எதிர்காலத்தில் ஏற்படப்போவதில்லை. ஆனால், இந்தச் சண்டை (சம்பிக்கவின் தொழில்நுட்ப பின்னணியையும் உள்சண்டைகளில் அவரிடம் காணப்படக்கூடியதாக இருக்கின்ற ஆவேசத்தையும் அடிப்படையாகக் கொண்டு நோக்குகையில்) சிக்கலான இந்த அமைச்சுப் பொறுப்பு தொடர்பிலான விவகாரங்களை எவ்வாறு முடிவுக்குக் கொண்டு வருவது என்பதை மாத்திரமல்ல, எங்கிருந்து தொடங்குவது என்பதைப் பற்றிக் கூட தடம் எதையும் அறியாததாக தற்போதைய அரசாங்கம் இருக்கிறது என்பதை வெளிச்சத்துக்குக் கொண்டு வருகிறது.

மின் உற்பத்தியும் கட்டண நிர்ணயமும் இலங்கை மின்சார சபையின் நெருக்கடி என்ற ஒரு நாணயத்தின் இரு பக்கங்களாகும். மின்சாரத்தை அனுப்புவதிலும் விநியோகிப்பதிலும், (Transmission and distribution) உள்ள செலவுகள் ஓரளவு கட்டுப்படுத்தக் கூடியவையாக இருக்கின்ற அதேவேளை, மின் உற்பத்திச் செலவை மின்சாரத்தின் ஒவ்வொரு அலகின் அங்கீகரிக்கப்பட்ட விலையையும் விட குறைவானதாக வைத்திருப்பதற்கு மல்லுக்கட்டுவது சாத்தியமில்லாததாக இருக்கிறது. உற்பத்திச் செலவுக்கும் விலைக்கும் இடையிலான துண்டுவிழும் தொகை வருடாந்தம் பல்கிப்பெருகி, மின்சார சபையின் நிதி நெருக்கடிக்கான அடிப்படைக் காரணமாக விளங்குகிறது.

மின்சாரத்தின் வேறுபட்ட மூலங்களும் (Different sources, of electricity) அவற்றின் உற்பத்திச் செலவுகளும் நெருக்கடியை மேலும் சிக்கலாக்குகின்றன. 1970களில் 100 சதவீதம் நீர்மின்சாரத்தில் தங்கியிருந்த நிலைமை இன்று பெருமளவு மாறி விட்டது. சனத்தொகையும் மின் பாவனையாளர்களின் தொகையும் கடந்த 40 வருடங்களில் இரண்டு மடங்காக



வியாபாரம் சிறக்க
விளம்பரம் தேவை
உங்கள் விளம்பரங்களை
சமகால செய்திகளை சுமந்து வரும்
சமகாலத்தில்
பிரசுரித்திட இன்றே அழையுங்கள்.
மோகன்
0772 546 646


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிகரித்துவிட்டன. நீர் மின்சாரத்தின் வீதம் ஐம்பதுக்கும் குறைவானதாக சுருங்கிவிட்டது. அனல் மின் உற்பத்தி இப்போது 50 சதவீதத்திற்கும் அதிகமானதாக இருக்கிறது. எண்ணெயை அடிப்படையாகக் கொண்ட மின் உற்பத்தியும் அதற்குண்டான உயர்ந்த செலவுகளுமே பெரும் நெருக்குதலைக் கொடுக்கின்றன. நீர் மின்சாரத்தின் பங்களிப்பு நிறுவப்பட்ட ஆற்றல் அளவுக்கும் கீழ் கடுமையாக வீழ்ச்சியடைகிற வரட்சிக் காலங்களில் எண்ணெயை அடிப்படையாகக் கொண்ட மின் உற்பத்தி கூடுதலான அளவில் தேவைப்படும். வரட்சி மற்றும் வெப்ப காலத்தில் மின்விசிறிகளினதும் குளிரூட்டிகளினதும் பயன் பாடு அதிகரிப்பதால் மின்சாரத்திற் கான கோரிக்கையும் அதிகரிக்கிறது. 2011 வரட்சி வருடமாக இருந்தது. அப்போது நீர் மின்சார பங்களிப்பு நிறுவப்பட்ட ஆற்றல் அளவின் சுமார் 50 சதவீதமாக வீழ்ச்சி கண்டது. எண்ணெயை அடிப்படையாகக் கொண்ட மின் உற்பத்தியில் மேலும் கூடுதலான அளவுக்கு தங்கியிருக்க வேண்டியேற்பட்டது.

எண்ணெயில் தங்கியிருப்பதற்கு மாற்றீடு மலிவான நிலக்கரியை அடிப்படையாகக் கொண்ட மின் உற்பத்தியேயாகும். நிலக்கரியைப் பயன்படுத்தி மின்உற்பத்தி செய்யும் முதலாவது அனல் மின் ஆலை நுரைச்சோலையின் முதலாவது கட்டமாகும். நுரைச்சோலையின் இரண்டாவது கட்டத்தையும் மூன்றாவது கட்டத்தையும் பூர்த்தி செய்து, சம்பூரிலும் நிலக்கரியை அடிப்படையாகக் கொண்ட அனல் மின் ஆலையை பூர்த்திசெய்துவிட்டால், மின் உற்பத்தி பல்வகைப்பட்டதாக வந்துவிடும். நீர் மின் உற்பத்தியும் எண்ணெயை அடிப்படையாகக் கொண்ட மின்உற்பத்தியும் நிலக்கரியை அடிப்படையாகக் கொண்ட மின் உற்பத்தியும் முறையே மூன்றில் ஒரு பங்கு பூர்த்தி செய்யும். இந்த மாற்றங்கள் எண்ணெய் மீது பெருமளவுக்கு தங்கியிருப்பதையும் அதற்குண்டான செலவுகளையும் குறைக்கும். மின்சாரத்தின் விலைக்கும் ஒரு அலகிற்கான செலவிற்குமிடையே சில சமநிலைகளைச் சாதிப்பதற்கு இது உதவும் அதேவேளை, எண்ணெயை அடிப்படையாகக் கொண்ட மின் உற்பத்தியாளர்களை முற்றுமுழுதாக ஒழித்துவிடலாம் என்ற மாயை இருத்தலாகாது. நிலைபேறான சக்தி விநியோகத்தை சாதிப்பதற்கு புதுப்பிக்கத்தக்க தோற்றுவாய்களுடன் (Sources) சேர்த்து பாரம்பரியமான சகல மூன்று தோற்றுவாய்களும் அவசியமானவையாகும்.

மின் உற்பத்தித் திட்டங்களை சரியான நேரத்தில் நடைமுறைப்படுத்தப்படுவதில் காட்டப்பட்ட தாமதமே இன்றைய நெருக்கடிக்கான காரணமென்று பொதுவில் கூறப்படுகிறது. சமூக மற்றும் இயற்கைச் சுற்றாடல் பாதிப்புகள் தொடர்பிலான அக்கறைகளை அடிப்படையாகக் கொண்டு இடம்பெற்ற மக்கள் எதிர்ப்பியக்கங்களே நுரைச்சோலைத் திட்டம் தாமதிப்பதற்கான காரணமாகும். ஆனால் மின்உற்பத்தி திட்டங்கள் எங்கு மேற்கொள்ளப்படுகின்றனவோ அப்பகுதிகளிலுள்ள சமூகங்களுக்கு திருப்திகரமான முறையில் நேர்மையுடன் ஒளிவு மறைவின்றி பாதிப்புகளை நிவர்த்திப்பதற்கான நடவடிக்கைகளை எடுப்பதன் மூலம் இத்தகைய தாமதங்களை தவிர்க்கக் கூடியதாக இருக்கும். இப்பொழுதுள்ள கேள்வி நுரைச்சோலையின் முதலாவது கட்டமும் இரண்டாவது கட்டமும் 2013 ஆம் ஆண்டில் பூர்த்தி செய்யப்படுமா? சம்பூர் மின்நிலையம் திட்டமிட்டபடி 2017 இல் பூர்த்தி செய்யப்படுமா? என்பதேயாகும். அவ்வாறு பூர்த்தி செய்யப்படாத பட்சத்தில் மின் உற்பத்தியிலும் மின்சாரத்தின் விலையைத் தீர்மானிப்பதிலும்பாரியநெருக்கடிதோன்றுமென்று இத்துறைசார் நிபுணர்கள் எச்சரிக்கை செய்கிறார்கள். நுரைச்சோலை ஆலை சீனர்களுக்கு கொடுக்கப்பட்ட அதேவேளை, சம்பூர் ஆலை இந்தியர்களுக்கென விட்டுவைக்கப்பட்டிருக்கிறது. ஆனால் அத்திட்டத்தை பொறுப்பேற்பதற்கான நிபந்தனைகள் தொடர்பில் இந்தியா திருப்திப்படும் வரையில் அதை காலவரையறையின்றி விட்டுவைக்க முடியாது என்றும் அதே நிபுணர்கள் எச்சரிக்கை செய்கிறார்கள்.

மின்சாரத்திற்கு விலையைத் நிர்ணயிக்கின்ற விவகாரத்தைப் பொறுத்த வரை காணக்கூடியதாக இருக்கும் நெருக்கடி தற்காலிக அடிப்படையிலான கட்டண அதிகரிப்புகளுக்குப் பதிலாக திட்டமிட்டபடியானதும், தொடர்ச்சியானதும் ஒளிவுமறைவு அற்றதுமான அணுகுமுறையொன்றை வேண்டி நிற்கிறது. வெவ்வேறு வகைப்பட்ட மின்பாவனையாளர்களுக்கான கட்டணங்களை நேர்மையானதும் கட்டுப்படியாகக் கூடியதுமான மட்டங்களில் தீர்மானிக்க வேண்டியது அவசியமானதாகும். பொருளாதாரப் படிநிலைகளில் மிகவும் கீழ்மட்டத்தில் உள் ளவர்கள் மற்றும் தொண்டு நிறுவனங்களைத் தவிர வேறு எவருக்கும் வரி விலக்குகள் இருத்தலாகாது. ஆனால் மின்சாரச் சட்டத்தின் ஏற்பாடு ஒன்றின் கீழ் பதின்நான்கு தனியார் கம்பனிகள் மின்பாவனையாளர் கட்டணங்களில் இருந்து விசேட வர்த்தமானிப் பிரகடனத்தின் மூலமாக விலக்களிக்கப்பட்டிருக்கின்றன. அவற்றில் ஒரு ஆடை தொழிற்சாலை, சீமெந்து மற்றும் சீனித்தொழிற்சாலைகள், ஒரு ஏஜென்சி ஹவுஸ் மற்றும் மாடிவீட்டுத்தொகுதி நிர்மாண நிறுவனங்கள் அடங்குகின்றன. தெரிந்தெடுக்கப்பட்ட தொழிற்துறையினருக்கு மாத்திரம் இத்தகைய விசேட கவனிப்பு ஏன்? இவர்கள் மின்சாரக் கட்டணங்களை இலகுவாக செலுத்தக்கூடிய வசதி நிலையில் உள்ளவர்கள் அல்லவா? வறிய வீட்டுப்பாவனையாளர்கள் பெருங்கட்டணங்களைச் செலுத்தவேண்டுமென்று நேர்மையற்ற முறையில் கேட்கப்படுகின்ற அதேவேளை, இந்த வசதி படைத்த தொழிற்துறையினருக்கு சலுகை அனுமதிக்கப்படுவது மிக பெரிய அநீதியாகும். ■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்னும் எத்தனை செப்டெம்பர், எத்தனை மார்ச்?



என்.சத்தியமூர்த்தி

உள்நாட்டு அரசியல்

**அடுத்த இரண்டு, மூன்று ஆண்டுகளில் ஜெனீவா பிரசாரம் இனப்பிரச்சினையை முன்னணியில் தொடர்ந்து நிறுத்தி வந்தாலும் அதனை வைத்து தேர்தல் அரசியல் சதுரங்கம் விளையாடப்படும் என்றே எதிர்பார்க்கலாம். சிங்கள இனவாதம் மட்டுமே தேசிய அரசியலில் விலைபோகும் சரக்காக இருக்கலாம்**

ஏப்ரில் மாதம் லண்டன் நகரில் நடைபெற்ற பொதுநலவாய நாடுகளின் வெளியுறவு அமைச்சர்கள் கூட்டத்தில் இலங்கையில் எதிர்வரும் நவம்பர் மாதம் நடைபெறவுள்ள உச்சிமாநாட்டை வேறு நாட்டிற்கு மாற்றுவதற்கு முடிவு எடுக்கப்படும் என்று தமிழர் தலைமையில் ஒரு சாரார் கருதினார்களோ இல்லையோ, அதனை விரும்பினார்கள் என்றே கூறவேண் டும். ஆனால், ஜெனீவாவில் நடந்தது, லண்டனில் நடக்கவில்லை. இதனால் மட்டும், கொழும்பில் நடைபெறவுள்ள உச்சிமாநாட்டிற்கு அரசியல் பிரச்சினைகள் இல்லை என்று அர்த்தம் இல்லை. சர்வதேச அரங்கில் ஒவ்வொரு குழுவிற்கும் ஒவ்வொரு நிலைப்பாடும் நிர்ப்பந்தங்களும் உள்ளன. ஜெனீவா மனித உரிமை கவுன்சிலுக்கு பொருந்துவது, பொதுநலவாய குழுமத்திற்கு பொருந்தாது.

இந்தப் பின்னணியில், ஜெனீவாவில் மனித உரிமை கவுன்சில் மூலமே இனப்பிரச்சினைக்கு தீர்வு கண்டுவிட முடியும் என்று கருதிவிடமுடியாது. அதுபோன்றே, இனப்பிரச்சினைக்கு தீர்வு, மற்றும் 'போர்க் குற்றங்களுக்கு நீதி' என்ற இரண்டு பிரச்சினைகளுக்கும் ஒரே தீர்வு பொருந்துமா, அப்படியென்றால் அது எப்படிப்பட்ட தீர்வாக இருக்க முடியும் என்று சர்வதேச சமூகம் மட்டுமல்ல, அவற்றால் பாதிக்கப்பட்ட தமிழ்ச் சமூகமும் அவர்களது புலம்பெயர்ந்த சகோதரர்களும் எண்ணிப்பார்த்து அடுத்த கட்ட நடவடிக்கைகளில் இறங்க வேண்டும். இல்லையென்றால், வருடம் இருமுறை என்ற ஜெனீவா முன்னெடுப்பு பலமிழந்து, பல் இழந்த புலி ஆகிவிடும்.

இதில், தமிழ்ச் சமூகம், தங்களது முக்கிய பிரச்சினைகள் என்று பட்டியல் இட்டு, அவற்றில் முக்கிய மானவற்றை மட்டுமே முதலில் தீர்த்துக்கொள்ள முயலவேண்டும். ஒவ்வொரு பிரச்சினை என்று எடுத்துக்கொண்டாலும், அதற்கென்று புதிய புதிய அலகுகள் அன்றாடம் தோன்றிய வண்ணம் இருக்கும். உதாரணத்திற்கு, இனப்பிரச்சினைக்கான தீர்வு என்று எடுத்துக் கொண்டால், இராணுவமயமாக்கல், வடக்குப் பிராந்தியத்தில் இராணுவப் பின்னணியுள்ள ஒரு கவர்னர், இராணுவம் நிலம் கையகப்படுத்துதல், சிங்களவர்களை வடக்கு பிராந்தியத்தில் பெருவாரியாக குடியமர்த்துவது என்று பல்வேறு உள்ளடங்கிய பிரச்சினைகள் அதனுள் உள்ளன. ஏன், ''போர்க் குற்றங்கள்'' கூட இனப்பிரச்சினையின் ஓர் அலகு தான்.

இதில், ஒவ்வொரு பிரச்சினையாக தீர்த்துக் கொண்ட பின்னரே இனப்பிரச்சினைக்கான அரசில் தீர்வு குறித்து எண்ணிப்பார்க்க முடியும் என்று யாராவது கருதுவார்களேயானால், அது தவறான வழியாகும். அரசு பேச்சுவார்த்தைக்கு தயாரா? என்பது ஒரு முக்கியமான விடயம். ஆனால், தமிழ்ச் சமூகமும், தமிழ் அரசியல் தலைமையும், புலம்பெயர் தமிழர்களும் அதற்குத் தயாரா? என்று சுயநிர்ணயம் செய்து கொள்ளவேண்டும். அவ்வாறானால், தங்களது குறைந்தபட்ச கோரிக்கைகள் என்ன என்பதையும் அவர்கள் முடிவு செய்து கொள்ள வேண்டும்.

அது போன்றே, இனப்போர் முடிந்த கையோடு இலங்கை அரசும் தென்னிலங்கை அரசியல்வாதிகளும் ஏன் சாமானிய சிங்கள மக்களும் தங்களது உளசுத்தியை சந்தேகக்கண்கொண்டுமட்டுமே பார்க்கக்கூடாது என்று எதிர்பார்ப்பதும், நடைமுறைக்கு பொருந்தாத நிலைப்பாடாகும். இன்றளவும். இனப்பிரச்சினை குறித்து பேசும் தமிழர்கள், கடந்த பல

பொதுசன நூலகம் யாழ்ப்பாணம்.
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தசாப்தங்களாக தாங்கள் எவ்வா றெல்லாம் ஏமாற்றப்பட்டோம் என்று பட்டியலிட்டு காட்டிவருகிறார்கள். அது தவிர்க்க முடியாததும் கூட. அது போன்றே, இலங்கை அரசும் தனது மனப்போக்கை மாற்றிக் கொள்ள காலம் தேவைப்படும்.

இன்னும் சொல்லப்போனால், தற் போதைய சூழலில் தமிழர் அரசியல் தலைமையில் மட்டுமே தொடர்ச்சி யான தலைமைகள் இருந்து வந்துள் ளன. அவர்களால், கடந்தகால தமிழ்ச் சமூகத்தின் ஏமாற்றங்கள் குறித்து பட்டியலிட்டுப் பேசமுடி யும். மாறாக, அரசு தலைமையும், அதிலும் குறிப்பாக, அரசு அலுவலர் தலைமைகளிலும் மாற்றங்கள் ஏற் பட்டு வந்துள்ளன. அவர்களை பொறுத்தவரையில் பழையன குறித்து கேட்டு-படித்த விடயங்க ளையே அறிவார்கள். இனப் போரும், விடுதலைப் புலிகளின் தீவிரவாதமும், தமிழ்ச் சமூகம் மற் றும் அரசியல் தலைமைகளின் ஆத ரவும் அவர்கள் தொட்டு, உணர் ந்து அனுபவித்த ஒரு விடயம். அது அவ்வளவு எளிதாக மாறிவிடாது. இதுவும் யதார்த்தம்.

## ''போர்க் குற்றங்கள்'' குறித்த விசாரணை?

ஜெனீவா முஸ்தீபுகளில் இருந்து தமிழ்ச் சமூகமும், அரசியல் தலை மையும், ஏன், புலம்பெயர் தமிழர்க ளும், எளிய, உடனடித் தீர்வுக ளையே எதிர்பார்த்தார்கள் எனலாம். அதிலும் எதார்த்தவாதிகள், 'போர்க் குற்றங்களை முன்னிறுத்தி' சர்வதேச சமூகம் இனப்பிரச்சினைக்கு தமிழ்ச் சமூகம் ஏற்றுக்கொள்ளக்கூடிய தீர்வை சர்வதேச சமூகம் தங்களுக்கு அளிக்கும் என்றும் நம்பினார்கள். ஆனால், அவர்களது எதார்த்தமும் கூட, மனித உரிமை கவுன்சில் போன்ற ஐ.நா.சபை அரங்குகளின் செயல்பாடு குறி த்து முழுவதுமாக அறிந்து கொள்ளா மலே எடுக்கப் பட்ட முடிவோ என்று எண்ணத் தோன்றுகிறது. ஆனால், அவர்களை வழி நடத்திய சர்வதேச சமூகம் அவ் வாறான அறியாமையில் திளைத்தி ருந்தது என்று ஒருபோதும் சொல்லி விடமுடியாது. இன்னும் சொல்லப் போனால் அத்தகைய செயல்பாடு வரன்முறைகளை வகுத்ததே அந்த நாடுகள் தான். அதனைச் செயல்ப டுத்துவதும் மாற்றி அமைப்பதும் கூட அவர்களது முயற்சிகளாலோ அல்லது அவர்களது ஆசீர்வாதத்து டனோ மட்டுமே ஏற்படும் என்பதே உண்மை.

மனித உரிமை கவுன்சில் பிரயத்த னங்கள் தொடங்கிய காலகட்டத்தில் தமிழ்ச் சமூகமும் தமிழ் அரசியல் தலைமையும் அதற்கான காலக் கெடுவை கேட்டு அறிந்து வைத்தி ருக்கவில்லை என்றே எண்ணத் தோன்றுகிறது. ஏதோ, ஒரு கூட்டத் தொடரில், ஒரு தீர்மானத்தின் வாயிலாகவே இனப்பிரச்சினைக்கு ஏற்புடைய ஒரு தீர்வு ஏற்பட்டு விடும் என்ற கருத்து இன்று இல்லை. அடுத்து வரும் செப்டம்பர் கூட்டத் தொடரில் இலங்கைத் தீர்மானம் மீண்டும் ஒரு முறை ஆராயப்படும். அதில் எந்த முடிவும் ஏற்படப்போவ தில்லை.

அடுத்து வரும் மார்ச்-2014 தொட ரில், கடந்த 2013-மார்ச் தீர்மானத் தின் அடிப்படையிலான அறிக்கை சமர்ப்பிக்கப்படும். அது ஏற்றுக் கொள்ளப்பட்டால், அதன் அடிப்ப டையில் ஒரு விசாரணைக் குழு அமைக்கப்பட்டு, அது செயல்படத் தொடங்கலாம். அந்த அறிக்கை கவுன்சில் முன் மீண்டும் ஒரு வரு டம் கழித்தே வைக்கப்படும். அதன் மீது முடிவு எடுக்கப்பட்டு செயல்ப டுத்தப்பட்டால், அதற்கும் ஒன்றி ரண்டு வருடங்கள் ஆகலாம். அதற் கிடையில், உள்நாட்டில் அனைவ ரும் இனப்போரை மட்டுமல்ல, இனப்பிரச்சினையைக் கூட மறந்தே போயிருக்கலாம்.

அவ்வாறே, அடுத்த இரண்டு-மூன்று ஆண்டுகளில் ஜெனீவாப் பிரசாரம் இனப்பிரச்சினையை முன் னணியில் தொடர்ந்து நிறுத்தி வந் தாலும், அதனை வைத்து இலங்கை யில் அப்போதைய தேர்தல் அரசியல் சதுரங்கம் விளையாடப் படும் என்றே எதிர்பார்க்கலாம். அவ் வாறான சூழலில், சிங்கள இனவா தம் மட்டுமே தேசிய அரசியலில் விலைபோகும் சரக்காக தொடர்ந்து இருக்கலாம். அத்தகைய பின்னணி யில் சிங்கள அரசியல் தலைமை எது வுமே இனப்பிரச்சினைக்கான முடிவை முன்வைத்து தேர்தல் அரசி யல் செய்யும் என்று எதிர்பார்க்கமுடி யாது. இன்றும், விலைவாசி, மின்கட் டண உயர்வு, சட்டம்-ஒழுங்கு, நிர்வாக ஜனாதிபதி பதவிக்கு முடிவு என்று பல்வேறு பிற பிரச்சினைகள் குறித்து குரல் எழுப்பும் சிங்கள அர சியல் கட்சிகள், தமிழர் பிரச்சினை பக்கம் திரும்புவதற்கு எந்தவிதமான அவசியமும் இல்லை என்றே சொல் லவேண்டும். அது அவர்களுக்கு அரசியல் ரீதியாக ''ரிஸ்க்''கான விட யமும் கூட.

வடக்கு மாகாணத்தில் தேர்தல் நடைபெற்று அங்கு தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் அரசு அண்மைக் காலத்தில் அமையுமேயானால், அங் குள்ள வாக்காளர்களும் கூட அடுத்த ஜனாதிபதி அல்லது பாராளுமன்றத் தேர்தல் காலத்தில், மாகாண அரசின் செயல்பாட்டின் அடிப்படையில் தங் களது வாக்குகளை அளிப்பார்கள் என்று எதிர்பார்க்கலாம். அல்லது, தற்போது தொடர்ந்து விடுபட்டுப் போன மாகாண அரசின் அதிகாரங் கள் குறித்தும் அந்தத் தேர்தல் அமை யலாம். அவ்வாறான சூழலில், தற்போது இருக்கும் அதிகாரங்களை அவர்கள் எவ்வாறெல்லாம் மக்கள் நலனுக்காக பயன்படுத்தினார்கள், எவ்வாறெல்லாம் தங்களது அரசி யல் மற்றும் சொந்த லாபத்திற்கு பயன்படுத்தினார்கள் என்பன போன்ற கேள்விகளும் எழும். அதற் கும் பதில் சொல்ல அவர்கள் தங் களை தயார்படுத்திக்கொள்ள வேண் டும். ஆனால், அந்தக் கேள்விகள் தமிழ்ச் சமூகத்திடம் இருந்து மட்டும் வராது. சர்வதேச சமூகமும் அதே கேள்விகளை அவர்களிடம் கேட் கும்! ■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொடர்ந்து வரும் அகதிப் படகுகள்

# தடுமாறும் அவுஸ்திரேலிய அகதிச்சட்டம்



கலாநிதி சந்திரிகா சுப்ரமண்யன்

**மனித அவலம்**










அவுஸ்திரேலிய எல்லைக்குள் தொடர்ந்து வந்திறங்கும் அகதிப் படகுகளின் எண்ணிக்கை 2008இன் பின் அதிகரித்து, வருகை கால இடைவெளி மாதக் கணக்கிலிருந்து குறைந்து வாரக் கணக்கை எட்டியதும் அவுஸ்திரேலியா விழிபிதுங்கத் தொடங்கியது. கடந்த 2012 ஆம் ஆண்டில் மட்டும் 278 படகுகளில் 17,202 பேர் வந்து இறங்கியுள்ளனர். இந்த எண்ணிக்கை 2013இல் முப்பதாயிரத்தினை எட்டும் என நம்பப்படுகிறது. இவர்களில் இலங்கையிலிருந்து வந்த கப்பலோட்டிய தமிழர்களின் எண்ணிக்கையே அதிகமாகும்.

அப்படி படகுகளில் வரும் அகதிகள் பெரும்பாலானோர் இலங்கை, ஆஃப்கானிஸ்தான், சூடான் போன்ற ஆபிரிக்க நாடுகளிலிருந்து வந்தவர்களாவர். இப்படகுகள் இந்தோனேசியாவிலிருந்தே புறப்படுகின்றன. அகதிகளாக வருபவர் தம் சொந்த நாட்டிலிருந்து முறையற்ற வழிகளின் மூலம் இந்தோனேசியாவிற்கு வருகின்றனர். இந்தியாவிலிருந்தும் பலர் கடல் வழியாக இந்தோனேசியாவிற்கு வருகின்றனர். அங்கிருந்து இலங்கையர் என்ற போர்வையில் அகதி அந்தஸ்து கோரி அவுஸ்திரேலியாவுக்கு வருகின்றனர் என்பதுவும் [illegible]

பலமுறை பலத்த விமர்சனங்களுக்கும் எதிர்ப்புக்கும் நடுவே எந்தக் கட்சி ஆட்சியிலிருந்தாலும் அவுஸ்திரேலிய பாராளுமன்றம் அகதிகள் தொடர்பான குடிவரவு சட்டங்களை பலமுறை மாற்றியும் நிறைவேற்றியுமுள்ளது.

கடைசியாக மாற்றிய சட்டத்தின் கீழ் அவுஸ்திரேலிய எல்லைக்குள் நுழைய முற்படும் அகதிகளுக்கு அவுஸ்திரேலிய எல்லைக்கு வெளியே வைத்தே அகதிகள் நிர்ணய நடவடிக்கைகள் இனிமேல் நடாத்தப்படும். அதாவது அவுஸ்திரேலிய எல்லைக்குள் நுழைய இவர்கள் அனுமதிக்கப்படமாட்டார்கள்.

இப்புதிய சட்டத்தின்படி குடிவரவு சட்டத்தில் பல புதிய சரத்துகள் சேர்க்கப்பட்டுள்ளன. இதையொத்த முந்தைய சட்டங்கள் ஹார்வர்ட் அரசு மற்றும் ஜூலியா அரசுகளால் கொண்டு வரப்பட்டபோது அச்சட்டங்களில் இருந்த விரிசல்களைக் காரணம் காட்டி உச்ச நீதிமன்றம் அவை செல்லுபடியாகாது என அறிவித்தது.

இதன் அடிப்படையில் இச்சட்டம் நிறைவேறிய கையோடு, 43 அகதிகளை ஏற்றிவந்த படகு முதல் கட்டமாக கொக்கோஸ் தீவிலிருந்து கைப்பற்றப்பட்டு புதிய நடைசட்டத்தின் கீழ் முறைக்கு உட்படுத்தப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இச்சட்டத்தின் கீழ் அவுஸ்திரேலி யாவிற்குள் படகுகள் மூலம் நுழைய வரும் அகதிகள்,நாரு,பப்புவா நியூகினியா ஆகிய இரு இடங்களில் உள்ள முகாம்களில் வைத்து இவர்களது அகதி அந்தஸ்து நிர்ணயிக்கப் படும். 13 ஆகஸ்ட் 2012 க்குப் பிறகு வரும் அனைத்துப் படகுப் பயணிக ளும் அவுஸ்திரேலிய எல்லைக்கு வெளியே வைத்தே அகதி அந்தஸ்து நிர்ணயத்துக்கு உட்படுத்தப்படுவார்கள் என்ற கெடுபிடி தொடங்கியது. இதுதவிர இனிமேல் வரும் அகதிகள் தங்கள் குடும்பங்களை அனுசரணை விண்ணப்பம் (Sponsorship) மூலம் இணைத்துக் கொள்ளவும் முடியாது.

இதற்குமுன் இத்தகைய புற அகதி நிர்ணய மையங்களை முந்தைய ஹார்வேர்ட் பசுபிக் தீர்மானம் என்ற பெயரில் அரசு தொடங்கிய போது கடும் விமர்சனத்துக்குள்ளானது நினைவிருக்கலாம். தற்போதைய லேபர் அரசு அத்திட்டத்தை 2007 இல் கை கழுவியது.

ஜூலியா அரசின் கொள்கை நழுவல் குறித்து அரசியல் அவதானிக ளும், அகதி ஆதரவாளர்களும் கடும் விமர்சனம் தெரிவித்துள்ளனர். மலேசிய அரசுடனும் ஜூலியா தொடர்ந்து அகதி நிர்வாகம் குறித்து பேச்சுவார்த் தைகளை நடத்தினார்.

சர்வதேசச்சட்ட அடிப்படையில் அகதி பாதுகாப்புக்கு உத்தரவாத கையெழுத்திட்ட நாடுகளின் வரிசை யில் இல்லாத நாடுகள் மலாயா, பப்புவா நியூகினியா மற்றும் நாரு ஆகும். அதனால் அகதி ஒப்பந்தங் களை இந்த நாடுகள் அனுசரிக்கத் தேவை இல்லை. அப்படி என்றால் தரமான, சட்டத்துக்கு உட்பட்டு, மனித உரிமைகளைப் பேணும் வித மான சேவைகளை வழங்க வேண் டிய நடைமுறைகளை இந்த நாடுகள் பின்பற்றத் தேவை இல்லை. ஆனா லும் ஐக்கிய நாடுகள் சபையின் அகதி களுக்கான தூதரகத்திடம் இந்நாடு கள் தொடர்பான அறிக்கையைச் சமர்ப்பித்து அகதிகளை இந்நாடுகள் நடாத்தும் முறைகள் பற்றி முழுதான தகவலை பெற்று அதை இரு சபை களிலும் கொடுக்க வேண்டிய நிர்ப் பந்தம் ஜூலியா அரசுக்கு உள்ளது.

அத்துடன் சிறுவர் தொடர்பான தெளிவான மாற்றங்கள் இச்சட்டத்தில் கொண்டு வரப்பட்டுள்ளன. முன்பு வந்த அகதிகள் சிறுவர் பாதுகாப் புக்கு, அவுஸ்திரேலியாவிற்கு இருக் கும் கடமையை காரணம் காட்டி, அகதி அந்தஸ்தை பெற்று வந்தனர். தற்போது கொண்டு வரப்பட்டுள்ள சட்டத்தின்படி சிறார்களுக்கு இதே கெடுபிடிகள் பொருந்தும் வண்ணம் சட்டம் வரையப்பட்டுள்ளது.

இருந்தாலும் 2005ஆம் ஆண்டு நாருவில் அகதி முகாமில் இருந்த 25





அகதி அந்தஸ்து கோரிய பலர் வெளியே வந்த பின் னர் நடந்துகொள்ளும் முறைகள் அவுஸ்திரேலிய மக்களை ஆத்திரமடையச் செய்திருக்கின்றன என்பதும் முக்கியமாகக் கவனிக்கப்பட வேண்டிய விடயமாகும்

பேர் மனநலம் குன்றியது காரணமாக மீண்டும் அவுஸ்திரேலியாவிற்கே அனுப்பப்பட்டதை இங்கு நினை வூட்ட வேண்டும்.

பல தடவை இப்படி வந்த படகுகள் கவிழ்ந்து போயுள்ளன. கடந்த புரட் டாதி மாதத்தில் சுமார் 60 பயணிக ளைக் கொண்ட அகதிகள் கப்பலும் அதற்கு முன் ஆடி மாதத்தில் 200 பயணிகளைக் கொண்ட அகதிகள் கப்பலும் அவுஸ்திரேலியாவிற்கு வரும் போது இந்தோனேசியாவிற் கும் அவுஸ்திரேலியாவிற்கும் இடைப்பட்ட கடல் பரப்பில் கவிழ்ந்த பயங்கரமும் நிகழ்ந்துள்ளது.

இவை எல்லாவற்றையும் மீறி தொடர்ந்து படகுகள் இலங்கை அகதி களுடன் வந்து கொண்டே இருக்கின் றன. அண்மையில் ஏப்ரில் மாதம் வந்த படகில் 67பேர் ஜெரால்ட்டன் துறைமுகத்திற்கு வந்துள்ளனர்.

### அகதி அந்தஸ்து

அகதி அந்தஸ்து நிர்ணயத்திற்காக அகதிகள் மூன்றாக வகைப்படுத்தப் பட்டுள்ளனர்.

### அகதிகள் (Refugees)

1951 இல் ஐக்கிய நாடுகளின் அகதி பாதுகாப்பு அமைப்பின் கீழ் அகதிகளாக்கப்பட்டோர், தற்காலிக அகதிகள், அகதிகள் போன்ற சூழ்நி லையில் இருப்போர் அனைவரும் இதில் அடங்குவர்.

### புகலிடம் கோருவோர் (Asylum-seekers)

சர்வதேச புகலிடம் கோரும் தனிம னிதர்கள் , அகதி அந்தஸ்து தீர்மா னிக்கப்படாத நிலையில் இருப்பவர் அடங்குவர்.

### உள்நாட்டில் இடம் பெயர்ந்தோர் (Internally displaced persons)

ஆயுதப் போர் காரணமாக வீடு வாசல்களை இழந்து , மனித உரிமை மீறல் அல்லது மனிதன் உருவாக்கிய அழிவு காரணமாக , காலம் காலமாக வாழ்ந்த இடத்தை விட்டு இடம் பெயர்ந்து சென்று நாட்டு எல்லைக ளில் வேறு இடங்களில் வாழும் தனி நபர் அல்லது குழுக்கள்.

இதில் எந்த வகையில் அடங்குபவ ராயினும் படகுகள் மூலம் வருவோர் எவரும் புதிய நடைமுறையின் கீழ் தான் நிர்ணயிக்கப்படுவார்கள்.

### அவுஸ்திரேலியாவில் வந்திறங்கி யுள்ள தமிழர்களின் நிலை

கடந்த ஆண்டு நவம்பர் மாதம் மட் டும் இலங்கையர் 1228 பேரும், அக் டோபரில் 1240 பேரும் படகுகளில் அகதி அந்தஸ்து கோரி வந்திருக்கின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

றனர். இவர்களில் பலர் நீர்கொழும்பு பிரதேசத்தை, குறிப்பாக உடப்பு பகுதியைச் சேர்ந்தவர்கள். இதில் தமிழர்கள் மட்டும் அடங்குவதில்லை. சுற்றியுள்ள பகுதியைச் சேர்ந்த சிங்களவர்களும் அடங்குவது அகதிகள் என்பதன் தகுதியை கொச்சைப்படுத்துவதாக உள்ளது என்று குடிவரவுத் துறை அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். இது குறித்து சிட்னி டெய்லி டெலிகிராஃப்புக்கு பேட்டியளித்த நீர்கொழும்பு உளவுத்துறைத் தலைவர், சஜித் ரட்நாயகா, தற்போது படகுகள் இங்கிருந்து கிளம்புவதைத் தடுக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு, சிறப்பு பிரிவு ஒன்று அண்மைக்காலத்தில் அமைக்கப்பட்டதனால் படகுகள் போவது குறைந்துள்ளது என கடந்த டிசம்பர் மாதம் சிட்னி டெய்லி டெலிகிராஃப்புக்கு அளித்த பேட்டியில் குறிப்பிட்டுள்ளார்.

இதுவரை படகு மூலம் வந்த தமிழர்களில் 700 பேர் திருப்பி அனுப்பப்பட்டுள்ளனர்.பணம், துயரம், அலைக்கழிவு,திரும்பி வந்த பின் விசாரணை போன்ற பின் விளைவுகள் இப்படி திரும்பிச் செல்வோர்க்கு கிட்டும் என்பது அவுஸ்திரேலியாவின் பிரச்சினை அல்ல.

ஒருவர் படகில் வருவதற்கு சுமார் 12 முதல் 20 லட்சம் வரை கொடுப்பதாக பத்திரிகைச் செய்திகள் தெரிவிக்கின்றன.வேறு சிலர் தாங்களே படகு கட்டுவதனால் 5-7 லட்சம் வரை கொடுப்பதாகத் தெரிகிறது. சுமார் 30 பேர் மட்டுமே ஏறக்கூடிய படகில் 60 பேர் வரை அடைக்கப்படுகிறார்கள். ஒற்றை கழிப்பறை, கடல் நாற்றம், உணவு பற்றாக்குறை, கடல் நோய், தண்ணீர் இன்மை போன்ற பல கஷ்டங்களுக்கு இடையில் இந்தப் பயணங்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

பலபேருக்கு தகுந்த சட்ட உதவிகள் தரப்படவில்லை எனக் கூறப்படுகிறது. முதல் கட்ட அகதி அந்தஸ்து நிர்ணயத்துக்குப் பிறகு இரண்டாம் கட்ட மேல் முறையீடு அகதி மீள்நிர்ணய தீர்ப்பாயத்தில் (Refugee Review Tribunal) விண்ணப்பம் செய்யப்பட வேண்டும். அங்கும் நிராகரிக்கப்பட்டால் பின் மத்திய நீதிமன்றத்தை அணுக வேண்டும்.இவை ஒவ்வொன்றுக்கும் விண்ணப்பிக்கும் கால அவகாசம் மிகக்குறைவாகும்.

ஆனால், அரசு தரப்பில் வழங்கப்படும் சட்ட சேவை இந்த நிராகரிப்புக் கடிதங்களை காலதாமதமாகவே விண்ணப்பதாரிக்கு தருவதனால் அடுத்த கட்டத்திற்குச் சென்று போராட முடிவதில்லை என்று அகதி அந்தஸ்து நிராகரிக்கப்பட்டோருக்கு உதவும் ஒரு கிறிஸ்தவ அமைப்பின் தமிழ்ச் சமூக ஒருங்கிணைப்பாளர் கவலைப்பட்டார்.

அது தவிர குறித்த அளவுக்கு மேல் அதாவது மத்திய நீதிமன்றத்தை அணுக வேண்டிய சூழ்நிலையில் இலவச சட்ட உதவி கிட்டாததால் நீதிமன்ற செலவுகளுக்கு கிட்டத்தட்ட நாலாயிரம் அவுஸ்திரேலிய டொலர்கள் தேவைப்படுவதனால் தொடர்ந்து போராட முடிவதில்லை என்பதும் இவரது கவலை.மட்டக்களப்பைச் சார்ந்த இளைஞர் ஒருவர் அரசு தரப்பில் தரப்படும் சட்ட சேவையில் உள்ள வழக்கறிஞர்களுக்கு இலங்கை நிலைமை புரிவதில்லை. தவிர இயந்திர கதியில் எங்கள் விண்ணப்பங்களை எழுதித் தள்ளுகிறார்கள்.அதனால் அவசரகதியில் சரியான விபரங்கள் சேர்க்கப்படுவதில்லை என்று குறை கூறினார்.

இது இப்படி இருக்க அகதி அந்தஸ்து கோரிய பலர் வெளியே வந்த பின் நடந்து கொள்ளும் முறைகள் அவுஸ்திரேலிய மக்களை ஆத்திரம் கொள்ள வைத்திருக்கிறது.

கடந்த மார்ச் மாதம் பல்கலைக்கழகத்துடன் இணைந்த தங்குமிடத்தில் இருந்த அகதி விண்ணப்பதாரி ஒருவர் அங்கிருந்த ஒரு அவுஸ்திரேலிய மாணவியிடம் தகாத முறையில் நடந்து கொண்டார் என்பது பத்திரிகைச் செய்தியாகும்.பாலியல் குற்றவாளியாக இவர் குற்றம்சாட்டப்பட்டுள்ளார்.

பரமற்றாவில், பெண்டில் ஹில் போன்ற இடங்களில் ஒருவர் வசிக்கும் இடத்தில் 20 பேர் அடைந்து






வாழ்ந்து விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர். இவர்கள் மாதமொன்றுக்கு சுமார் 1000 டொலர் உதவித் தொகை பெறுபவர்கள் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.பலர் வேலை செய்து கொண்டிருக்கின்றனர்.

இது தவிர குழுக்களாக சண்டை போடவும் சிலர் கிளம்பியுள்ளனர். ஆனால் பலர் உண்மையான அகதிகளாக அவதிப்பட்டுக் கொண்டுள்ளனர். பலருக்கு அவர்களின் பொலிஸ் அறிக்கை இலங்கையிலிருந்து போய்ச் சேராத படியால் வருடக் கணக்கில் அகதி நிர்ணயம் தாமதித்துக் கொண்டுள்ளது.

துன்பமே வாழ்க்கையாக தோணி மேல் வந்து பல லட்சங்களை கடல் பயணத்திற்காக காவு கொடுத்து, இன்னும் முடிவு தெரியாமல் பலர் திசை தொலைத்து தவித்துக் கொண்டிருக்கிறார்கள். இவர்களுக்கு அகதி அந்தஸ்து கிட்டும் என்பதற்கு எந்த உறுதியும் இல்லை. அவுஸ்திரேலிய அரசு இலங்கை அரசுடன் சேர்ந்து இந்த கடல் பயணங்களைத் தடுக்க அனைத்து முயற்சியையும் செய்கிறது என்பதே உண்மை. ■

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஆரோக்கியமற்ற மீட்சி நிலையினால் பிழையாக வழிநடத்தப்படாதீர்




உலக முதலாளித்துவம் இன்னும் தான் அடைந்த சரிவிலிருந்து மீட்சி பெறவில்லை. அது தன்னை மீளக் கட்டமைக்காவிட்டால் அத்தகையதொரு மீட்சி சாத்தியமில்லை

குமார் டேவிட்

கடந்த இருமாதங்களாக (டிசம்பர் 2012- ஜனவரி 2013) உலகத் தலைநகரங்களில் இருந்தும் மத்திய வங்கிகளில் இருந்தும் வெளிவரும் செய்திகள் உலக முதலாளித்துவமானது தயக்கத்துடனானதொரு மீட்சிச் செயன்முறையை நோக்கிய ஆரம்பத்தை அடைந்துள்ளதாகக் கூறுகின்றன. இக்கருத்தானது பிழையான ஒன்றென்பதே இக்கட்டுரையின் வீச்செல்லையாகும்.

2007 - 2008 காலப்பகுதியில் ஆரம்பமான புதுமந்தம் (New Depression) என நான் கருதும் பொருளாதார வீழ்ச்சி ஏற்பட்டமைக்கான பின்னணிக் காரணிகள் எதுவும் இதுவரை மாற்றமடையவில்லை.

டெவோஸ் மகாநாடு (23-26 ஜனவரி 2013) அதன் கொள்கை பாரிசவாதம் மூலம் இதனை நிரூபிக்கிறது.

இப்புது மந்தம் எப்போது ஆரம்பமானதென்று ஆரம்பநாள் நீங்கள் அமெரிக்காவில் உருவாகி ஆயிரக் கணக்கான குடும்பங்களை வீதியில் தள்ளிவிட்டதும், கடன் வழங்கும் நிதிநிறுவனங்களின் வீழ்ச்சியைத் தூண்டியதுமான உப ஈட்டு அடமான நெருக்கடியை கருத்தில் கொள்கிறீர்களா அல்லது செப்டெம்பர் 2008 இல் ஏற்பட்ட பாரிய கம்பனிகள் மற்றும் வங்கித்துறையில் ஏற்பட்ட பொதுவான வீழ்ச்சி நிலையைக் கருத்திற் கொள்கிறீர்களா என்பதைப் பொறுத்து வேறுபடும்.

புது மந்தத்தின் இயங்கியலைக் காட்டும் நோக்கில் Wobble U Shape என அழைக்கப்படும் வரைபடம் ஒன்றை நான் உருவாக்கியுள்ளேன். இவ்வரைபடம் கருத்தியல் சார்ந்த ஒன்றாகும். அத்துடன் அதில் பயன்படுத்தப்படும் குறிகாட்டியாக மொத்த உள்நாட்டு உற்பத்தி அல்லது தொழில்வாய்ப்பு அல்லது வேறேதெனும் முக்கிய புள்ளிவிபரமொன்று அமையலாம்.

எனது கருத்து இதுதான் : நிலைபேறுடையதான மீட்சி நிலையொன்று காணப்பட முடியாது. உலக முதலாளித்துவமானது நீண்டகாலத்திற்குத் தடையாகவும் தேக்க நிலையிலும் காணப்படும். இதன் முடிவில் எஞ்சியிருக்கப்போவது இரண்டாம் உலகப் போருக்குப் பிந்திய கடந்த 70 வருடங்களாக எம்மால் நன்கறியப்பட்ட முதலாளித்துவமன்று.

1929 - 1940 காலப்பகுதியில் ஏற்பட்ட பெருமந்தமானது புதுமந்தத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தில் இருந்து வேறுபட்டதாகும். முன்னையது தெளிவான வகையில் தலைகுப்புற வீழ்வது போன்றவாறானதொரு வீழ்ச்சியாகும் (உண்மையில் இவ்வாறான வீழ்ச்சி இருமுறை யேற்பட்டது). புதுமந்தமானது நிற்பதும் பின்னர் ஆரம்பிப்பதுமான ஏற்ற இறக்கங்களைக் கொண்ட காலப்பகுதிகளை உள்ளடக்கியதாக உள்ளது.

இவ்விரு மந்தங்களும் ஒத்த தன்மையுடையனவல்ல. ஏனெனில், முதலாளித்துவத்தின் பெருவீழ்ச்சிக்கு இட்டுச் செல்லும் காரணிகள் ஒத்த தன்மையுடனவாயினும் (Marx, Capital II & III) அவ்வீழ்ச்சி ஏற்படும் புறச்சூழ்நிலைகள் ஏற்படுத்தும் விளைவுகள் வேறுபட்டவையாகும்.

நபர்கள் இருவர் ஒரே நோயினால் பீடிக்கப்பட்டிருப்பினும் அவர்களின் நோயின் தன்மை பற்றிய வரலாறுகள் அவர்களின் ஆரம்ப நிலையில் காணப்பட்ட சுகாதார மற்றும் மருத்துவ விபரங்களில் பெரிதும் தங்கியுள்ளன. இரண்டாவதாக அவர்களின்நோய்தீர்க்க பரிந்துரைக்கப்படும் சிகிச்சைகள் அவர்களின் கடந்தகால மருத்துவ வரலாற்றின் அடிப்படையில் வேறுபடுபவையாகும்.

பெருமந்த காலப்பகுதியிலிருந்து புதுமந்த காலப்பகுதியை வேறுபடுத்திக் காட்டும் ஆரம்ப நிலைகளாக பின்வருவனவற்றைக் கூறலாம்:

அ. நிதி மூலதனத்தின் அசுர வளர்ச்சி மற்றும் அதன் அநாவசியமான சிக்கல் நிறைந்த தன்மை, அத்துடன் 2008 இல் அது வீழ்ச்சியடைய ஆரம்பித்த வேகத்தின் தீவிரம்.

ஆ.பாரியளவிலான படுகடன்கள், தனியார் கடன்கள் மற்றும் இறைமைக் கடன் நெருக்கடிகள்.

இ. முன்னொருபோதும் கண்டிராத அளவினதான உலக மயமாக்கலும் அதன் சிக்கல் நிறைந்த விளைவுகளாகும்.

தற்போது பொருளாதார மந்தத்திற்கான சிகிச்சை முறை பற்றிய தனித்துவமான விடயம் யாதெனில், அரச முதலாளித்துவம் ஒரு மருந்தாக முயற்சிக்கப்படுவதாகும். இதில் சிகிச்சை வழங்கும் மருத்துவரின் பணியை சர்வதேச அரச முதலாளித்துவம் ஆற்றுகிறது. (அரச தலையீடு, G7 மற்றும் G-20 நாடுகள், சர்வதேச ரீதியில் கூட்டுப் பொருளாதாரத் தீர்மானங்கள் மற்றும் சர்வதேச நாணய நிதியம், ஐரோப்பிய மத்திய வங்கி, இங்கிலாந்து வங்கி என்பவற்றின் நடவடிக்கைகள்)

மிகத்தெளிவான ஒரு உதாரணம் யாதெனில், அயர்லாந்து, போர்த்துக்கல், கிரேக்கம் மற்றும் ஸ்பெயின் ஆகிய நாடுகளில் ஏற்பட்ட கோளாறை சீர்செய்யும் பணி ஐரோப்பிய ஒன்றியம், ஐரோப்பிய மத்திய வங்கி மற்றும் யூரோ வலய நாடுகள் மீது சுமத்தப்பட்டிருப்பதாகும்.

ஜேர்மனியின் அதிபரும் பிரெஞ்சுப் பிரதமரும் மேற்படி நோயாளி நாடுகளின் கூட்டு அரசுத் தலைவர்களாகச் செயற்படுகின்றனர் என்ற கூற்று வெறுமனே நகைச்சுவைக்காக மட்டும் கூறும் ஒரு விடயமன்று. வங்கி மற்றும் நிதியியல் துறையில் ஐரோப்பிய மத்திய வங்கியின் அதிகாரமே உயர் நிலையில் உள்ளது. இதனடிப்படையில் நோக்குமிடத்து மிகவும் வேடிக்கையான விடயம் யாதெனில், தேசிய இறைமைபற்றி இந்நாடுகள் தொடர்ந்து பேசிவருவதாகும். இந்நாடுகளின் நோய்க்கான சிகிச்சையாக அமைவது அமெரிக்க-ஐரோப்பிய அரச முதலாளித்துவமாகும்.

அரசதுறை முதலாளித்துவத்தை நாடும் இச்செயற்பாடானது மரபு ரீதியாக நிலவும் பூர்ஷுவா பொருளாதாரக் கோட்பாடுகளை ஒருபுறம் தள்ளிவிட்டுள்ளதுடன், நவதாராண்மை வாதத்தை குழிதோண்டிப் புதைத்து அத்துடன் ஒருபுறம் கடும் சிக்கனத் தன்மையை வலியுறுத்துவதும் மறுபுறம் ஊக்குவிப்பு வழங்குவதை இலக்காகக் கொண்டதுமான பரஸ்பர ஒத்திசைவற்ற சூத்திரமொன்றை பிரச்சினைக்கான தீர்வாக முன்வைத்துள்ளது.

மேலும் பாதிக்கப்பட்டுள்ள நாடுகளில் உறுதித்தன்மையைப் பேணும் பொறிமுறைக்கான நிதியினை சீனா, இந்தியா மற்றும் பிரேசில் போன்ற நாடுகள் வழங்கியுள்ளதனாலேயே மேற்குலக நாடுகள் தமது தலைகளை தண்ணீர் மட்டத்திற்கு மேலே வைத்து உயிர் பிழைக்க முடிந்துள்ளது.

***கோட்பாட்டு குறிப்பு :*** ஒரு பொருளாதார மந்தம் பொருளாதாரப் பின்னடைவில் இருந்து வேறுபட்டதாகும். அதாவது முதலாளித்துவமானது பொருளாதாரப் பின்னடைவில் இருந்து விரைவாகவோ அல்லது மெதுவாகவோ வெளிவந்துவிடலாம். ஆனால், அப்பின்னடைவானது சமூக ரீதியான அவலங்களுக்கு இட்டுச் செல்வதுடன், வன்முறையான நிகழ்வுகளையும் ஏற்படுத்தும்.

மேலும் வர்த்தகச்சுழற்சி சகவோட்டம் இத்தோடு இணைந்ததாக ஏற்படும் காரணத்தால் மேற்படி விளைவுகள் சமூகத்தில் இருந்து அகல்வது கடினம்.

உலக பெருமந்தமானது இரண்டாம் உலக மகாயுத்தத்தில் சென்றுமுடிந்தது. புதுமந்தமானது உலக கட்டமைப்புகள் பொருளியலாளர்கள் மற்றும் அரசியல்வாதிகள் உபாய ரீதியில் முயற்சித்துவரும் மீள் ஒழுங்குபாட்டிற்கான பாதையில் ஒரு தள்ளாட்டத்துடன் கூடிய ஊசல் நிலையினையே சுட்டி நிற்கிறது.

**தற்போது நிலவும் சூழ்நிலை**

2012இன் இறுதிப்பகுதியில் சிற்சில பொருளியல் மற்றும் அரசியல் போக்குகள் ஒத்திசைந்து சென்றமையினால் இக்காலப்பகுதி புது மந்தம் பற்றிய களநிலைவரத்தை ஆராயப் பொருத்தமானதொரு காலப்பகுதியாக இக்காலப்பகுதியைக் கருதலாம்.

2008 -2009 காலப்பகுதியில் ஏற்பட்ட முதலாவது சரிவில் இருந்து பொருளாதாரம் மீண்டு வராநிலையில் ஐக்கிய இராச்சியத்தின் பொருளாதாரமானது அதன் இரண்டாம் சரிவினையும் (இரட்டைச் சரிவு) சந்தித்துள்ளது.

2011 இன் 4ஆம் காலாண்டுப் பகுதியில் அதன் பொருளாதாரமானது 0.3% இனால் சுருங்கியதுடன், அதன்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்வந்த காலப்பகுதியில் சுருங்கும் தன்மை மேலும் தீவிரமடைந்தது. (ஒரு பொருளாதாரப் பின்னடைவிற்கான தொழில்நுட்ப ரீதியான வரைவிலக்கணமாக ஒரு பொருளாதாரம் தொடர்ச்சியாக இரு காலாண்டுப் பகுதிகளில் சந்திக்கும் சுருக்க நிலை கருதப்படுகிறது) இங்கிலாந்தைப் பொறுத்தமட்டில் 2011-2012 காலப் பகுதியானது பொருளாதார வளர்ச்சி மற்றும் தொழில் வாய்ப்பு உருவாக்கம் தொடர்பில் இருண்ட காலப் பகுதியாகும்.

தரப்பட்டுள்ள வரைபடத்தில் வரைவானது கீழ்நோக்கிச் சரிந்துசெல்லும் பகுதியில் காணப்படும் க புள்ளியில் ஐக்கிய இராச்சியத்தின் தற்போதைய பொருளாதார நிலைமையினைக் காட்டலாம். இப்புதுமந்தமே பிரித்தானிய பொருளாதாரத்தின் வரலாற்றில் பதிவாகியுள்ள மிக நீண்டகாலப் பகுதியாகும். பின்னடைவினைத் தொடர்ந்து பிரித்தானிய பொருளாதாரமானது வீழ்ச்சிக்கு முன்னிருந்த நிலைக்கு மீண்டு வரவேண்டிய நிலையில் உள்ளது. பெருமந்தம் நிலவிய காலப்பகுதியில் கூட இங்கிலாந்தின் வெளியீட்டு மட்டமானது நான்கே வருடங்களில் முன்னர் இருந்த நிலைக்கு மீண்டது.

கிரேக்கமும் ஸ்பெயினும் மிக மோசமான நிலையில் உள்ளன. கிரேக்க அரசாங்கத்திற்கும் அதன் வங்கித்துறைக்கும் ஐரோப்பிய மத்திய வங்கி, சர்வதேச நாணய நிதியம் என்பவற்றாலும் இந்நாடுகளின் முறிகளைக் கொள்வனவு செய்தவர்களாலும் வழங்கப்பட்ட மீட்சி நிதிகளின் மொத்தப் பருமன் 300 பில்லியன் யூரோக்களைத் தாண்டியுள்ளது.

கிரேக்கத்தில் மிகத் தீவிரமான சிக்கன நடவடிக்கைகள் அறிமுகப் படுத்தப்பட்டன. இந்நடவடிக்கைகள் மூலம் வட்டி செலுத்தல்களுக்கு முன்னரான பாதீட்டுக் குறைநிலையை 2009 இல் நிலவிய மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 10.5% மட்டத்தை 2011இல் 2.5% ஆக்கக் குறைப்பதில் வெற்றி காணப்பட்டுள்ளது. ஆனால், இக்கொள்கையினால் ஏற்




பட்ட பிரதிகூல விளைவாக இதேகாலப்பகுதியில் தொழில் இன்மையானது 8% இலிருந்து 22% ஆக அதிகரித்துள்ளதுடன், 2011 இல் கிரேக்க பொருளாதாரமானது 6.9% இனால் வீழ்ச்சி கண்டுள்ளது. இத்துன்பியல் தொடர்நிலை 5% மட்டத்தில் 2012 மற்றும் 2013ஆம் ஆண்டுகளிலும் தொடருமென்பது எவரதும் எதிர்வு கூறலாகும்.

ஸ்பெயினில் தொழிலின்மை 25% மாகவும் இளைஞர் மட்டத்திலான தொழிலின்மை 51% ஆகவும் மிகவுயர்ந்த மட்டத்தில் காணப்படுகின்றது. சுமார் 1% மட்டத்திலிருந்த வருடாந்த உற்பத்தி வளர்ச்சியானது 2012 இல் - 1.7% வீழ்ச்சியினைச் சந்திக்குமென எதிர்வுகூறப்பட்டுள்ளது. ஸ்பெயினின் மரியானோ ரஜோவின் புதிய அரசாங்கமானது அரச செலவினங்களைக் குறைப்பதில் தளராத விக்கிரமாதித்தனின் முயற்சியைப் போல மீண்டும் மீண்டும் முயற்சித்து வருகிறது. கடுமையான வீதிப்போராட்டங்கள் ஏதும் இம்முயற்சிக்கு எதிராக வெடிக்காவிட்டால் 2011 இல் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 2.5% ஆகவிருந்த பாதீட்டு குறைநிலையை 2012இல் 5.3% ஆகவும் 2013 இல் 2.3% ஆகவும் குறைக்க அரசாங்கம் திட்டமிட்டுள்ளது.

ஜேர்மனியில் 2012 இன் இறுதிக் காலாண்டில் பொருளாதார வளர்ச்சியானது 1% மட்டத்தை விட குறைவான மட்டத்திற்கு வீழ்ச்சியடைந்தது. அத்துடன், ஐரோப்பிய ஒன்றிய பொருளாதாரத்தை முழுமையாகக் கருதுமிடத்து 2012 இல் முழுமையான பின்னடைவைச் சந்தித்துள்ளது டன், சர்வதேச நாணய நிதியத்தின் மதிப்பீடுகளின்படி 2013 இலும் இவ்வீழ்ச்சி தொடருமென எதிர்பார்க்கப் படுகிறது.

இதனை எமது வரைபில் மேற்பகுதியில் இருந்து சரிந்து செல்லும் பகுதியில் உள்ள P புள்ளியினால் காட்டமுடியும். ஆகவே Wobble U வரைபடத்தை சரியாகப் பயன்படுத்தும் முறையாகத் தரப்பட்ட காலப்பகுதி ஒன்றில் தனிப்பட்ட நாடுகள் வரைபில் எவ்விடத்தில் இருக்க வேண்டுமென்பதைத் தீர்மானிப்பதில் நெகிழ்த்தன்மையை அனுமதிப்பதைக் கூறலாம். சில நாடுகள் மேற்படி வரைபில் அசையும் போது தடுக்கி விழலாம். வேறுசில வெகுசிரமத்துடன் வரைபில் மேலேறிச் செல்லலாம்.

ஐக்கிய அமெரிக்காவானது 2011 இல் ஒரு மென்மையான மீட்சிக்கான சமிக்ஞைகளை வெளிப்படுத்தியுள்ளதுடன், 2012 இல் அதனைத் தொடர்ந்து தக்கவைத்துக்கொண்டது. 2011 இல் பொருளாதார வளர்ச்சி 1.7% ஆக இருந்ததுடன், 2012இற்கான எதிர்வுகூறல்கள் 2.5% முன்னேற்றத்தைக் காட்டி நின்றன.

நான் இங்கு சுட்டிக்காட்ட விரும்பும் முக்கிய விடயம் யாதெனில், நான் எதிர்பார்ப்பதுபோல் ஐரோப்பா முழுவதற்குமான இரண்டாவது பொருளாதாரச் சரிவொன்று ஏற்படுமானால் அது அமெரிக்காவின் பொருளாதார மீட்சியினை பின்னோக்கித் தள்ளிவிடும் என்பதாகும். வொபில் வரைபில் தனித்தனி நாடுகள் வெவ்வேறு புள்ளிகளில் இருந்தாலும் அங்கே ஒரு இறுக்கத்தன்மையும் நிலவுகிறது. இதில் உள்ள நாடுகள் ஒன்றையொன்று முன்னோக்கித் தள்ளிச் செல்பவையாகவோ அன்றேல் பின்னோக்கிப் பற்றி இழுப்பவையாகவோ உள்ளன.

உலக முதலாளித்துவத்தின் எந்த வொரு பிரச்சினையும் வெற்றி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொள்ளப்பட்டு தீர்வுகாணப்பட்டதாக இல்லை. கைத்தொழிலில் பெறப்படும் குறைவான ஒரு இலாப வீதம் குறைந்தளவு முதலீட்டுக்கும் தேக்க நிலைக்கும் இட்டுச் செல்லும் அதேவேளை, வீட்டுத்துறையினர், நிறுவனத்துறை மற்றும் அரசதுறையினர் பெறும் படுகடன்கள் அதிகரிப்பிற்கும் மிகை உற்பத்தியுடன் குறைந்த மட்டத்திலான நுகர்வுக்கும், செல்வந்த நாடுகளில் உற்பத்தித் திறனை விட கூடிய வாழ்க்கைத் தரத்திற்கும் இட்டுச் செல்லும். ஆனால் வருமான சமமின்மை அதிகரித்துச் செல்லும்.




உலக முதலாளித்துவம் இன்னும் தான் அடைந்த சரிவில் இருந்து மீட்சிபெறவில்லை. அது தன்னை மீளக் கட்டமைக்காவிட்டால் அத்தகையதொரு மீட்சி சாத்தியமில்லை.

### இனி ஏற்படப்போகும் நிலைமைகளின் தன்மை

சர்வதேச அரச முதலாளித்துவமானது நெறிப்படுத்தும் ஒரு முகவராக தோற்றம் பெற்றுள்ளது. இனிவரும் சகாப்தத்தில் முதலாளித்துவம் உயிர் வாழ்வதற்கான வாய்ப்பு இருக்குமானால் இரண்டாம் உலகப்போருக்குப் பின்னர் நிலவிய பழைமை வடிவிலான முதலாளித்துவமாக (கூட்டுத்தாபனங்கள் மற்றும் நிதிச்சந்தைகள்) அது இருக்கப்போவதில்லை. மாறாக அது கணிசமான சர்வதேச அரசசட்ட விதிகளின் கீழ் நெறிப்படுத்தப்படும் ஒரு முதலாளித்துவமாகவே இருக்கும்.

இத்தோடு இணைந்த வகையில் எதிர்காலத்தை தீர்மானிக்கப்போகும் இரண்டாவது ஒரு விடயமாக நிழற்பொருளாதாரத்தின் (Shadow Economy) எழுச்சி காணப்படுகிறது.

நிழற்பொருளாதாரம் அல்லது முறைசாராப் பொருளாதாரம் உலகம் முழுவதும் காணப்படும் ஒரு மிகப்பெரிய துறையாகவே உள்ளது. உலகம் பூராகவும் 1.8 பில்லியனுக்கும் மேலான எண்ணிக்கையினருக்கு தொழில்வாய்ப்புகளை வழங்கியுள்ளது. அதன் பருமன் 10 டிரில்லியன் அமெரிக்க டொலராகும். இது அமெரிக்கப் பொருளாதாரத்தின் பருமனுக்கு மட்டுமே இரண்டாம் இடத்தில் உள்ளது. எதிர்வரும் 10 ஆண்டுகாலப்பகுதியில் இதன் அளவு அமெரிக்கப் பொருளாதாரத்தின் அளவினை மிஞ்சிவிடலாம் எனலாம்.

நடைபாதை வியாபாரிகளில் இருந்து ஆரம்பித்து அரசின் வரி சேகரிப்பாளரினதும் நிருவாக விதிமுறைகளின் கட்டுப்பாடுகளில் இருந்தும் முற்றாக விலகி நிற்கும் இத்துறையானது தற்போது சட்டவாக்கம், வீட்டுத்துறைச் சேவைகள், திருத்த வேலைகள், போக்குவரத்து, கழிவகற்றல், பொருள் விற்பனை - இலத்திரனியல் உபகரணங்கள், செல்லிடப் பேசிகள், உடுபுடவைகள் போன்ற சகலதுறைகளிலும் ஈடுபட்டு வருவதைக் காண்கிறோம்.

முறைசாராத் துறையினை நாம் கறுப்புச் சந்தை அல்லது பாதாள உலகப்பொருளாதாரத்துடன் ஒப்பிட்டு குளப்பிக்கொள்ளக்கூடாது. முறைசாராத் துறையானது சட்டரீதியான ஒன்றாகும். அதேவேளை, நிறுவன ரீதியான முதலாளித்துவத்தின் கால்கள் தள்ளாடும் நிலையில் நிறுவன முறைமை சார்ந்த முதலாளித்துவத்தின் சட்ட ரீதியான போட்டியாளராகவும் இத்துறை காணப்படுகிறது.

நிழற்பொருளாதாரம் குறித்த கோட்பாட்டு ரீதியான ஆய்வுகள் மிக அண்மைக்காலத்திலேயே மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன், கடந்த 5 வருட காலப்பகுதியில் மட்டுமே அவை மேற்கொள்ளப்பட்டன.

இப்பொருளாதாரம் சிலவேளை D முறைமை (System D) என அழைக்கப்படுகிறது. இது பிரெஞ்சு சொல்லான Systeme D என்பதில் இருந்து பெறப்பட்டது. இவ்வார்த்தையானது ஆபிரிக்காவின் பிராங்கோபோன் (Francophone) மற்றும் கருபியன் நாடுகளின் தெருக்களிலும் I' Economie de la debroullardise என அறியப்பட்டது.

debrouillard எனும் பதம் வளம் பொருந்திய முயற்சியுடன் கூடிய ஒரு மனிதனைக் குறிக்கும். இப்பதமானது பாதைகளில் பயன்படும் விதமாக என System D இனிப்பூட்டப்பட்டது.

இலங்கையில் நாம் நடைபாதை வியாபாரிகள், கைவினைஞர்கள், சிசிறு ஒப்பந்தக்காரர்கள், போக்குவரத்து முகவர்கள் போன்றவர்கைக் கொண்ட இத்துறைகுறித்து நன்கு பரிச்சயமுடையவர்களாவோம். இத்தகைய முறைசாரா சிறு பூர்ஷுவா பிரிவானது பொருளாதார ரீதியானதும் அரசியல் ரீதியானதுமான ஒரு சக்தியாகும். ஆனால், பூர்ஷுவாக்கள், வேலைசெய்யும் வகுப்பினர் மற்றும் விவசாயிக்கு எவ்வகையிலும் முக்கியத்துவம் குறைபடாத இத்துறை பற்றி மார்க்சியவாதிகள் ஆராய்ந்ததில்லை. ■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சேர்பியா – கொசோவோ உடன்படிக்கை

– ராகுல்ஜி

## பால்கன் பிராந்தியத்தில் ஒரு சரித்திர முக்கியத்துவ அரசியல் நிகழ்வு




***புருசெல்ஸில் நேட்டோ தலைமையகத்தில் 2013 ஏப்ரில் 19, கதரீன் அஷ்டனின் முன்னிலையில் சேர்பிய பிரதமர் இவிகா டசிக்கும் (இடது) கொசோவோ பிரதமர் ஹாஷிம் தசியும் உடன்படிக்கையில் கைச்சாத்திட்ட காட்சி***

முன்னாள் யூகோஸ்லாவிய சம்மேளனத்தில் எஞ்சியிருக்கும் பெரிய நாடு சேர்பியா. இந்த சேர்பியாவில் இருந்து 2008 பெப்ரவரியில் சுதந்திரப் பிரகடனம் செய்தது அல்பேனிய இனத்தவர்களை அதிகப் பெரும்பான்மையினராகக் கொண்ட கொசோவோ மாகாணம். சுதந்திரப் பிரகடனம் செய்த அரசொன்றை அங்கீகரிப்பதில் இருக்கக்கூடிய தகுதிகள் பற்றி அன்று பரந்தளவில் விவாதங்கள் மூண்டிருந்தன.

கொசோவோவை சுதந்திர நாடாக முதலில் அங்கீகரித்தது அமெரிக்கா. சேர்பியாவின் நம்பிக்கைக்குரிய நேச நாடான ரஷ்யா அந்தச் சுதந்திரப் பிரகடனத்தை திட்டவட்டமாக நிராகரித்தது. அமெரிக்காவையடுத்து ஐரோப்பிய ஒன்றியத்தின் பிரதான நாடுகளான பிரிட்டன், பிரான்ஸ், ஜேர்மனி மற்றும் இத்தாலி ஆகியவை கொசோவோவை அங்கீகரித்தன. சுதந்திரப்பிரகடனத்துக்கு அங்கீகாரம் வழங்குவது தொடர்பில் தீர்மானம் மேற்கொள்ளும் பொறுப்பை ஐரோப்பிய ஒன்றியம் அதன் உறுப்பு நாடுகளிடமே தனித் தனியாக விட்டுவிட்டது.

பிரிவினைகோரும் அரசியல் இயக்கங்களின் கிளர்ச்சிகளை எதிர்நோக்கியிருந்த நாடுகள் கொசோவோவை அங்கீகரிக்க மறுத்தன. கொசோவோவுக்கு வழங்கப்படக்கூடிய அங்கீகாரம் தவறானதொரு முன்னுதாரணமாக அமைந்துவிடுமென்று அச்சம் வெளியிட்ட அந்த நாடுகள் சேர்பியாவுக்கும் கொசோவோவிற்கும் இணக்கப்பாடு இல்லாத நிலையில் செய்யப்பட்ட சுதந்திரப்பிரகடனத்துக்கு ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபையின் தெளிவான ஆணையும் கிடையாது என்று தங்கள் நிலைப்பாட்டுக்கு அன்று நியாயம் கற்பித்தன.

கொசோவோ பாராளுமன்றம் சுதந்திரப் பிரகடனம் செய்த உடனடியாகவே கடும் எதிர்ப்பை வெளிக்காட்டிய நாடுகளில் இலங்கையும் ஒன்று. உறுப்பு நாடுகளினதும் இறைமையையும் ஆட்புல ஒருமைப்பாட்டையும் அங்கீகரிக்கும் ஐக்கிய நாடுகள்

> ஒரு காலத்தில் உலகின் மிகவும் துடிப்பான பல்லின அரசுகளில் ஒன்றாக விளங்கிய முன்னாள் யூகோஸ்லாவியா பல நாடுகளாகச் சிதறியமை இனத்துவ மேலாதிக்கத்தை நிலை நிறுத்துவதற்கான நாட்டம் எப்போதும் இனவாதிகளையே திருப்பித் தாக்குகிறது என்பதற்கான சான்று

சாசனத்தை மீறுவதாக கொசோவோ பிரகடனம் அமைந்திருந்தது என்றும் சேர்பியாவின் பெரும்பான்மையான மக்களின் சம்மதமின்றியே சுதந்திரப் பிரகடனம் செய்யப்பட்டிருக்கிறது என்றும் இலங்கை அதன் அறிக்கையில் அன்று குறிப்பிட்டிருந்தது.

எமது அயல்நாடான இந்தியா சுதந்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரப் பிரகடனத்தை அங்கீகரிப்பதற்கு அவசியமான மூன்று நிபந்தனைகளை கொசோவோ பூர்த்தி செய்யவில்லை என்று தெரிவித்திருந்தது. தெளிவாக வரையறுக்கப்பட்ட பிராந்தியம், மக்களால் ஏற்றுக்கொள்ளப்படக்கூடியதும் முறையாக அமைக்கப்பட்டதுமான ஒரு அரசாங்கம், ஆளுகைக்குட்படுத்தப்படும் பிராந்தியத்தை முழுமையாகக் கட்டுப்பாட்டின் கீழ் வைத்திருக்கக்கூடிய நிருவாகக் கட்டமைப்பு ஆகியவற்றை கொசோவோ கொண்டிருக்காதவரை அதை ஒரு போதுமே அங்கீகரிக்கப் போவதில்லை என்பதே இந்திய நிலைப்பாடு. சீனாவும் கொசோவோவை அங்கீகரிக்கவில்லை.

சுமார் மூன்று வருடங்களுக்கு முன்னர் சர்வதேச நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பொன்றில் ஒரு தலைப்பட்ச சுதந்திரப்பிரகடனத்தை 2008 பெப்ரவரி 17இல் செய்ததன் மூலம் கொசோவோ சர்வதேச சட்டங்களை மீறவில்லை என்று குறிப்பிட்டிருந்தது.

நிலைவரம் இவ்வாறாக இருக்கையில், சுதந்திரப் பிரகடனம் செய்யப்பட்டு ஐந்துவருடங்களுக்கும் கூடுதலான காலம் கடந்துவிட்ட நிலையில், கடந்த மாதம் 19 ஆம் திகதி ஐரோப்பிய ஒன்றியத்தின் அனுசரணையின் கீழ் சேர்பியாவும் கொசோவோவும் உடன்படிக்கையொன்றில் கைச்சாத்திட்டதைக் காணக்கூடியதாக இருந்தது. இவ்வுடன்படிக்கை பால்கன் பிராந்தியத்தையும் ஐரோப்பிய ஒன்றியத்தையும் பொறுத்தவரையில் சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த ஒரு அரசியல் நிகழ்வாக அமைகிறது என்பதில் சந்தேகமில்லை.

ஐரோப்பிய ஒன்றியத்தின் வெளிவிவகாரம் மற்றும் பாதுகாப்புக் கொள்கைக்கான உயர் பிரதிநிதி கதரீன் அஷ்ரனின் மத்தியஸ்தத்துடன் 2011 மார்ச்சில் ஆரம்பிக்கப்பட்ட பேச்சுவார்த்தைகளின் 10 ஆவது சுற்றின் இறுதியில் சேர்பிய பிரதமர் இவிகா டசிக்கும் கொசோவோ பிரதமர் ஹாஷிம் தசியும் உடன்படிக்கையில் கைச்சாத்திட்டனர். இதைச் செய்து கொள்வதற்கான செயன்முறைகள் நெருக்கடிகள் நிறைந்ததாகவே இருந்தன. அண்மையில் கூட ஏப்ரில் 8 ஆம் திகதியளவில் சேர்பியா, கொசோவோவில் உள்ள சேர்பிய இனத்தவர்களுக்கு போதியளவில் சுயாட்சி வழங்கப்படவில்லை என்று கூறி உடன்படிக்கை வரைவை நிராகரித்தது என்பது குறிப்பிடத்தக்கது.


கைச்சாத்திடப்பட்டிருக்கும் உடன்படிக்கையின்படி கொசோவோ மீதான சட்டபூர்வ அதிகாரத்தைச் சேர்பியா கைவிடுகிறது என்பதே அர்த்தமாகும். ஆனால், சேர்பியா இன்னமும் கொசோவோவின் சுதந்திரத்தை அங்கீகரிக்கவில்லை. வட கொசோவோவில் சுமார் 50 ஆயிரம் அல்லது அதற்கும் சற்றுக்கூடுதல் எண்ணிக்கையில் சேர்பிய இனத்தவர்கள் வாழ்கிறார்கள். உடன்படிக்கையின் பிரகாரம் இந்த சேர்பிய இனத்தவர்களுக்கு கொசோவோ அதன் நிருவாக முறைமைக்குள் சொந்த பொலிஸையும் நீதித்துறைப் பிரதிநிதிகளையும் வழங்க வேண்டும். கொசோவோவின் 18 இலட்சம் மக்கள் மத்தியில் வேறுபகுதிகளில் இன்னொரு 90 ஆயிரம் சேர்பிய இனத்தவர்கள் வாழுகிறார்கள்.

ஐரோப்பிய ஒன்றியத்தின் உறுப்புரிமையைப் பெறுவதற்கான பேச்சுவார்த்தைகளை சேர்பியா ஆரம்பிப்பதற்கு இந்த உடன்படிக்கை வழியைத் திறந்துவிடுகிறது என்பதிற் சந்தேகமில்லை. உறுப்புரிமையைப் பெறுவதற்கான பல்வேறு நிபந்தனைகளை பெல்கிரேட் ஏற்கனவே பூர்த்தி செய்திருக்கிறது. முன்னாள் ஜெனரல் ரட்கோ மிலாடிக்கையும் முன்னாள் பொஸ்னிய சேர்பிய ஜனாதிபதி ரடோவான் கராட்சிக்கையும் கைது செய்து கையளித்தமை சேர்பிய பூர்த்திசெய்த அத்தகைய நிபந்தனைகளில் ஒன்று. இப்போது அவர்கள் இருவரும் போர்க் குற்றங்கள் மற்றும் மனித குலத்திற்கு எதிரான குற்றச் செயல்கள் தொடர்பிலான குற்றச்சாட்டுகளின் பேரில் நெதர்லாந்தின் ஹேக் நகரில் உள்ள "முன்னாள் யூகோஸ்லாவியாவுக்கான சர்வதேச குற்றவியல் விசாரணைமன்றின்" (International criminal Tribunal for the Former Yugoslavia -ICTY) குற்றவாளிக் கூண்டில் நிற்கிறார்கள்.

கொசோவோவில் உள்ள சேர்பியர்களின் புதிய உரிமைகளை கொசோவோ பாதுகாக்குமா, இல்லையா என்பதிலேயே உடன்படிக்கையின் வெற்றி, தோல்வி தங்கியிருக்கிறது. 1990களில் இடம்பெற்ற இனப்படுகொலை, யுத்தங்கள் பிராந்தியத்தின் சகல மக்கள் மத்தியிலும் படுபயங்கரமான காயங்களை விட்டுச் சென்றிருக்கின்றன. முன்னாள் கொசோவோ விடுதலை இராணுவம் உட்பட அந்த யுத்தங்களில் சம்பந்தப்பட்ட அரசாங்கங்கள் மற்றும் இயக்கங்களில் பெரும்பாலானவற்றின் கைகள் சுத்தமானவையல்ல, இரண்டாவதாக, பொது நிறுவனங்களின் செயற்பாடுகளில் நேர்மை உறுதிப்படுத்தப்பட வேண்டுமென்று ஐரோப்பிய ஒன்றியம் விதிக்கின்ற நிபந்தனைகளைப் பூர்த்தி செய்வதென்பது சேர்பியாவையும் கொசோவோவையும் பொறுத்தவரை சாதிப்பதற்கு மிகவும் கஷ்டமானதாகும். சில பெரிய ஐரோப்பிய நாடுகளின் நோக்கம் தெளிவானதாக இருந்தாலும், உடன்படிக்கை கொசோவோவின் இறைமை சம்பந்தப்பட்ட விவகாரத்தை கவனித்துக் கையாளவில்லை. பல்வேறு காரணங்களை தங்கள் நிலைப்பாட்டிற்கான நியாயப்பாடுகளாக முன்வைத்து இந்தியா உட்பட பல நாடுகள் கொசோவோவின் சுதந்திர பிரகடனத்தை இன்னமும் அங்கீகரிக்கவில்லை. அவற்றில் ஐந்து ஐரோப்பிய ஒன்றிய நாடுகளும் அடங்குகின்றன. எவ்வாறெனினும் இதுவரை 99 நாடுகள் கொசோவோவை அங்கீகரித்துவிட்டன. 2008 பெப்ரவரி 17 செய்யப்பட்ட ஒரு தலைப்பட்ச கொசோவோ சுதந்திரப்பிரகடனம் அன்றைய சேர்பிய அரசாங்கத்துக்கு கடும் சீற்றத்தை ஏற்படுத்தியது.

*(51ஆம் பக்கம் பார்க்க...)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org
பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்.



# அமெரிக்க பொலிஸும் இந்திய பொலிஸும்

ரவிசங்கர்

பொஸ்டன் மரதன் குண்டு வெடி ப்புகளுக்காக 19 வயதான செச்னிய இளைஞன் ஷோகார் சார்னேவ் கைது செய்யப் பட்டபோது அமெரிக்கர்களுக்கு ஒரு தேசிய வீரர் கிடைத்தார். அதுதான் பொஸ்டன் பொலிஸ். ஷோகாரின் படங்களை சமஷ்டி புலனாய்வுப் பணியகம் (எவ்.பி.ஐ.) அமெரிக்கா பூராகவும் வெளியிட்டு 26 மணித்தி யாலங்கள் கடந்த நிலையில் பொஸ் டன் பொலிஸ் திணைக்களம் 'பிடிபட் டான்!!! வேட்டை முடிந்துவிட்டது தேடுதல் முடிந்துவிட்டது பயங்கரம் முடிந்துவிட்டது. அத்துடன் நீதி வென்றுவிட்டது. சந்தேகநபர் காவ லில்' என்று ருவிட்டரில் தகவல் வெளியிட்டது.

மனிதவேட்டையின் விளைவாக மக்களுக்கு கடுமையான அசௌகரி யங்கள் ஏற்பட்டன. பொஸ்டன் மெட்ரோபோலிட்டன் பகுதி முழுவ தும் மக்கள் நடமாட்டத்துக்கு முழு [illegible] தடை செய்யப்பட்டது. பொஸ்டன் பொலிஸார் வீடுவீடாக தேடுதல் நடத்தினர். சார்னேவ் கைது செய்யப்பட்ட இடம் கொண்டாட்டப் பகுதியாக மாறியது. நகரின் பிரஜை கள் வீதிகளில் நிறைந்து கைதட்டி ஆரவாரம் செய்தனர். சார்னேவைக் கைது செய்வதற்கான நடவடிக்கை யில் ஈடுபட்ட முப்பதுக்கும் அதிக மான ஹெல்மட் அணிந்த பொலி ஸாரைப் பார்த்து 'உங்களுக்கு நன்றி உங்களுக்கு நன்றி' என்று கூறி மக் கள் பாராட்டினார்கள். 8 வயதுச்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சிறுவன் மார்ட்டின் றிச்சர்ட் உட்பட குண்டுவெடிப்பில் பலியானவர்களுக்காக பொஸ்டனில் நடத்தப்பட்ட நினைவு ஆராதனையில் ஏப்ரில் 18 ஆம் திகதி கலந்துகொண்ட ஜனாதிபதி பராக் ஒபாமா குண்டுத் தாக்குதல் சூத்திரதாரிகள் இருவரையும் வேட்டையாடப்போவதாகச் சூளுரைத்தார். 'ஆம், உங்களை நாம் கண்டுபிடிப்போம். ஆம், நீங்கள் நீதிக்கு முகங்கொடுப்பீர்கள்' என்று கூறியிருந்தார். அதை அவர்கள் செய்தார்கள்.

பொஸ்டனில் குண்டுகள் வெடித்த அதேதினம் மாலைநேரம் ஒரு கண்டத்துக்கு அப்பால் ஒரு சிறுமி (மார்ட்டின் றிச்சார்ட்டை விடவும் மூன்று வயது இளையவள்) டில்லியில் சேரிப்பகுதியொன்றில் உள்ள தனது வீட்டின் முன்பாக விளையாடிக் கொண்டிருந்த போது காணாமற் போய்விட்டாள். இரு நாட்கள் கழித்து அவளது சொந்த வீட்டின் கீழ்த்தளத்தில் மறைவான பகுதியொன்றுக்குள் இருந்து வெளிவந்த வேதனை முனகலைக் கேட்டு பாதையால் சென்றவர்கள் கொடுத்த தகவலையடுத்து அயலவர்களினால் மீட்கப்பட்டாள். அவள் காணாமற் போய்விட்டதாக முறைப்பாட்டை டில்லி பொலிஸ் பதிவு செய்தது. ஆனால், ரோந்துப் பொலிஸார் எவருக்குமே அவள் உதவிகேட்டு அழுத குரல் கேட்கவில்லை. அந்தப் பகுதியில் கிரமமாக பொலிஸார் ரோந்து செல்வதுண்டு. மூன்று நாட்களாக அவள் மறைத்து வைக்கப்பட்டு பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்டதுடன், காட்டுமிராண்டித்தனமாகக் கொடுமைப் படுத்தப்பட்டாள். மெழுகுதிரியால் அவள் உடலில் சூடுபோடப்பட்டதுடன், உடைந்த போத்தல்களினால் கீறிக் காயப்படுத்தப்பட்டாள்.

கொடுங்காமவெறியன் பீஹாரில் இருந்து வந்து டில்லியில் வேலை செய்பவன் பொஸ்டனில் சார்னேவ் கைது செய்யப்பட்ட தினமே இவனும் கைது செய்யப்பட்டான். ஆனால், டில்லி வீதிகளில் இறங்கிய மக்கள் ஆத்திரத்தில் கொதித்தெழுந்தார்களே தவிர, கொண்டாட்டங்களில் இறங்கவில்லை. பொலிஸாரைப் பாராட்டவில்லை. அதேவேளை, டில்லியில் கடந்த டிசம்பரில் மருத்துவ மாணவி ஒரு கும்பலினால் பாலியல் வல்லுறவுக்குட்படுத்தப்பட்டு கொலை செய்யப்பட்ட விவகாரம் மிகவும் அவலமான முறையில் கையாளப்பட்டதற்குப் பிறகு பொது மக்களுடனான உறவுகளைப் பொறுத்தவரை காங்கிரஸ் அரசாங்கம் இப்போது படிப்பினைகளைப் பெற்றிருப்பதைக் காணக்கூடியதாக இருக்கிறது. பிரதமர் மன்மோகன் சிங் விரைந்து தனது கவலையை வெளியிட்டார். சிறுமி சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டிருந்த ஆஸ்பத்திரிக்கு அரசியல்வாதிகள் விரைந்தனர்.

புள்ளி விபரங்களின்படி இந்தியா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வில் 24,206 பாலியல் வல்லுறவுச் சம்பவங்கள் இடம்பெற்றதாக அறிவிக்கப்பட்டன. இந்த எண்ணிக்கை அமெரிக்காவில் இடம்பெற்றிருக்கக் கூடிய பாலியல் வல்லுறவுச் சம்பவங்களின் எண்ணிக்கையை விடவும் பெருமளவுக்கு குறைவானதாகும். 2010இல் ஆரம்பமான National intimate partner and sexual violence survey என்றழைக்கப்பட்ட ஆய்வொன்றின் மூலம் அமெரிக்கப் பெண்களில் மூன்றில் ஒரு பங்கினர் பாலியல் வல்லுறவு, தாக்குதல் அல்லது மறைந்திருந்து செய்யப்படும் அங்கசேஷ்டை போன்ற குற்றச் செயல்களினால் பாதிக்கப்படுகிறார்கள் என்று கண்டறியப்பட்டிருக்கிறது. வருடாந்தம் சுமார் 13 இலட்சம் அமெரிக்கப் பெண்கள் பாலியல் வல்லுறவுக்கு அல்லது பாலியல் வல்லுறவு முயற்சிகளினால் பாதிக்கப்படுகிறார்கள். சமஷ்டி புலனாய்வுப் பணியகத்தின் (எவ்.பி.ஐ.) புள்ளி விபரங்களின் படி 2010இல் ஆக 84,767 பாலியல் வல்லுறவுச்சம்பவங்கள் மாத்திரமே அறிவிக்கப்பட்டிருந்தன.

இருந்தும் கூட, பெண்களுக்கு எதிரான வன்முறையைப் பொறுத்தவரை இந்தியாவையும் அமெரிக்காவையும் பாரிய கலாசார இடைவெளி பிரிக்கிறது. இது விடயத்தில் சட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்குப் பொறுப்பாக இருப்பவர்களின் பாத்திரம் முக்கியமாக (role of law enforcement) கவனிக்கப்பட வேண்டியதாகிறது.

டில்லியில் அந்த ஐந்துவயதுச் சிறுமியின் பெற்றோர் முதல் முறைப் பாட்டைப் பதிவு செய்ய பொலிஸ் நிலையத்துக்குச் சென்றபோது, விவகாரத்தைப் பெரிதுபடுத்த வேண்டாமென்று கேட்ட பொலிஸார் 2000 ரூபா பணத்தைக் கொடுத்தார்கள். சிறுமி உயிருடன் இருப்பதற்காக கடவுளுக்கு நன்றி சொல்லுங்கள் என்றும் பொலிஸார் அவர்களிடம் கூறினார்கள். ஒரு நாள் கழித்து, (சிறுமி சிகிச்சை பெற்றுக்கொண்டிருந்த) ஆஸ்பத்திரிக்கு முன்னால் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட பெண்களில் ஒருவருக்கு பொலிஸ் அதிகாரியொருவர் கன்னத்தில் அறைந்தார். நான்கு மாதங்களுக்கு முன்னர் மருத்துவ மாணவி கும்பலினால் பாலியல் வல்லுறவுக்குட்படுத்தப்பட்டு கொலை செய்யப்பட்ட கொடூரத்துக்கு எதிராக இடம்பெற்ற ஆர்ப்பாட்டங்களின் போது இந்தியா கேட் அருகில் கூடிய மாணவர்களைக் கலைக்க பொலிஸார் தடியடிப் பிரயோகத்தைச் செய்ததுடன், வாட்டர்கனன்களையும் பாவித்து தாக்குதல் நடத்தினர். பொலிஸாரின் நடவடிக்கைகள் என்று வரும்போது இரு நாடுகளுக்கும் இடையே இவ்வளவு வேறுபாடு கொண்டு வருவது எது?

இந்தியாவில் உள்ளதைப் போன்ற ஊழல்தனமான பொலிஸ் அமைப்பையும் இந்தியாவினதும் அமெரிக்காவினதும் காலனித்துவ ஆதிக்க நாடாக விளங்கிய பிரிட்டனே ஸ்தாபித்தது என்பது ஒரு முரண்நகையான விடயமாகும். சட்டம் ஒழுங்கின்மை காரணமாக சாம்ராச்சியத்துக்கான வரிகளைச் சேகரிப்பது பல மாவட்டங்களில் கஷ்டமான காரியமாக மாறியபோது கொத்தவால் முறையை (தலைமை ஊர்க்காவலர் முறை) பிரிட்டிஷார் ஏற்படுத்தினர். கொத்தவால்களுக்கான சம்பளத்தை சாம்ராச்சியம் கொடுக்கவில்லை. அவர்கள் தங்களது சம்பளத்தை மக்களிடமிருந்தே சேகரிக்க வேண்டியிருந்தது. பெருஞ் செல்வாக்குடைய நிலப் பிரபுக்களைத் தவிர ஏனைய சகலரையும் அச்சுறுத்திப் பணம் பறிப்பதே சிறந்த வழியாக இருந்தது. காலனித்துவத்துக்குப் பின்னரான ஒரு இலஞ்சப் பாரம்பரியம் இன்றும் கூட தொடருகிறது.

சார்னேவ் கைது செய்யப்பட்ட பிறகு பொஸ்டன் நகர மேயர் 'இன்றிரவு பொஸ்டன் மக்கள் அமைதியாகத் தூங்கலாம்' என்று கூறினார். இந்தியாவின் பெண்களும் சிறுமிகளும் நிம்மதியாகத் தூங்க முடியுமா? ■

---

*(12ஆம் பக்கத்தொடர்ச்சி)*

இருப்பது துரதிர்ஷ்டவசமானது.

சட்டத்தின் ஆட்சி மீண்டும் நிலை நிறுத்தப்படுவதை உறுதிசெய்ய வேண்டியது மேலும் கூடுதல் முக்கியத்துவம் வாய்ந்ததாகும். அண்மையில் இடம்பெற்றிருக்கக் கூடிய பல சம்பவங்கள் இனமோதலுடன் தொடர்புபட்டவையல்ல என்ற போதிலும், எம்மை சட்டம் ஒழுங்கு இல்லாத ஒரு சமுதாயத்தினராகக் காண்பிப்பதற்கு அவற்றைப் பயன்படுத்த முடியும் என்பது எனது உறுதியான அபிப்பிராயமாகும். எனவே பொலிஸை பலப்படுத்தி, கடுங்கொடிய குற்றச் செயல்கள் தொடர்பில் முறையான விசாரணைகள் நடத்தப்பட்டு, வழக்குத் தொடரப்படுவதை உறுதிசெய்வதற்கு நாம் விரைந்து செயற்பட வேண்டும். இனங்களுக்கிடையேயும் மதங்களுக்கிடையேயும் பதற்ற நிலையை உருவாக்க முயற்சிப்பவர்கள் மீது கடுமையான நடவடிக்கைகள் எடுக்கப்படுவது உறுதி செய்யப்படவேண்டும். அமைதியைக் குலைப்பதில் நாட்டம் கொண்டவர்கள் யாராக இருந்தாலும் அவர்கள் விடயத்தில் கடுமையான முறையில் நடந்துகொள்ள வேண்டியது முக்கியமானதாகும்.

தற்போது சட்டத்தை நடைமுறைப் படுத்துவதில் நாம் இரட்டைத்தன்மையை பின்பற்றுகின்ற போக்கு ஆழமாக வேரூன்றியிருப்பதை எம் மத்தியில் காணக்கூடியதாக இருக்கிறது. உள்நாட்டுப் போரின் 2007-2009 கால கட்டத்தில் எமக்கு எதிராக மேற்குலகம் செய்த நகர்வுகளை வெற்றிகரமாகக் கையாளுவதற்கு எம்மை அனுமதித்த தார்மீக மேம்பாட்டு நிலையை மீண்டும் நாம் பெறவேண்டுமானால் இந்தப் போக்கு மாறவேண்டும். தயான் ஜெயதிலக போன்ற அறிவுத்திறனும் கோட்பாட்டுப் பற்றுறுதியும் கொண்டவர்களை ஓரங்கட்டுவதைவிடுத்து, அவர்களைப் பயன்படுத்தி நல்ல விளைவுகளைப் பெறவேண்டும்! ■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிராந்திய விவகாரம்

**இந்து சமுத்திரத்தில் பொருளாதார வாய்ப்புகளில் சீனா தொடர்ந்து அதிகரித்த வகையில் நாட்டத்தைக் காட்டும். சிறிய நாடுகள் அவற்றின் பொருளாதாரங்களை அபிவிருத்தி செய்வதற்காக சீனாவின் உதவிகளை ஏற்றுக்கொள்ளும். இதை பிராந்தியத்தில் இந்தியா அதன் கேந்திர முக்கியத்துவ அனுகூலத்தை இழந்து கொண்டு வருவதாக அர்த்தப்படுத்தலாகாது**



நிலாந்தி சமரநாயக்கா




# இது இன்னும் இந்திய சமுத்திரமே

இந்து சமுத்திரத்தில் இந்தியாவின் செல்வாக்கு வீழ்ச்சி கண்டுவருகிறதா? கடந்த நவம்பர் மாதம் இந்தியக் கம்பனி ஒன்றுடனான விமான நிலைய அபிவிருத்தி ஒப்பந்தத்தை மாலைதீவு அரசாங்கம் ரத்துச் செய்ததையடுத்து சில ஆய்வாளர்கள் இந்த முடிவுக்கே வந்திருக்கிறார்கள். மாலைதீவு உட்பட இந்து சமுத்திரத்தின் சிறிய நாடுகளுடன் சீனாவின் ஊடாட்டம் அதிகரிக்கத் தொடங்கியிருப்பதனால் இந்த அக்கறை மேலும் வலுப்படுகிறது. சீனாவிற்கும் இந்தியாவிற்கும் இடையேயான 1962 போரையும் அதன் பின்னரான நிகழ்வுப்போக்குகளையும் அடிப்படையாகக் கொண்டு நோக்கும் போது, இந்தியாவைப் பொறுத்தவரை அதன் அயலகத்தில் சீனாவின் நோக்கங்கள் தொடர்பில் சந்தேகம் கொள்வதற்கு உரிமை இருக்கிறது. ஆனால், சிறிய அயல்நாடுகளுடன் அதிகரித்துவரும் பாதுகாப்பு ஒத்துழைப்பு காரணமாகவும் அதன் கடற்படை விரிவாக்க ஆற்றல்கள் காரணமாகவும் பிராந்தியத்தில் இந்தியாவின் நிலை தொடர்ந்தும் உறுதியானதாகவே விளங்குகிறது என்பதே உண்மையானதாகும். அண்மையில் மாலை தீவின் முன்னாள் ஜனாதிபதி முஹமட் நஷீட்டை கைதுசெய்வதற்கு நீதி மன்றம் பிறப்பித்த உத்தரவை அடுத்து அவர் மாலேயில் உள்ள இந்திய உயர்ஸ்தானிகராலயத்திற்குள் தஞ்சமடைவதற்கு மேற்கொண்ட தீர்மானம் புதுடில்லியின் செல்வாக்கை அடிக்கோடிட்டுக் காட்டுகிறது.

இந்தியா ஒரு வளர்ச்சியடைந்து வருகின்ற கடற்படை வல்லாதிக்க நாடாகும். இந்து சமுத்திரத்தில் அது பூகோள ரீதியில் இயல்பான அனுகூலத்தைக் கொண்டிருக்கிறது. இதற்கு மேலதிகமாக பிராந்தியத்தில் உள்ள சிறிய நாடுகளுடன் ஆழமான இன மற்றும் வரலாற்று உறவுகளினால் இந்தியா பிணைக்கப்பட்டிருக்கிறது. மாலைதீவு ஜனாதிபதி முஹமட் வஹீட் இந்தியாவுடன் முன்னுரிமை உறவு முறை குறித்து பேச்சுவார்த்தைகளை நடத்தியிருக்கிறார். திருவனந்தபுரத்திற்கும் மாலைதீவிற்குமிடையே 20 மைல்கள் மாத்திரமே இருக்கின்றன. இதை எதனாலும் மாற்றிவிட முடியாதென்று இரு நாடுகளுக்கும் இடையேயான நெருக்கத்தைப் பற்றி குறிப்பிட்ட முன்னாள் மாலைதீவு வெளியுறவு அமைச்சர் ஒருவர் இவ்வாறு தெரிவித்தார். பிராந்தியத்தில் உள்ள நாடுகளின் பாதுகாப்புத் தொடர்பில் தனக்கு ஒரு கடப்பாடு இருப்பதாக இந்தியா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உணர்கிறது. இலங்கையிலும் மாலை தீவிலும் இராணுவ நடவடிக்கைக ளின் ஊடாக இந்தக் கடப்பாட்டை செயல்முறையிலும் இந்தியா வெளிக் காட்டியிருந்தது. 1987 ஆம் ஆண்டு இலங்கையின் உள்நாட்டுப் போரில் இந்தியா அமைதி காக்கும் படையின் மூலம் புதுடில்லி தலையிட்டது. அதேபோன்று 1988இல் மாலை தீவில் இடம்பெற்ற ஆட்சிக் கவிழ்ப்பு சதிமுயற்சியை முறியடிக்க இந்திய ஆயுதப் படைகள் தலையிட்டன. 2004 சுனாமிக்குப் பிறகு இலங்கைக் கும் மாலைதீவுக்கும் இந்தோனேசி யாவிற்கும் அவசர நிவாரண உதவி ணிப்பு, கடல்வலய ஆய்வுகள், பயிற் சிகளுக்கு உதவி வழங்குவதன் மூல மாக பாதுகாப்பைப் பேணுவதற்கு உதவுகின்றன. அத்துடன் கடல்சார் இராணுவ உபகரணங்களையும் திரு த்த வேலைகளுக்கான உதவிகளை யும் வழங்குகின்றன. சீனா இத்த கைய கடல்சார் உதவிகளைச் செய்ய வில்லை.சீஷெல்ஸுக்கு இரண்டு டோ ராந்து படையணிகளை வழங்கியது டன், பயிற்சிகளையும் கொடுக்கிறது.

'டோஷ்தி' என்ற பெயரில் மாலை தீவுடனான இராணுவப் பயிற்சியை கடந்த ஏப்ரிலில் இந்தியா முடித்துக் கொண்டது. இருதசாப்தங்களாக சமுத்திர நாடுகளுடனான இந்தியா வின் வலுவான பாதுகாப்பு உறவு களை மீள வலியுறுத்திக்காட்டுகின்ற னவே தவிர இந்தியாவின் செல் வாக்கு வீழ்ச்சி காணவில்லை.

இந்தியா அதன் அயலகத்திலுள்ள நாடுகளுடன் மேற்கொள்கின்ற பாது காப்பு நடவடிக்கைகளில் காணப்படு வதைப் போன்று பாதுகாப்பு ஒத்து ழைப்பு என்பது ஒரு வழமையான செயற்பாடே. இந்து சமுத்திரத்தில் அத்தகைய பாதுகாப்பு ஒத்துழைப்பு தற்போதைய வடிவில் எந்த அச்சத் தையும் தோற்றுவிக்கவில்லை. இந் திய நிறுவனத்துடனான விமான

**இந்து சமுத்திர தீவு நாடுகள் அவற்றின் பொருளாதாரத்தை அபிவிருத்தி செய்வதற்கு விடுக்கும் உதவிக்கோரிக்கைகளை எல்லா வேளைக ளிலும் ஏற்றுக்கொள்ளக்கூடியதாக இந்தியா இருப்பதில்லை. அதனால் சீனா அத்தகைய உதவியை வழங்கும் போது இந்தியா அதிர்ச்சியடையத் தேவையில்லை. அம்பாந்தோட்டையில் துறைமுகத்தை கட்டுவது குறித்து இந்தியாவுடனேயே முதலில் இலங்கை ஆலோசித்தது**

களை முதலில் வழங்கியது இந்திய கடற்படையேயாகும்.

இத்தகைய பிரத்தியேகச் சூழ்நிலை களுக்கு அப்பால்,இந்தியா இந்து சமுத்திரத்தின் தீவு நாடுகளுடன் நீடி த்த இராணுவ உறவுகளையும் கொண் டிருக்கிறது. அந்த உறவுகள் தொடர் ந்து வளர்ச்சியடைந்த வண்ணமே இருக்கின்றன. சனத்தொகையில் மூன்றில் இரண்டு பங்கினரை இந்திய வம்சாவளியினராகக் கொண்ட மொரீசியஸில் தேசிய காவலர் படையை நிர்வகிக்க அதன் கடற் படை அதிகாரியொருவரையே அனு ப்பி வைத்தது. 2007 ஆம் ஆண்டு மடகஸ்காரில் கண்காணிப்பு நிலை யம் ஒன்றை புதுடில்லி நிர்மாணித் தது. அந்த நிலையம் அங்கிருந்து மும்பைக்கும் கொச்சினுக்கும் புலனா ய்வுத் தகவல்களை அஞ்சல் செய்து கொண்டிருக்கிறது. மாலைதீவின் 26 தீவுகளில் கரையோர ராடார்களை இந்தியா பொருத்தியிருக்கிறது. இந் திய கடற்படையும் அதன் கரையோ ரக் காவல்படையும் சீஷெல்ஸ், மாலைதீவு மற்றும் மொரீசியஸ் ஆகிய நாடுகளுக்கு கடல் கண்கா முன்னெடுக்கப்பட்ட இந்த இருதரப்பு பயிற்சியில் இலங்கையையும் கூட இந்தியா சேர்த்துக்கொண்டது. பிராந் தியத்தில் கடல்வலய விழிப்புண ர்வை மேம்படுத்துவதற்கு உடன் படிக்கையொன்றை இந்த மூன்று நாடுகளும் விரைவில் செய்து கொள்ளவிருக்கின்றன.

1911 இல் ஆரம்பிக்கப்பட்ட கடற் படைப்பயிற்சியுடன் போருக்குப் பிந்திய இலங்கையுடனான இந்தியா வின் இராணுவ உறவுகள் மிக ஆழ மாக வளர்ச்சி கண்டிருக்கின்றன. 2012இல் இரு நாடுகளினதும் பாது காப்புச் செயலாளர்கள் வருடாந்த பேச்சுவார்த்தைகளை தொடங்கியி ருக்கிறார்கள். இரு தரப்பு உறவுக ளுக்கு அப்பால் இந்து சமுத்திர நிறு வனங்களில் கூடுதலான அளவிற்கு தலைமைத்துவ பாத்திரமொன் றையும் இந்தியா வகிக்கத் தொடங்கி யிருக்கிறது. இந்து சமுத்திர கடற் படை கலந்தாராய்வு, இந்து சமுத்திர கரையோர நாடுகளில் பிராந்திய ஒத் துழைப்புக்கான சங்கம் ஆகியவற்றை உதாரணமாகக் குறிப்பிடலாம். இந் தச் செயற்பாடுகள் எல்லாம் இந்து நிலைய ஒப்பந்தம் முடிவடைந்த பிறகு மாலைதீவு பாதுகாப்பு அமைச் சர் சீனாவிற்கு விஜயம் மேற்கொண் டிருந்தார். இது சில அவதானிகளை தடுமாற்றத்திற்குள்ளாக்கியது. இதே போன்றதொரு விஜயத்தை இந்தியா சார்பான தலைவர் என்று நோக்கப் படுகின்ற நஷீட் ஜனாதிபதியாக இருந்தபோது 2009 ஆம் ஆண்டில் சீனாவுக்கு மேற்கொண்டிருந்தார். பாது காப்பு அமைச்சரின் 2012 விஜ யத்தின் விளைவாக குறைந்தபட்ச பாதுகாப்பு ஒத்துழைப்பே சாத்தியமா கியது. மாலைதீவிற்கு 32 இலட்சம் டொலர் பெறுமதியான மரைன் அம் புலன்ஸ் ஒன்றை வழங்குவதற்கு சீனா இணங்கிக் கொண்டது.

இலங்கையுடனான சீனாவின் பாது காப்பு ஒத்துழைப்பு முன்னர் மிகவும் முனைப்புடையதாக விளங்கியது. தமிழ்ப்புலிகளின் கிளர்ச்சியை எதிர்த் துப் போரிடுவதற்கு தேவையான முக்கியமான ஆயுதங்களையும் உப கரணங்களையும் பெய்ஜிங் கொழும் புக்கு வழங்கியது. ஆனால், உள்நாட் டுப் போர் முடிவிற்கு வந்த பிறகு அத்தகைய ஆயுதங்களை வழங்குவ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தில் தளர்வு காணப்படுகிறது. அதே வேளை, இலங்கையின் வடக்கு, கிழக்கில் இராணுவ உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்வதற்கு பத்து கோடி டொலர்களை வழங்குவதற்கு சீனாவின் தேசிய பாதுகாப்பு அமைச்சர் லியாங் குவாங்லீ இலங்கைக்கு உறுதியளித்திருந்தார். ஆனால், அவர் புதுடில்லியை விரோதித்துக் கொள்ளக்கூடாது என்பதில் மிகவும் ஜாக்கிரதையாக நடந்து கொண்டார். இலங்கைக்கான தனது விஜயத்தை தொடர்ந்து லியாங் எல்லைப் பதற்றநிலை குறித்து நம்பிக்கையை கட்டியெழுப்பும் பேச்சுவார்த்தைகளை நடத்துவதற்காக இந்தியாவிற்குச் சென்றார்.

இந்து சமுத்திரத்திலுள்ள சிறிய தீவு நாடுகள் இந்தியாவுடன் ஆழமான உறவுகளைக் கொண்டிருக்கின்ற போதிலும் கூட, மட்டுப்படுத்தப்பட்ட வளங்களைக் கொண்டிருப்பதன் காரணத்தினால் அதில் எந்தவொரு நாடாவது உட்கட்டமைப்பு அபிவிருத்திக்கு உதவி செய்ய முன்வந்தால் அதை ஏற்றுக்கொள்கின்றன. ஜப்பான், தென்கொரியா, ஈரான் மற்றும் சீனா ஆகிய நாடுகள் இத்தகைய உதவிகளை வழங்குகின்றன. இந்தியாவிற்கும் சீனாவிற்குமிடையே வேறுபாடு பார்க்காமல் இந்து சமுத்திர தீவு நாடுகள் அவற்றின் பொருளாதாரத்தை அபிவிருத்தி செய்வதில் நாட்டம் கொண்டுள்ளனர். இந்த நாடுகள் விடுக்கக்கூடிய அபிவிருத்தி உதவிக் கோரிக்கைகளை எல்லா வேளைகளிலும் ஏற்றுக்கொள்ளக்கூடியதாக இந்தியா இருப்பதில்லை. அதனால் சீனா அத்தகைய உதவிகளை வழங்கும் போது இந்தியா அதிர்ச்சியடையத் தேவையில்லை. உதாரணத்திற்கு அம்பாந்தோட்டையில் துறைமுகமொன்றைக் கட்டுவது குறித்து இந்தியாவுடனேயே இலங்கை முதலில் ஆலோசனை நடத்தியது. ஆனால் புதுடில்லி மறுத்துவிட்டது. அதையடுத்து கொழும்பு சீனாவின் உதவியை ஏற்றுக்கொண்டது. தெற்காசியாவின் கப்பல்கள் வந்து தரித்துபோகக்கூடிய கேந்திர முக்கியத்துவ மையத்தில் துறைமுகமொன்றைக் கட்டுவதற்கான வாய்ப்பைத் தவறவிட இலங்கை விரும்பவில்லை.

மேலும் சிறிய தெற்காசிய நாடுகளுடனான பெய்ஜிங்கின் பொருளாதாரச் செயற்பாடுகள் இந்தியாவிற்கும் பயனைத்தருகின்றன. பிராந்திய உட்கட்டமைப்பு அபிவிருத்தியில் அதன் முதலீட்டை அதிகரிப்பதற்கு இந்தியா தயாராகும் வரை சீனாவின் வீதி, ரயில்வே, துறைமுக மற்றும் விமான நிலையத் திட்டங்கள் முழுத் தெற்காசியப் பிராந்தியத்திற்கும் பயனுடைய முறையில் வர்த்தகம் மற்றும் போக்குவரத்து இணைப்பை முன்னேற்றும். உலகில் குறைந்தளவிற்கு ஒன்றிணைக்கப்பட்ட பிராந்தியங்களில் ஒன்றாக தெற்காசியாவை உலகவங்கியும் ஆசிய அபிவிருத்தி வங்கியும் கருதுகின்றன.

எனினும் இந்து சமுத்திரத்தில் அதன் மேலாதிக்க நிலையை புதுடில்லி மிகவும் எளிதாகக் கருதி விடக்கூடாது. மாலைதீவின் நிராகரிப்பு, அதன் முக்கியத்துவம் மிகைப்படுத்தப்படக்கூடாது என்றபோதிலும், இந்தியாவிற்கு அதன் கோடிப்புறங்களில் அபிவிருத்திக்கு கூடுதலான அளவு முதலீடுகளைச் செய்வதற்கு விழித்தெழுமாறு விடுக்கப்பட்ட ஒரு அழைப்பேயாகும். இந்தியா உதவிகளை வழங்குவதற்கு கையாளுகின்ற அணுகுமுறை ஒரு கட்டுறுதியான தந்திரோபாயத்தைக் கொண்டதாக இல்லை என்று ராணி முல்லன் என்ற ஆய்வாளர் கூறுகின்றார். மாலைதீவிலும் நேபாளத்திலும் கூடுதலானளவிற்கு பொருளாதார முதலீடுகளைச் செய்யுமாறும் தொழில்நுட்ப நிபுணத்துவ உதவிகளை வழங்குமாறு புதுடில்லியை இந்தியாவின் புலனாய்வு நிறுவனமான றோ அண்மையில் கேட்டுக்கொண்டது. இவ்விரு நாடுகளிலும் சீனாவின் தகவல் தொழில்நுட்ப மற்றும் ரெலிகொம் தொழில்துறையின் நலன்கள் குறித்து விரிவாக ஆராய்ந்ததைத் தொடர்ந்தே இந்தக்கோரிக்கையை றோ விடுத்தது. அடிக்கடி தாமதப்படுத்தப்படுகிற உட்கட்டமைப்பு உதவிகளை இந்திய அபிவிருத்தி கூட்டுப்பங்காண்மை நிறுவனத்தினூடாக துரிதப்படுத்துவதற்கான வழி வகைகளை ஆராயுமாறு அயலக நாடுகளில் உள்ள இந்தியத் தூதுவர்களை தேசிய பாதுகாப்பு ஆலோசகர் சிவ்சங்கர் மேனன் கேட்டுக்கொண்டதாக கடந்த ஜூலையில் ஜேன்ஸ் டிபெ ன்ஸ் வீக்லி கட்டுரை ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது. புதுடில்லியின் உதவித் திட்டங்கள் முடிவுறாதவையாக சலிப்பூட்டத்தக்க வகையில் முன்னெடுக்கப்படுவதை ஒத்துக் கொண்ட அதிகாரிகள், பிராந்திய நாடுகளுடனான இந்தியாவின் உறவுகள் மட்டுப்படுத்தப்பட்டவையாக வும் தற்செயலானவையாகவும் இருக்கின்றன என்று கூறுகிறார்கள்.

மாலைதீவில் விமானநிலைய உடன்படிக்கையில் தோல்வி கண்டாலும், இந்து சமுத்திரத்தில் அதன் வரப்பிரசாத நிலையை இழக்கும் அபாயத்தை புதுடில்லி எதிர்நோக்கவில்லை. பிராந்திய நாடுகளுடன் இந்தியாவின் நீண்டகால பாதுகாப்பு உறவுகள் வலுவானவையாக இருப்பதுடன், விரிவடைந்தும் வந்திருக்கின்றன. தொடர்ந்தும் விரிவடையும்.

இந்து சமுத்திரத்தில் பொருளாதார வாய்ப்புகளில் சீனா தொடர்ந்தும் அதிகரித்த வகையில் நாட்டத்தைக் காட்டும். சிறிய நாடுகள் அவற்றின் பொருளாதாரங்களை அபிவிருத்தி செய்வதற்காக சீனாவின் உதவிகளை ஏற்றுக்கொள்ளும். ஆனால், இதை பிராந்தியத்தில் இந்தியா அதன் கேந்திர முக்கியத்துவ அனுகூலத்தை இழந்துகொண்டுவருவதாக அர்த்தப்படுத்தலாகாது. பிராந்தியத்தில் இந்தியாவின் மைய நிலையினதும் அதிகரிக்கும் செல்வாக்கினதும் அளவுகோலாக புவியியலே விளங்குகிறது. ■

*(நிலாந்தி சமரநாயக்கா அமெரிக்காவின் வேர்ஜீனியா மாநிலத்தின் அலெக்சாண்டிரா நகரிலுள்ள கடற்படை ஆய்வுகளுக்கான மையத்தின் கேந்திர முக்கியத்துவ கற்கைகள் பிரிவின் ஒரு ஆய்வாளர்)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரு கட்சித்தலைவரை சிறைக்கு அனுப்பியிருக்கும் காதல் விவகாரம்

கைது செய்து பார் என்று சவால் விடுபவர்களை ஜெயலலிதா முதல்வராக இருக்கும் போது ஒருபோதும் விட்டு வைப்பதில்லை






முத்தையா
காசிநாதன்

கடந்த சில மாதங்களாக ''காதல் திருமணத்தை'' எதிர்த்து பாட்டாளி மக்கள் கட்சியின் நிறுவனத் தலைவர் டாக்டர் ராமதாஸ் நடத்திய போராட்டங்கள், கூட்டங்களின் உணர்ச்சிப் பிழம்புகள் எல்லாம் அவரையும் மகன் அன்புமணியையும் சிறைக்குக் கொண்டு சென்று விட்டன. ஏப்ரில் மாதம் 25 ஆம் திகதி நடைபெற்ற சித்திரைத் திருவிழாவில் சென்னையிலிருந்து 160 கிலோ மீற்றர் தொலைவில் உள்ள விழுப்புரத்தில் ராமதாஸ் கைது செய்யப்பட்டார். அவர் சுமார் 20 மணி நேர ''அலைக்கழிப்பிற்கு'' பிறகு திருச்சி மத்திய சிறையில் அடைக்கப்பட்டுள்ளார். அவருடன் பா.ம.க. தலைவர் ஜி.கே. மணி கைதானார். சென்னை சட்டமன்ற விடுதியில் தங்கியிருந்த அக்கட்சியின் சட்டமன்ற குழுத் தலைவர் ஜெ.குரு ஆகியோரும் அதிரடியாக கைது செய்யப்பட்டுள்ளார். ''இந்த கைதுகள்'' வட மாவட்டங்களான விழுப்புரம், கடலூர், திருவண்ணாமலை, வேலூர், தர்மபுரி போன்ற மாவட்டங்களை பதற்றத்தின் நுனியில் நிற்க வைத்தன.

வடமாவட்டங்களில் ''எலியும் பூனையும்'' போல் இருந்த கட்சிகள் திருமாவளவன் தலைமையிலான விடுதலைச் சிறுத்தைகளும், டாக்டர் ராமதாஸ்



படத்தில் அன்புமணி ராமதாஸ், ஜி.கே.மணி, டாக்டர் ராமதாஸ், காடுவெட்டி குரு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வீண் வம்புக்கு சத்ரியன் போக மாட்டான். ஆனால் வந்த வம்பை விடமாட்டான் என்று பட்டாக்கத்தி வீரன் போல பேசி சித்திரை திருவிழாவில் இளைஞர்களை உசுப்பி விட்டார் படித்த மனிதரான அன்புமணி ராமதாஸ். நாங்கள் விவசாயிகள். அரிவாள் வைத்திருப்போம். எங்கள் வீட்டில் கடப்பாரை இருக்கும். இவற்றை விவசாயத்திற்கும் பாதுகாப்புக்கும் பயன்படுத்துவோம் என்று மிரட்டினார் காடுவெட்டிக்குரு**



தலைமையிலான பாட்டாளி மக்கள் கட்சியும். இருவரும் வெவ்வேறு தளங்களில் நின்று போராடினார்கள். பிறகு ''இணைந்த கைகள்'' என்று ஒவ்வொரு கிராமமாகச் சென்று பிரசாரம் செய்தார்கள். இருவரும் இணைந்து ''தமிழ் பாதுகாப்பு இயக்கம்'' நடத்தினார்கள். டாக்டர் ராமதாஸும், திருமாவளவனும் கைகோர்த்து கடைசியாக நடந்து முடிந்த 2011 சட்டமன்ற தேர்தலில் ஒரே கூட்டணியில் நின்று போட்டியிட்டார்கள். இந்த ''இரட்டையரிடம்'' ஏற்பட்ட ஒற்றுமை, வன்னியர்கள் மற்றும் தலித்கள் மத்தியில் உருவாகவில்லை. கிராமங்கள் அளவில் அந்த இரு சமுதாயத்தினரும் ஒட்டியும், வெட்டியுமே நின்றார்கள். வன்னியர் சங்கமாக உருவாகி, பிறகு பாட்டாளி மக்கள் கட்சியாக மாற்றப்பட்டு 33 வருடங்கள் கழித்து திருமாவளவனுடன் ''தேர்தல் கூட்டணி'' ஏற்பட்டும், இரு சமுதாயத்திற்கும் இடையே ''கலகம்'' நிற்கவில்லை.

இந்த ''கலகத்திற்கு'' விதையாக அமைந்தது டாக்டர் ராமதாஸ் சுட்டிக்காட்டும் ''காதல் நாடக திருமணம்'' (உண்மையான காதல் திருமணம் அல்ல) மற்றும் தாழ்த்தப்பட்டவர்களின் பாதுகாப்பிற்காக கொண்டுவரப்பட்ட ''வன்கொடுமை தடுப்புச் சட்டம்'' மற்ற சமுதாயத்தினர் மீது தவறுதலாக பயன்படுத்தப்படுவதும்தான். ஏனென்றால் தேர்தல் கூட்டணியில் ஒன்றாகப் பயணித்து ஒருவருடம் கழி த்து தர்மபுரி மாவட்டத்தில் ஒரு வன்னியர் சமுதாயப் பெண்ணை, தலித் இளைஞன் காதலிக்க, அது பெரும் கலவரத்தில் முடிந்தது. தாழ்த்தப்பட்ட சமுதாய வீடுகள் அடித்து நொறுக்கப்பட்டன. இதன் பிறகு ''காதல் நாடக திருமணத்திற்கு'' எதிர்ப்புத் தெரிவித்து தமிழகத்தின் மாவட்டங்கள் தோறும் செல்லத் துவங்கினார் டாக்டர் ராமதாஸ். இதற்கு மற்ற சமுதாயங்களின் ஆதரவையும் பெற்றார். குறிப்பாக மேற்கு தமிழகத்தில் கொங்கு வேளாளர் கவுண்டர் சமுதாயம், தெற்கு தமிழகத்தில் தேவர் சமுதாயம், சென்னை மாநகரத்தில் பிராமணர் சமுதாயம் ஆகியோரின் ''அன்புக்கரம்'' டாக்டர் ராமதாஸ் பக்கம் திரும்பியது. அதற்குக் காரணம் ''13 வயது பெண்ணை காதல் என்ற போர்வையில் கடத்திக் கொண்டு சென்று கல்யாணம் பண்ணுகிறார்கள். கட்டப் பஞ்சாயத்துப் பண்ணி பணம் பறிக்கிறார்கள்'' என்றெல்லாம் டாக்டர் ராமதாஸ் வைத்த குற்றச்சாட்டுதான். காஞ்சிபுரம் பகுதியில் தன் மகளை கிண்டல் செய்தவரை தட்டிக்கேட்ட பிராமணர் சமுதாயத்தைச் சேர்ந்த ஒருவர் கொலை செய்யப்பட்டது பிராமணர்கள் மத்தியில் இந்த ''காதல் நாடக திருமண எதிர்ப்பு''க்கு பெரும் ஆதரவைப் பெற்றுத்தந்தது.

இந்த பேராதரவு கிடைத்த நேரத்தில்தான் சித்திரை முழு நிலவு (பௌர்ணமி) வன்னியர் பெருவிழாவை சென்னை அருகில் உள்ள மாமல்லபுரத்தில் நடத்தினார் டாக்டர் ராமதாஸ். அதற்கு, முதலில் பொலிஸ் அனுமதி மறுத்தது. பிறகு நீதிமன்றம் தலையிட்டு சில நிபந்தனைகளின் அடிப்படையில் அனுமதி வழங்கியது. சித்திரை முழு நிலவு திருவிழா வன்னியர்களின் ''கௌரவ விழா''. வன்னிய சொந்தங்கள் அனைவரும் ஓரிடத்தில் சங்கமிக்கும் விழா. ஒவ்வொரு சித்திரை பௌர்ணமி அன்றும் இந்த விழா பல வருடங்களாக கொண்டாடப்பட்டு வருகிறது. குறிப்பாக தேர்தல் காலத்தில் போடப்படும் கூட்டம் என்றால் அந்த ''சங்கமம்'' மஹா சங்கமமாக மாறும். ஆரவாரம் அதிகம் இருக்கும். தமிழக மாநில சராசரியில் 5.82 சதவீத வாக்குகளைப் பெற்று வன்னியர் பகுதிகளான வட மாவட்டங்களில் 11 சதவீத வாக்கு உள்ள கட்சி பா.ம.க. அந்தக் கட்சிக்கு 1998 முதல் 2001 வரை கிடைத்த வெற்றி, 2006 இலிருந்து 2011 வரை கிடைக்கவில்லை. அதற்கு முக்கிய காரணம் வட மாவட்டங்களில் பா.ம.க.விற்கு உள்ள எதிர்ப்பு. அது தவிர புதிதாக 2005இல் உருவான விஜயகாந்த் தலைமையிலான தேசிய திராவிட முற்போக்கு கழகத்திற்கு வன்னியர் பகுதிகளில் கிடை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

த்த அசாத்தியமான செல்வாக்கு. பா.ம.க.வின் பிற்பகுதியில் கிடைத்த தோல்வி, அக்கட்சியை தி.மு.க. மற்றும் அ.தி.மு.க. போன்ற முக்கிய கட்சிகளிடமிருந்து தனிமைப்படுத்தியது. கூட்டணிக்கு தலைமை தாங்கும் அந்தக் கட்சிகளின் தலைமைக்கு ''இனி பா.ம.க.வால் தேர்தலில் பிரயோஜனமில்லை'' என்ற எண்ணம் மேலோங்கியது. ஆகவே பா.ம.க.வின் செல்வாக்கை அதிரடியாகத் தூக்கி நிறுத்த, ''காதல் நாடக திருமண'' எதிர்ப்பை சித்திரை திருவிழாவில் பிரதானமாக வைத்து உரையாற்றினார் ராமதாஸ். அவருடன் பேசிய அனைவருமே அதையே முன்னிறுத்தி ஏறக்குறைய ''திருமாவளவன் தலைமையிலான விடுதலை சிறுத்தைகள் கட்சியை'' தமிழகத்தில் தனிமைப்படுத்தவே முயற்சி எடுத்தார்.

''காதல் நாடக திருமணத்திற்கு'' திருமாவளவன் தலைமையிலான விடுதலை சிறுத்தைகள் அமைப்பைச் சேர்ந்த சில இளைஞர்கள்தான் காரணம் என்ற பிரசாரத்தை ''தர்மபுரி கலவரத்திற்கு'' பிறகு விஸ்வரூபம் எடுக்க வைத்தார். அதற்காக ''அனைத்து சமுதாயப் பேரவை'' தோற்றுவித்த அவர், மாமல்லபுரம் சித்திரை பெரு விழாவிற்கு அவர்களையும் அழைத்து, பா.ம.க.விற்கென்றே இருக்கும் பிரத்தியேக சித்திரை திருவிழாவினை ''அனைத்து சமுதாய பேரவை'' விழாவாக மாற்றினார் டாக்டர் ராமதாஸ். அவ்விழாவில் பேசிய பிராமணர் சங்கத் தலைவர் அருண் ராமதாஸ், ''2016 நாளைக்கே வராதா என்ற ஆசை எனக்கு வந்து விட்டது. அதே மாதிரி உங்களுக்கும் வர வேண்டும்'' என்றார். அதாவது அடுத்த தேர்தல் இப்போதே வந்தால் பா.ம.க. ஆட்சி அமையும் என்பது அவரது நம்பிக்கையாம். முன்னாள் மத்திய அமைச்சர் அன்புமணி ராமதாஸ் பேசும் போது, 'அண்ணா, கலைஞர், எம்.ஜி.ஆர், ஜெயலலிதா கடந்த 46 வருடங்களாக தமிழகத்தை ஆண்டது போதும். அந்த திராவிட கட்சிகளைத் தூக்கியெறியுங்கள்' என்று ஆவேசம் கொப்பளிக்கப் பேசினார். அத்துடன் நிற்காமல், 'நூறு ரூபாய்க்கு முதலமைச்சரை தேர்வு செய்யும் ஒரே மாநிலம் தமிழ்நாடுதான்' என்று தமிழக வாக்காளர்களை கிண்டல் செய்தார். 'வீண் வம்புக்கு சத்ரியன் (வன்னியர்) போகமாட்டான். ஆனால் வந்த வம்பை விடமாட்டான்' என்று 'பட்டாக்கத்தி' வீரன் போல் படித்து டாக்டரான அன்புமணி பேசி, அந்த சித்திரை திருவிழாவில் இளைஞர்களை உசுப்பி விட்டார். இதன் பிறகு பேச வந்த வன்னியர் சங்கத் தலைவர் காடுவெட்டி குருவிற்கோ சொல்லவே வேண்டாம். அவர் பேசும் போது, 'நாங்கள் விவசாயிகள். எங்கள் வீட்டில் கடப்பாரை இருக்கும். கோடாரி இருக்கும். அரிவாள் வச்சுருப்போம். இவற்றை விவசாயத்திற்கும் பாதுகாப்புக்கும் பயன்படுத்துவோம்' என்று 'மிரட்டல்' விடுத்தார். இறுதியில் பேசிய டாக்டர் ராமதாஸ், 'நான் கண் சிமிட்டினால் போதும் இந்த ரவுடிக் கும்பல் (அவர் பாணியில் காதல் நாடக திருமணம் செய்வோர்) தமிழகத்தில் எங்கும் நடமாட முடியாது' என்று எச்சரிக்கை செய்ததோடு நில்லாமல், 'என்னை கைது செய்து பார்' என்று தமிழக காவல்துறைக்கு சவால் விட்டார். இந்தப் பேச்சுகள் மேடையில் அரங்கேறும் முன்பே, சித்திரை விழா

# அன்புமணி கைதும் கருணாநிதி பேட்டியும்

கைது செய்யப்பட்ட டாக்டர் ராமதாஸ் மீது மேலும் இரு வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. அவற்றில் ஒன்று சென்ற வருடம் இதே போன்றதொரு விழாவில் பொலிஸ் அனுமதித்த நேரத்திற்கு பிறகு பேசியது. (இரவு பத்து மணி வரை பொதுக்கூட்டங்கள் பேசலாம் என்பது பொலிஸ் அனுமதி). இன்னொரு வழக்கு இந்த வருடம் சித்திரைத் திருவிழாவில் அனுமதிக்கப்பட்ட நேரம் தாண்டி இரவு 11.35 மணிக்கு டாக்டர் ராமதாஸ் பேசியது பற்றிய வழ க்கு. விழுப்புரம் ஆர்ப்பாட்டத்திற்காக போடப்பட்ட வழக்கில் அம் மாவட்ட நீதிமன்றம் மூன்றாம் திகதி ஜாமின் வழங்கியது. இந்த ஜாமினையும் ரத்துச் செய்ய வேண்டும் என்று கோரிக்கை வைத்து தமிழக அரசின் சார்பில் சென்னை உயர்நீதி மன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மற்ற இரு வழக்குகளிலும் அவர் ஜாமின் வாங்கினால் மட்டுமே சிறையிலிருந்து விடுதலையாக முடியும் என்ற நிலையில், நான்காவதாக 2004 ஆம் வருடம் ரஜினி ரசிகர் ஒருவர் தாக்கப்பட்ட வழக்கும் டாக்டர் ராமதாஸ் மீது சேர்க்கப்படுகிறது. இந்த வகையில் இதுவரை டாக்டர் ராமதாஸ் மீது நான்கு வழக்குகள் போடப்பட்டு விட்டன. இதற்கிடையில், திருச்சி மத்திய சிறையில் இருக்கும் டாக்டர் ராமதாஸ் கடும் வெயிலின் தாக்கத்தைத் தாங்க முடியாமல் தவிக்கிறார். காந்திய புத்தகங்களை படித்து வருகிறார்.

இந்நிலையில் திடீரென்று மே- மூன்றாம் திகதி காலை டாக்டர் ராமதாஸின் மகன் அன்புமணி ராமதாஸும் கைது செய்யப்பட்டார். அவர் மீது சென்ற வருடம் இதே மாதிரியான விழாவில் பொலிஸ் அனுமதித்த நேரத்திற்கு மேல் பேசினார் என்று குற்றம் சாட்டப்பட்டு, சென்னை புழல் சிறையில் அடைக்கப்பட்டுள்ளார். கைது செய்யப்பட்ட அன்புமணிதான் ராமதாஸ் சிறையில் அடைக்கப்பட்ட பிறகு போராட்டங்களை தூண்டி விடுகிறார் என்று பொலிஸ் கருதியது. அது மட்டுமன்றி, ஏப்ரில் 25ஆம் திகதி நடைபெற்ற சித்திரைத் திருவிழாவில் பேசிய அன்புமணி ராமதாஸ், ''46 வருடங்களாக சினிமாக்காரர்கள் தான் தமிழ்நாட்டில் முதலமைச்சர்களாக இருந்து வருகிறார்கள்'' என்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விற்கு வரும் வழியில் உள்ள 'மரக் காணத்தில்' இரு சமுதாயத்தின ருக்கும் மோதல் வெடித்தது. பிறகு கலவரமாக மாறி 1980-கள் போன்று குடிசைகள் நாசம் செய்யப்பட்டன.

சித்திரை திருவிழாவின் 'வீண் வம்பு பேச்சும்', 'மரக்காணம் கல வரமும்' மறுநாள் தமிழ்நாட்டை திகைக்க வைத்தது. தி.மு.க. தலைவர் கருணாநிதி உள்ளிட்ட அனைத்துக் கட்சித் தலைவர்களும் 'ஜாதிக் கல வரத்தை தூண்டுவோர் மீது கடும் நட வடிக்கை எடுக்க வேண்டும். ஜாதிக் கலவரம் தமிழ்நாட்டிற்கு நல்லதல்ல' என்று தமிழக அரசுக்கு அழுத்தம் கொடுத்தார்கள். உடனே, தமிழக சட்டமன்றத்தில் பேசிய முதல்வர் ஜெயலலிதா, 'மரக்காணம்' கலவரத் திற்கான காரணங்களை விளக்கிக் கூறிவிட்டு, 'டாக்டர் ராமதாஸ் மீது நடவடிக்கை எடுக்கப்படும்' என்று உறுதியான முடிவை எடுத்து அறி வித்தார். ஏனென்றால் 'கைது செய்து பார்' என்று சவால் விடுபவர்களை ஜெயலலிதா முதல்வராக இருக்கும் போது விட்டு வைப்பதில்லை. இதே போன்று முன்பு திருமங்கலத்தில் விடுதலைப் புலிகளை ஆதரித்துப் பேசியதற்காக வைகோ சவால் விட, அவரை 'பொடா' சட்டத்தில் கைது செய்து அடைத்தார் அப்போது முதல் வராக இருந்த ஜெயலலிதா. வைகோ 19 மாதம் சிறையிலிருக்க நேரிட்டது. அதே பாணியில் டாக்டர் ராமதா ஸுக்கும் 'கைது' தேடி வரும் என்ற நிலைமை. இந்நிலையில்தான் ஏப்ரில் 30ஆம் திகதி விழுப்புரத்தில் ஆர்ப் பாட்டம் நடத்தினார் டாக்டர் ராம தாஸ். அவர் வீட்டை விட்டு கிளம் பும் முன்பு, 'போகாதீர்கள் நீங்கள். உங்களை கைது செய்து விடுவார்கள்' என்று குடும்பத்தினர் கெஞ்சியிருக்கி றார்கள். ஆனால் டாக்டர் ராம தாஸோ, 'பாட்டாளி சொந்தங்களால் தான் எனக்கு இந்த வாழ்க்கை கிடைத் தது. அவர்களுக்காக போராடி கைதாகி சிறை செல்ல நான் தயார்' என்று கூறி, 'குடும்ப வற்புறுத்தலை' உதறித் தள்ளிவிட்டு போராட்டத்தில் பங்கேற்றார். அங்கே எதிர்பார்த்தது போலவே டாக்டர் ராமதாஸை



தர்மபுரி கலவரத்தின் போது

கூறி, இன்றைய முதல்வர் ஜெயலலி தாவையும், எதிர்க்கட்சித் தலைவர் விஜயகாந்தையும் குறை கூறும் வகை யில் சில கருத்துகளை கூறியிருந்தார். அன்புமணி கைதுக்கு அதுவே முக் கிய காரணமாக இருக்க முடியும் என்று கருதப்படுகிறது.

அரசியல் தலைவர்கள் யாரும் டாக் டர் ராமதாஸின் கைதிற்கு கருத்துச் சொல்லாமல் இருந்தனர். அந்த விர தத்தை அன்புமணி கைதிற்கு பிறகு முடித்துக் கொண்டார் தி.மு.க. தலை வர் கருணாநிதி. அன்புமணி தான் கைது செய்யப்பட்டதும் "வருகின்ற பாராளுமன்றத் தேர்தலில் ஒரு தொகு தியில் கூட அ.தி.மு.க. வெற்றி பெறாது" என்று பேட்டி கொடுத்தார். இந்தத் தருணத்தில் பத்திரிகையாளர்க ளைச் சந்தித்த கலைஞர் கருணாநிதி, "மனித நேய அடிப்படையில் டாக்டர் ராமதாஸை விடுதலை செய்ய வேண் டும். மற்ற அரசியல் கட்சித் தலைவர் களை தரக்குறைவாக விமர்சனம் செய்வதை பா.ம.க. தவிர்க்க வேண் டும். அரசியல் கட்சிகள் ஜாதிக் கலவ ரத்தை தூண்டும் விதத்தில் அரசியல் பண்ணக்கூடாது" என்ற ரீதியில் கருத்து தெரிவித்தார். டாக்டர் ராம தாஸ் கைதிற்கு முதலில் வெளிவந் துள்ள அரசியல் தலைவரின் கருத்து கலைஞர் கருணாநிதியின் கருத்து என்பதால் பாட்டாளி மக்கள் கட்சியி னர் குஷியாகியிருக்கிறார்கள். இப் போதைக்கு தமிழகத்தின் வடமாவட் டங்களில் தொடரும் வன்னியர் சமுதாயத்தினரின் கலவரங்கள், அடுத்தடுத்து டாக்டர் ராமதாஸ் மீது போடப்படும் வழக்குகள், திடீரென்று அன்புமணி ராமதாஸ் கைது என்று கடும் நடவடிக்கைகள் எடுக்கப்பட் டுள்ள நிலையில், இனி அ.தி.மு.க. வுடன் டாக்டர் ராமதாஸ் கூட்டணி வைக்க மாட்டார் என்ற நிலை ஏற்பட் டுள்ளது. அதன் பிறகே, டாக்டர் ராம தாஸை விடுதலை செய்ய வேண்டும் என்று கலைஞர் கருணாநிதி கருத்து சொல்லியிருக்கிறார் என்பது குறிப்பி டத்தக்கது.

பா.ம.க.விற்கு இப்படியொரு நெருக்கடி இருக்க, வராகி என்பவர் தனியாக ஒரு வழக்கை உயர்நீதிமன் றத்தில் தாக்கல் செய்துள்ளார். அதில் "இனவெறியைத் தூண்டி விடும் வகையில் செயல்படும் பாட்டாளி மக் கள் கட்சியின் அங்கீகாரத்தை ரத்துச் செய்ய இந்திய தேர்தல் கமிஷனுக்கு உத்தரவிட வேண்டும்" என்று கோரிக்கை வைத்துள்ளார். இந்த மனு மீது விரைவில் விசாரணை நடக்கவி ருக்கிறது. பாட்டாளி மக்கள் கட்சித் தலைவர்களுக்கும் பிரச்சினை. அந் தக் கட்சிக்கும் தலைவி- இப்படி யொரு இடியாப்ப சிக்கலில் தவிக்கி றது 33 ஆண்டுகளாக செயல்பட்டுக் கொண்டிருக்கும் வன்னியர் சமுதா யத்திற்கான கட்சி. ■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org
பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்.

பொலிஸ் கைது செய்தது. சிறை செல்லும் முன்பு, 'கலவரத்தை, கட்டப் பஞ்சாயத்தை கட்டுப்படுத்துவதற்கு பதில் தமிழகத்தில் நேர்மையான, நாணயமான, ஜனநாயக ரீதியாகப் போராட்டம் நடத்திய என்னை பழி வாங்கும் விதத்தில் என்னை கைது செய்துள்ளனர். நான் அனைத்து சிறைகளையும் பார்த்தவன். எத்தனை வழக்குகள் போட்டாலும் சந்திக்கத் தயார்' என்று உருக்கமாக பேட்டியளித்தார் டாக்டர் ராமதாஸ்.

இனி... பிரச்சினை அவருக்கும், கூட்டத்திற்கு அனுமதி கொடுத்த சென்னை உயர்நீதிமன்றத்திற்கும் தான். சட்டமன்றத்தில் மரக்காணம் கலவரம் பற்றி பேசிய முதல்வர் ஜெயலலிதா, 'பொலிஸ் இது போன்ற கூட்டங்களுக்கு அனுமதி மறுக்கிறது. ஆனால் கூட்டம் நடத்துபவர்கள் நீதிமன்றம் செல்கிறார்கள். அவர்கள் சொல்வதை நம்பி அந்த இயக்கங்களின் கடந்தகாலங்களைப் பற்றித் தெரிந்து கொள்ளாமல் நீதிமன்றங்களும் அனுமதி கொடுத்து விடுகின்றன' என்று குறிப்பிட்டிருந்தார். அது மாதிரி நீதிமன்றம் விதித்த நிபந்தனைகளை டாக்டர் ராமதாஸ் எப்படியெல்லாம் மீறியிருக்கிறார் என்றும் சட்டமன்றத்தில் விளக்கினார் முதல்வர். இது போன்ற சூழ்நிலையில்தான் இப்போது வன்முறையைத் தூண்டியது, அரசுக்கு எதிராக சதி செய்தது உள்ளிட்ட பல்வேறு ஜாமினில் வெளிவர முடியாத பிரிவுகளின் கீழ் டாக்டர் ராமதாஸ் மீது வழக்குப் பதிவு செய்து கைது செய்துள்ளது தமிழக காவல் துறை. அந்தக் கைதுக்கு முன்பு தமிழக காவல்துறை டி.ஜி.பி. ராமானுஜம் உயர் பொலிஸ் அதிகாரிகளுடன் அவசர ஆலோசனை நடத்தினார். ராமதாஸை கைது செய்தால் ஏற்படும் அசாதாரண சூழ்நிலைகளைச் சமாளிக்க பொலிஸை முடுக்கி விட்டார். ஏன் பொலிஸ் தலைமையகத்தில் அதற்கு என்று தனியாக 'சிறப்பு கன்ட்ரோல்ரூம்' கூட அமைத்தார். ராமதாஸ் கைதைத் தொடர்ந்து அவர் கட்சியின் முன்னணிப் பிரமுகர்கள், முன்னாள் எம்.எல்.ஏ.க்கள் எல்லாம் கைது செய்யப்பட்டுள்ளார்கள். இவர்களின் ஜாமின் மனு இனி நீதிமன்றங்கள் முன்பு வரும். அப்போது 'நீதிமன்றம் விதித்த நிபந்தனைகளை மீறியிருக்கிறார். அதனால் கைது செய்திருக்கிறோம்' என்று தமிழக காவல்துறையின் சார்பில் கூறும் வாய்ப்பு இருக்கிறது. இவர்களுடைய வழக்கில், அரசியல் கட்சிகளின் கூட்டங்களுக்கு நீதிமன்றம் விதிக்கும் நிபந்தனைகளை கடைப்பிடிப்பது கட்டாயம் என்ற வாய்ப்பு உருவாகும்.

'அனைத்து சமுதாயப் பேரவை' தலைவர்கள் தவிர, வேறு எந்த அரசியல் கட்சித் தலைவர்களும் டாக்டர் ராமதாஸின் கைதைக் கண்டிக்கவில்லை. அதற்கு முக்கிய காரணம் 'எப்படியிருந்தாலும் பா.ம.க. வருகின்ற தேர்தலில் எந்தக் கட்சியுடனும் கூட்டணி சேரப் போவதில்லை. அவர் கைதை ஆதரித்து என்ன பலன்?' என்று நினைப்பதே! அது மட்டுமன்றி, 'காதல் திருமண' எதிர்ப்பு என்ற பிரசாரத்தில் டாக்டர் ராமதாஸ் அனைத்துக் கட்சிகளின் ஆதரவையும் இழந்து விட்டார். குறிப்பாக 'தமிழகத்தில் உள்ள திராவிடக் கட்சிகளை ஒழிக்க வேண்டும்' 'திராவிடம் எங்கே இருக்கிறது' என்றெல்லாம் கேள்வி எழுப்பி தி.மு.க. வின் பகையைச் சம்பாதித்துக் கொண்டார். 'நானும் ரவுடி என்று காமெடி நடிகர் வடிவேலு சொல்வது போல் இப்போது யார் யாரோ மதுவிலக்கை அமுல்படுத்த வேண்டும் என்று கூறி அங்கும் இங்குமாக நடக்க ஆரம்பித்து விட்டார்கள்' என்று வைகோவின் நடைபயணத்தை சித்திரைத் திருவிழாவில் கிண்டல் செய்து அவரையும் எதிரியாக்கிக் கொண்டார் அன்புமணி ராமதாஸ். காடுவெட்டி குருவோ, தா.பாண்டியன், வீரமணி, கலைஞர் கருணாநிதி எல்லோரையும் தாக்கிப் பேசினார். அந்த சித்திரைத் திருவிழாவில் ஒரு நாடகம் அரங்கேற்றினார்கள். அதில் வாக்கு சேகரிக்க கலைஞர் கருணாநிதியும், முதல்வர் ஜெயலலிதாவும், விஜயகாந்தும் தனித்தனியாக பா.ம.க.வினரிடம் வருவது போலவும், அவர்களை பா.ம.க.வினர் 'எங்களுக்கு இதுவரை என்ன செய்தீர்கள்' என்று கேட்பது போலவும் சித்தரிக்கும் நாடகம் அது. அதில் கலைஞர் கருணாநிதியை கடுமையாக விமர்சித்தார்கள். விஜயகாந்தை 'நீ நிதானமில்லாத ஆளு போல தெரியுறப்பா. முதல்ல இங்கிருந்து வெளியே போ' என்று விரட்டுவது போல் சித்தரிக்கும் காட்சிகள் இடம்பெற்றன. இது எல்லாமே தமிழகத்தில் உள்ள அரசியல் கட்சிகளை பா.ம.க.விடமிருந்து தனிமைப்படுத்தி விட்டது. அதனால் டாக்டர் ராமதாஸ் கைதைக் கண்டிக்க யாரும் முன்வரவில்லை.

இந்நிலையில், மே-1ஆம் திகதி பா.ம.க.வினரால் 'சின்ன அய்யா' என்று அழைக்கப்படும் அன்புமணி ராமதாஸ், 'இது தமிழக அரசின் பழி வாங்கும் நடவடிக்கை' என்று பேட்டி கொடுத்துள்ளார். இதுவரை நடைபெற்ற 'காதல் நாடக திருமண எதிர்ப்பு' 'சித்திரை திருவிழா' எல்லாம் டாக்டர் ராமதாஸுக்கு ஒரு மகத்தான வெற்றியை 'ஈட்டி'க் கொடுத்திருக்கிறது. சித்திரைத் திருவிழாவில் பேசிய அன்புமணி ராமதாஸ், 'இனி திராவிடக் கட்சிகளுடன் கூட்டணி கிடையாது. அவர்களுடன் ஒட்டும் கிடையாது, உறவும் கிடையாது' என்றார். அப்படி பா.ம.க. தேர்வு செய்த 'தனித்துப் போட்டி' என்று 'தேர்தல் பாதைக்கு' இந்தச் சம்பவங்களும், தற்போது டாக்டர் ராமதாஸ் கைது செய்யப்பட்டிருப்பதும் 'வன்னியர் வாக்கு வங்கியை' பா.ம.க.வின் பக்கம் ஒருமுகமாக 'திரட்டி'க் கொடுத்திருக்கிறது. பா.ம.க. பக்கம் மீண்டும் திரளும் வன்னியர் வாக்கு வங்கியால் வட மாவட்டங்களில் பேரிழப்பு தி.மு.க. விற்கா, புதிதாக தோன்றி வன்னியர் மத்தியில் செல்வாக்குப் பெற்ற விஜயகாந்திற்கா அல்லது கைது செய்த முதல்வர் ஜெயலலிதாவிற்கா என்பதை வரும் பாராளுமன்றத் தேர்தல் தான் நிர்ணயிக்கும். ■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சச்சினுக்கு 40

ரி.எஸ்.கணேசன்




சச்சினுக்கு கடந்த 24ஆம் திகதி 40 வயது. ஆனால் அவரின் கிரிக்கெட் ஆட்டத்துக்கு இன்னும் 25 வயதாகவில்லை. இந்த யதார்த்தத்தை புரிந்துகொண்டால் சச்சினின் கிரிக்கெட் பயணம் குறித்த விமர்சனங்கள் பெரிதாக எழமாட்டாது. டெஸ்ட் போட்டிகளில் மட்டுமே இன்று ஆடிவரும் சச்சின் சர்வதேச ஒரு நாள் போட்டிக்கு விடை கொடுத்து விட்டார். சர்வதேச "ருவென்ரி -20" போட்டியில் அவர் ஆடியது ஒரு சிலவற்றில் தான். இதனால் தான் தற்போது அவர் ஆடும் டெஸ்ட் கிரிக்கெட்டை காப்பாற்ற அவர் டெஸ்ட் கிரிக்கெட்டில் ஆட வேண்டுமென்ற கோரிக்கையை பெரும்பாலான ரசிகர்கள் விடுக்கின்றனர். ஆனால் மிகவும் புகழ்பெற்றவர்களை வாழ்த்துவதை விட மோசமாக விமர்சிப்பதால் புகழடைந்து விடலாமென்பதால் பல விமர்சகர்கள் சச்சின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறித்து அடிக்கடி விமர்சிக்கின்றனர்.

படைத்தல், காத்தல், அழித்தல் போன்று இன்று கிரிக்கெட்டும் மூன்று வடிவங்களைப் பெற்றுள்ளது. ருவென்ரி-20 இன்று புதிதாகப் படைக்கப்பட்டது. சர்வதேச ஒருநாள் போட்டி (50 ஓவர்) இன்று கிரிக்கெட்டை காக்க முற்படுகிறது. ஆனால் டெஸ்ட் கிரிக்கெட்டோ அழியும் நிலைக்குச் சென்று விட்டது. அதனைக் காப்பாற்ற இன்று ருவென்ரி -20 போட்டிகளில் விளையாடும் எந்த வீரர்களும் முன்வருவது மில்லை முன்வரப்போவதுமில்லை. ஆனால் அழிந்து போய்க் கொண்டிருக்கும் டெஸ்ட் கிரிக்கெட்டை காப்பாற்ற முன்வந்திருக்கும் சச்சின் டெண்டுல்கர் குறித்து மிக மோசமான விமர்சனங்கள் எழுந்துள்ளன. இந்த விமர்சனங்களில் பல இந்தியாவுக்குள்ளிருந்து எழுவதுதான் மிகவும் வேதனையானதென அவரது ரசிகர்கள் பலர் கூறுகின்றனர். அதேநேரம், ஐ.பி.எல். போன்ற மிக நவீன ''ருவென்ரி -20'' போட்டி இந்தியாவையும் சர்வதேச கிரிக்கெட்டையும் ஆட்டிப் படைக்கையில் டெஸ்ட் கிரிக்கெட்டுக்கே இன்று லாயக்கான சச்சின் பற்றி எப்படிப் பேசுவதென இளம் ரசிகர்கள் பலரும் விமர்சிக்கின்றனர்.

1989 ஆம் ஆண்டு கிருஷ்ணமாச்சாரி ஸ்ரீகாந் தலைமையிலான இந்திய அணியில் தனது சர்வதேச கிரிக்கெட் வாழ்வை ஆரம்பித்த சச்சின், இப்போது ஸ்ரீகாந்தின் மகனான அனிருத்த ஸ்ரீகாந்துடன் விளையாடுகின்றார். ஆனால் இன்றோ அனிருத்த ஸ்ரீகாந்துக்கு இந்திய அணியிலோ அவர் சார்ந்த ஐ.பி.எல் அணியிலோ இடமில்லாத போது ஐ.பி.எல். லில் சச்சின் ஆடுகிறார். அவர் ஒவ்வொரு பந்தையும் சந்திக்கும் போதும் ரசிகர்கள் எழுப்பும் கரகோஷம் ருவென்ரி-20 கிரிக்கெட்டில் அவருக்கிருக்கும் மவுசை வெளிப்படுத்துகிறது. ஆனாலும் அவர் தற்போதைய ஐ.பி.எல். போட்டிகளில் குறைந்த ஓட்டங்களில் ஆட்டமிழந்து செல்கையில் பல்வேறு விமர்சனங்கள் எழுவதையும் காண முடிகிறது.

வயது என்பது சச்சினுக்கு மட்டுமல்ல, சச்சினின் வயதைக் காரணம் காட்டி விமர்சிப்பவர்களுக்கும் வயது ஏறத்தான் செய்கிறது. ஆனால் இளமைக்குரியது விளையாட்டு, முதிர்ச்சிக்குரியது விமர்சனமெனக் கூறி தள்ளாத வயதிலும் பலர் சச்சினை விமர்சிப்பதை பார்க்க முடிகிறது. அதேநேரம், திரைப்படம் போன்று இன்று கிரிக்கெட்டிலும் புதுமுகங்களின் வருகை அதிகரித்து விட்டது. அந்தந்த நேரம் வெற்றியளித்தால் போதுமென்று திரைப்பட உலகம் வியாபார சந்தையை நோக்கிச் செல்வது போல் விளையாட்டுலகமும் மிகப்பெரும் விளம்பரங்களில் தங்கியுள்ளதால் பழையவர்களை விடுத்து புதியவர்களை களமிறக்குவதற்காக விளையாட்டை பற்றியே தெரியாத விமர்சகர்கள் ஊடாக மோசமான அரசியலில் இறங்கியுள்ளதாகவும் குற்றச்சாட்டுகள் எழுகின்றன.

கிரிக்கெட்டின் மூன்று வடிவங்களில் இன்றைய உலகில் ''ருவென்ரி -20''க்கே மிகவும் மவுசு உள்ளது. ஐரோப்பிய மற்றும் அமெரிக்க நாடுகளில் கால்பந்தாட்டத்திற்கு எந்தளவுக்கு மவுசு உள்ளதோ அந்தளவிற்கு இந்திய உப கண்டத்தில் கிரிக்கெட்டுக்கு மவுசு உள்ளது. அதுவும் ஐ.பி.எல்.தான் ''ருவென்ரி -20''க்கு உயிர் கொடுக்கிறது. அது இந்தியாவில் ஆடப்படுவதால்தான் அதுவும் நிலைத்து நிற்கிறது. மிகக்குறுகிய நேரத்தில் ஆடப்படும் ருவென்ரி-20 இல் இளமையும் துடிப்பும் மிகவும் முக்கியமானது. பந்துவீச்சை விட துடுப்பாட்டத்திற்கே இங்கு மவுசு மிகவும் அதிகம். விக்கெட் வீழும் போது ஏற்படும் மகிழ்ச்சியை விட துடுப்பாட்டத்தில் எல்லைக்கோடுகளை பந்துகள் தாண்டும் போது ஏற்படும் கூச்சல் சர்வதேச வீரர்களை கட்டிப் போட்டுவிடுகிறது. நிதானத்திற்கும் நின்றுஆடுவதற்கும் இங்கு இடமில்லை. அடித்து ஆடுவதும் எல்லைக் கோட்டை பந்தை தாண்ட வைப்பதும் தான் இன்றைய ரசிகர்களுக்கு பிடிக்கிறது. இதற்காக அவர்கள் எதையும் இழக்கவே தயாராயுள்ளனர்.

சர்வதேச கிரிக்கெட்டின் தரம் வீழ்ச்சியடைந்து வருவதை இது காட்டுகிறது. சர்வதேச கிரிக்கெட்டையே கட்டுப்படுத்தும் சர்வதேச கிரிக்கெட் சபை கூட இந்த 'ருவென்ரி-20' ஆட்டத்துக்கு கட்டுப்படுகிறது. இதனால் தான் இந்தியாவில் ஐ.பி.எல். போட்டிகள் நடைபெறும் போது சர்வதேச கிரிக்கெட் போட்டிகளுக்கான அட்டவணைகள் தயாரிக்கப்படுவதில்லை. ஒருவகையில் இந்திய கிரிக்கெட்டின் ஆதிக்கம் சர்வதேச கிரிக்கெட் சபையையும் இன்று முடமாக்கிவிட்டது. இவ்வாறானதொரு சூழ்நிலையில் தான் ஐ.பி.எல். போட்டியில் மும்பை இன்டியன்ஸ் அணி தனது பக்கம் சச்சின் டெண்டுல்கரை வைத்துள்ளது. ஐ.பி.எல். தொடர்களில் மும்பை இன்டியன்ஸ் மிகவும் புகழ் வாய்ந்தது. இந்தியாவின் முதலாவது பணக்காரரான முகேஷ் அம்பானியின் மும்பை இன்டியன்ஸுக்கு சச்சின் மிகவும் தேவையாக உள்ளார். அந்த அணியின் வெற்றிக்கு சச்சினின் பங்களிப்பு மிகவும் முக்கியமாயுள்ளது. ஒவ்வொரு போட்டியிலும் சச்சின் சிறப்பாக ஆடுகிறாரோ, இல்லையோ அந்த அணி வீரர்கள் ஒவ்வொருவருமே சச்சினை மையமாக வைத்தே சுழல்கின்றனர்.

ஆனாலும் சச்சினுக்கு தன் நிலை பற்றி நன்கு தெரியும். 40 வயதாகி விட்ட போதும் இன்றும் 15 வயதில் கிரிக்கெட் மட்டையைத் தூக்கியது போன்ற உணர்வுடனேயே களம் புகுவதாக அவர் கூறினாலும் தனது ஆட்டத்திறன் நாளுக்கு நாள் குன்றிவருவதை அவர் உணராமலில்லை. ஆரம்பத்திலிருந்த வேகம் இன்று இல்லை. அப்போது இருந்த நிதானம் இன்று தவறுகிறது. வேகப்பந்து வீச்சிற்கு துடுப்பாட்ட வீரர்களின் மிக வேக கால் நகர்த்தல்களும் துடுப்பு மட்டைகளை நினைக்குமிடத்திற்கு மின்னல் வேகத்தில் லாவகமாகத் திருப்புவதும் ஓட்டங்களை ஆறாகவும் நான்காகவும் குவிக்கும் சச்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

னுக்கு பந்து வீசுவதென்பது உலகின் ஒவ்வொரு பந்து வீச்சாளனுக்கும் சோதனை. அந்த ஒவ்வொரு பந்து வீச்சையும் சச்சின் எதிர்கொள்வது அவருக்கு சாதனை. சச்சினுக்கு பந்து வீசவேண்டுமே என நினைத்து போட்டிகளில் பங்கேற்க மறுத்த வீரர்கள் பற்றியும் வரலாறுண்டு. அதே நேரம் சச்சின் ஆடும்போது களத்தடுப்புச் செய்வதை விடுத்து அவரது அற்புதமான ஆட்டத்தை ரசித்ததால் அணியிலிருந்து நீக்கப்பட்டவர்களுமுண்டு.

ஆனாலும் இன்றும் களமிறங்கினாலும் தன்னுடன் இணைந்தாட வந்தவர் எவரெனப்பாராது, தானும் அவரும் ஆடுகளத்தில் நிற்கும் வரை தன்னுடன் ஆடவந்தவரும் ஆட்டமிழந்து விடக்கூடாதென்பதில் மிகவும் கரிசனை கொண்டவர் டெண்டுல்கர். இதனை அவருடன் இணைந்து ஆடிய எத்தனையோ துடுப்பாட்ட வீரர்கள் இன்றும் நினைவு கூருவர். இதனால் தான் இன்றும் அவரது அணி சார்ந்தவர்கள் மட்டுமல்ல எதிரணி வீரர்கள் கூட அவர் மீது மட்டில்லா மரியாதை செலுத்துவார்கள். அந்தளவுக்கு, தன்னுடன் இணைந்து ஆடுபவரும் தனக்கு நிகராக ஆடி புகழ்பெற வேண்டுமென்பதிலும் தன்னுடன் ஆடிய எந்தச் சிறிய வீரரானாலும் தானும் அவரும் இணைந்து மிகச் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தி அணியின் வெற்றிக்கு உதவிட வேண்டுமென்பதில் மிகவும் முனைப்புக் காட்டுவார். இதனை இந்திய வீரர்கள் மட்டுமல்ல ஐ.பி. எல். போட்டிகளில் அவரது அணியில் ஆடும் சர்வதேச புகழ்பெற்ற பல வீரர்கள் கூட புகழ்ந்து கூறியுள்ளனர். இதில் உலகப் புகழ்பெற்ற இலங்கை வீரர் சனத் ஜயசூரியா, அவுஸ்திரேலிய முன்னாள் கப்டன் ரிக்கி பொண்டிங்கும் அடங்குவர்.

இது ஐ.பி.எல். 'ருவென்ரி-20' வரலாறு. ஆனால் இந்திய அணியை பொறுத்தவரை சச்சின் - கங்குலி ஜோடி போன்று ஆரம்பத் துடுப்பாட்டத்தில் அசத்தியவர்கள் எவருமில்லை. சச்சினுடன் சேவாக் பல போட்டிகளில் இணைந்து ஆடிய போதும் அது பெரியதாக சோபிக்கவில்லை. சச்சின் காயம் காரணமாக களமிறங்க முடியாது போனபோது இந்திய அணியின் ஆரம்ப துடுப்பாட்ட வீரராக பலர் அறிமுகப்படுத்தப்பட்டபோதும் அவர்களால் தொடர்ந்தும் தாக்குப்பிடிக்க முடியவில்லை. டெஸ்ட் போட்டிகளிலும் சரி சர்வதேச ஒரு நாள் போட்டிகளிலும் சரி இந்திய அணிக்கு ஆரம்ப துடுப்பாட்டத்தில் மிக நீண்ட காலம் மிகப்பெரும் பங்காற்றியவர் சச்சின். இன்று டெஸ்ட் போட்டிகளென்றாலும் சரி ஒரு நாள் போட்டிகளென்றாலும் சரி ஆரம்ப துடுப்பாட்ட ஜோடியொன்றை நிரந்தரமாகப் பெறமுடியாது இந்திய அணி தடுமாறுகிறது. ஒரு காலத்தில் கவாஸ்கர் போன்று அவருக்கு பின்னர் அந்த இடத்தை மிக அற்புதமாக நிரப்பியவர் சச்சின். மேற்கிந்திய பந்து வீச்சாளர்களின் வேகப்பந்து வீச்சையும் இலங்கை, பாகிஸ்தான் வீரர்களில் அற்புதமான சுழல்பந்து வீச்சையும் மிக லாவகமாக எதிர்கொண்டாடியவர் சச்சின்.



எந்த வேகப்பந்து வீச்சென்றாலும் அதனை அடித்து நொருக்குவதும், எவரையும் அடித்து வீழ்த்தும் படுபயங்கர பந்து வீச்சிற்கும் எதிராக அற்புதமாக மட்டை சுழற்றிய முன்னாள் இந்திய துடுப்பாட்ட வீரர் சுனில் கவாஸ்கர் போல் சச்சினும் ஒரு ஜாம்பவான். ஆடுகளத்தில் முதலில் நிற்க வேண்டும், பிறகு ஆட்கொள்ள வேண்டும், பின்னர் தாக்க வேண்டுமென்பதுதான் துடுப்பாட்ட வீரர்களின் வெற்றிக்கான மந்திரம். இவற்றைச் செய்தவர் சச்சின். எந்தத் திசையில், எந்த அளவில், என்ன வேகத்தில் வந்தாலும் அந்தப் பந்தை அற்புதமாக ஆடக்கூடிய ஒரே துடுப்பாட்ட வீரர் சச்சின்தான். இந்தப் பந்தை இப்படி ஆடுவதுதான் கிரிக்கெட் என்று எல்லோருக்கும் பாடம் படிப்பித்தவர் சச்சின். கிரிக்கெட் உலக ஜாம்பவானான அவுஸ்திரேலி யாவின் டொன் பிரட்மன், கறுப்பு பிரட்மன் என்றழைக்கப்பட்ட மேற்கிந்திய கிரிக்கெட் வீரர் ஜோர்ஜ் ஹெட்லி வரிசையில் சச்சினும் இணைந்து கொண்டவர்.

மேற்கிந்தியாவின் மிகவும் அற்புதமான சகலதுறை வீரர் ஹேரி சோபர்ஸ். அவரும் பிரட்மன் போலவே அற்புதமாக ஆடுவார். எந்தவித ஆடுகளமென்றாலும் எவ்வாறான பந்து வீச்சானாலும் சோபர்ஸை கட்டுப்படுத்த முடியாது. அவ்வாறானதொரு அற்புதமான ஆட்டக்காரர். அவரே, சச்சினை பிரட்மனுக்கு நிகரானவரென பல தடவைகள் கூறியுள்ளார். சச்சின் களமிறங்கி ஆடத்தொடங்குவது அற்புதமாயிருக்கும். எந்தப் பந்தை எங்கு அடிக்க வேண்டுமென மிகச் சிறப்பாக பாடம் நடத்துவதுபோல் அவரது ஆட்டமிருக்கும். மிக வேகமான கால்நகர்த்தல்கள் மூலம் மிக அற்புதமான பந்துக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ளையும் பவுண்டரிகள், சிக்ஸர்களுக்கு அனுப்புவது சச்சினுக்குரிய விஷேட அம்சம். சச்சின் களத்தில் இருக்கும் வரை மைதானத்திலும் சரி தொலைக்காட்சி யிலும் சரி ரசிகர்களை கட்டிப்போட்டிருக்கும். அந்தளவிற்கு அவரது ஆட்டம் அபாரமாயிருக்கும். கிரிக்கெட் தெரியாத பிரபல விளையாட்டு விமர்சகர்கள் கூட கிரிக்கெட் தெரியாத நாடுகளில் சச்சினைப் பற்றி மிக அற்புதமாக வர்ணிக்க காரணம் அவரது அபார ஆட்டமாகும்.

சச்சினின் சாதனைகள் பற்றி இங்கு பேச வேண்டியதில்லை. சச்சினைப் பற்றிய விமர்சனங்கள் அவரது ரசிகர்களை பெரிதும் புண்படச் செய்யும். பல ரசிகர்கள் அவரைப் பற்றிவரும் மோசமான விமர்சனங்கள் குறித்து அலட்டிக் கொள்வதில்லை. வயது என்பது உலகில் ஒவ்வொருவருக்குமுரிய பிரச்சினை என்பதால் அவரது வயதை வைத்து அவரது ஆட்டம் குறித்து விமர்சிப்போர் பற்றி யாரும் கவலைப்படுவதில்லை. அதற்கேற்ப அவரும் சர்வதேச ருவென்ரி-20 இல் ஆரம்பத்திலிருந்தே ஆடுவதில்லை. சர்வதேச ஒரு நாள் போட்டியிலிருந்தும் விலகிவிட்டார். எல்லோராலும் பெரும்பாலும் கைவிடப்பட்டுள்ள டெஸ்ட்டில் தான் இன்று ஆடுகிறார். அதனைக் காப்பாற்ற சச்சின் போன்றோர் தொடர்ந்தும் விளையாட வேண்டுமென்பது பலரதும் விருப்பம். அவரும் தனது இந்த விருப்பத்தை அண்மையில் கூறியுள்ளார். ஓய்வுபெறுவது குறித்து தற்போது சிந்திக்கவில்லையென அவர் கூறிவிட்டதால், அவரது முடிவில் எவரும் தலையிடக்கூடாதென கிரிக்கெட் உலகின் பிரபலங்கள் பலரும் கூறியுள்ளனர்.

ஆனாலும் சச்சின் ஓய்வு பெற வேண்டுமென வலியுறுத்தும் பிரபலங்களும் உண்டு. சச்சினுக்கு வயதாகிவிட்டதால் அவரது பழைய ஆட்டம் அவரை விட்டு போய்க்கொண்டிருப்பதாக அவர்கள் கூறுகின்றனர். இளமை என்பது வரப்பிரசாதம். எதனையும் அது துடிப்புடன் செய்ய உதவும். எந்தப் பந்தையும் கால்களை வேகமாக முன்நகர்த்தியும் பின் நகர்த்தியும் பக்கவாட்டிலும் நகர்த்தி எதிர்கொள்ள உதவும். ஆனால் சச்சினால் இன்று அவ்வாறு ஆடமுடியாதிருப்பதாக விமர்சனங்கள் எழுகின்றன. முன்னர் விக்கெட் நோக்கிவரும் பந்துகளை மிக லாவகமாக காலைத் திருப்பி எல்லைக்கோட்டை தாண்ட அடிக்கும் பந்துகளுக்கு தற்போது அவர் 'கிளீன் போல்ட்' டாகி விடுகிறார். தற்போது அவரால், மிக வேகமாக வருகின்ற பந்துகளை அதற்கேற்ப ஆடமுடியாதிருப்பதாக விமர்சிக்கப்படுகிறது. இது உண்மைதான். சச்சினுக்கு பந்து வீசுவதென்றால் வேகப்பந்து வீச்சாளர்கள் நடுங்கிய காலம் தற்போது கடந்து விட்டதாகக் கூறப்படுகிறது. சச்சினும் இதனை உணரத் தொடங்கியுள்ளார். இதனால் தான் அவர் சர்வதேச போட்டியிலிருந்து திடீரென ஓய்வுபெற்றார். கடும் விமர்சனங்களுக்கு மத்தியிலேயே அவர் தனது முடிவை திடீரென அறிவித்ததால் சர்வதேச ஒருநாள் போட்டியிலிருந்து அவர் விடைபெற்ற போது அதற்குரிய கௌரவத்தை அவருக்கு வழங்க முடியாது போய் விட்டது.

இந்தச் சூழ்நிலையில் இன்று 40 வயதை எட்டியுள்ள சச்சின் தொடர்ந்தும் கிரிக்கெட் ஆடுவாரா அல்லது விமர்சனங்களுக்கு அஞ்சி விலகிவிடுவாரா என்ற கேள்வி எழுந்துள்ளது. ஆனாலும் அவர் விமர்சனங்களைக் கண்டு அஞ்சுபவரல்ல என்பது அவரது செயல்பாட்டின் மூலம் உணரப்பட்டுள்ளது. இன்றைய கிரிக்கெட்டில் டெஸ்ட் போட்டி என்பது பெரும்பாலும் கைவிடப்பட்டதொன்றாக மாறி வருகையில் சச்சின் போன்றவர்களால்தான் அதனைக் காப்பாற்ற முடியும். தனிப்பட்ட ரீதியில் இல்லாவிடினும் டெஸ்ட் போட்டிகளை காப்பாற்றுவதற்காகவாவது அவர் மேலும் சிலகாலம் கிரிக்கெட் விளையாடவேண்டுமென்பதே பலரதும் எதிர்பார்ப்பாகும். ■




Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# மனிதக் கணினி சகுந்தலாதேவி

## (1929 -2013)

மனித கம்பியூட்டர் என்று வர்ணிக்கப்பட்ட கணிதமேதை சகுந்தலாதேவி அவரது 80ஆவது வயதில் கடந்த மாதம் 21 ஆம் திகதி காலை தென்னிந்திய நகரமான பெங்களூரில் காலமானார். புகழ்பெற்ற சோதிடராகவும் விளங்கிய சகுந்தலாதேவி சுவாசப்பிரச்சினை மற்றும் இருதய நோய்களுக்காக இருவாரங்களாக நகரில் உள்ள ஆஸ்பத்திரியொன்றில் சிகிச்சை பெற்றுவந்த நிலையிலேயே மரணம் சம்பவித்தது.

அவரது மறைவு கணிதத்துறையிலும் சோதிடத்துறையிலும் ஒரு பெரிய வெற்றிடத்தை விட்டுச் சென்றுள்ளது. சகுந்தலா தேவிக்கு எண்களைக் கையாளுவதில் ஒரு அபார மன ஆற்றல் இருந்தது. சிறுவயதில் இருந்தே எண்களை மனப்பாடமாக்குவதிலும் சிக்கலான கணிதப் பிரச்சினைகளைத் தீர்ப்பதிலும் அவருக்கு வியத்தகு ஆற்றல் இருந்தது. ஆறு வயதிலேயே தனது கணித ஆற்றலை மைசூர் பல்கலைக்கழகத்தில் அவர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org
சிவாநுசன நூலகம்
யாழ்ப்பாணம்.

**சகுந்தலாதேவி உலகில் அதி துரித மனித கணினியாக சிக்கலான கணித பிரச்சினைகளை மின்னல் வேகத்தில் தீர்க்கவல்ல ஒருவராக விளங்கினார். அவர் கணினிகளை விடவும் விரைவாகச் செயற்பட்ட சந்தர்ப்பங்கள் பல**

வெளிக்காட்டியிருந்தார்.

கணிப்புப் பொறிகளினதும் கம்பியூட்டர்களினதும் வருகையுடனேயே சகுந்தலா தேவியின் ஆற்றல் தெட்டத்தெளிவாயிற்று. அவர் உலகில் அதி துரித மனிதக் கணினியாக சிக்கலான கணிதப் பிரச்சினைகளை மின்னல் வேகத்தில் தீர்க்கவல்ல ஒருவராக விளங்கினார். அவர் கணினிகளை விடவும் விரைவாகச் செயற்பட்ட சந்தர்ப்பங்கள் பல.

அமெரிக்காவின் டெக்சாஸ் மாநிலத்தில் டலஸ் நகரில் உள்ள பல்கலைக்கழகமொன்றில் 1977 ஆம் ஆண்டு 50 செக்கன்களில் இருபத்தொரு இலக்க எண் ஒன்றின் 23 ஆம் மூலத்தை (அந்த எண்ணை அதனாலேயே 22 முறை பெருக்கினால் தரப்பட்ட இருபத்தொரு இலக்க எண் கிடைக்குமென்பதை) அவர் கணித்தார். பதின்மூவாயிரம் போதனைகளைப் (Instructions) பெற்ற ஒரு கணினி அதே கணிப்பைச் செய்ய ஒரு முழு நிமிடமெடுத்தது.

சகுந்தலாதேவி கணிதக் கொள்கைகளின் விருத்திக்கு பங்காற்றியவரல்ல. அவர் எவ்வாறு மின்னல் வேகத்தில் கணக்கிட்டார் என்பதும் அவரால் விளக்கப்படவில்லை. எனினும் கணிதத்தை மக்கள் மத்தியில் பரவலாக்குவதிலும் குறியாக குழந்தைகளிடையே கணிதம் பற்றிய அச்சத்தை நீக்குவதிலும் அவருடைய பங்கு பெரிதும் மெச்சத்தக்கது. சகுந்தலாதேவியின் கணித ஆற்றல் அவர்களுடைய அக்கறையைத் தூண்டியது. அவருடைய மேதமை வெறுமனே எண்கணிதப் பிரச்சினைகளைத் தீர்ப்பதிலும் மட்டுமல்லாது சிறுவர்களிடையே கணிதத்தை புதிர்களை விடுவிக்கும் விளையாட்டான ஒரு உத்தியோகப் பரவலாக்குவதிலும் இருந்தது.

ஒருதலைமுறை இந்தியர்கள், சகுந்தலாதேவியின் உரைகளைக் கேட்டும் எளிதிற் படித்துவிளங்கக்கூடிய மொழியில் அவர் கணிதம் பற்றி எழுதிய நூல்களை வாசித்தும் கணிதத்தை நேசிக்கத் தொடங்கினர். கணிதத்தை விரும்பிக் கற்றோரின் தொகை அவருடைய ஊக்குவிப்பால் பெருகியது. அவருடைய உச்ச மேதமை கணிதத்தை அனைவருக்கும் எட்டக் கூடியதாக்கியமையாகும்.

லண்டன் இம்பீறியல் கல்லூரியில் 1980 ஆம் ஆண்டு அங்கொன்று இங்கொன்றாக தொடர்பின்றி தெரிந்தெடுக்கப்பட்ட இரு 13 இலக்கங்களைக் கொண்ட எண்களை 28 செக்கன்களில் பெருக்கிக்காட்டி சாதனை செய்த சகுந்தலாதேவி உலக சாதனைப் பதிவு ஏடான கின்னஸ் புத்தகத்தில் இடம்பெற்றிருந்தார்.

சகுந்தலாதேவியின் கணித ஆற்றலை மாத்திரமே வெளியுலகம் பெருமளவுக்கு அறிந்துவைத்திருக்கிறது. மிகவும் இளவயதில் அவர் அனுபவித்த கஷ்டங்கள் வெகுசிலருக்கே தெரியும். பாடசாலையில் இருந்து இளவயதிலேயே விலகிவிட்ட சகுந்தலாதேவிக்கு முறையான கல்வி என்பது கிடையாது. அவரது குடும்பத்தைக் காப்பாற்றுவதற்காக அவர் பட்டினியுடன் அடிக்கடி வேலை செய்யவேண்டியிருந்தது. ஒரு தடவை சகுந்தலாதேவி பாடசாலையொன்றில் அனுமதிக்கப்பட்டார். ஆனால், மூன்று மாதங்களுக்குள்ளாக வீட்டுக்கு திருப்பியனுப்பப்பட்டார். குடும்பத்தினால் பாடசாலைக் கட்டணத்தைச் செலுத்த இயலாமல் இருந்ததே அதற்குக் காரணமாகும்.

சில வருடங்களுக்கு முன்னர் டெக்கான் ஹெரால்ட் பத்திரிகைக்குப் பேட்டியொன்றை அளித்த சகுந்தலாதேவி பின்வருமாறு கூறினார்;

ஆங்கிலத்திலும் கணிதத்திலும் நான் சிறப்பாக பிரகாசித்த போதிலும் என்னை அவர்கள் பாடசாலையில் வைத்திருக்கவில்லை. தினமும் கந்தலான ஒரே உடையையே அணிந்து கொண்டு சென்றமைக்காக என்னை மாணவர்களும் ஆசிரியர்களும் கேலி பண்ணுவார்கள். ஆனால், அணிவதற்கு என்னிடம் ஒரேயொரு சாறி மாத்திரமே இருந்தது. அதை தோய்த்துவிட்டு வீட்டு வெளியே உள்ள மரமொன்றில் உலரப் போடுவேன். அது உலரும் வரை கிழிந்த துவாயொன்றைக் கட்டிக் கொண்டு குளிரில் நடுங்கிக் கொண்டிருப்பேன்.

தனது இளைய சகோதரியை மிகவும் நேசித்தார் சகுந்தலாதேவி. ஒரு தடவை எலும்பு நோயொன்றினால் பாதிக்கப்பட்டிருந்த சகோதரியை தமிழ்நாட்டின் வேலூரில் உள்ள ஆஸ்பத்திரியொன்றுக்கு சிகிச்சைக்காக அவர் கூட்டிக்கொண்டு சென்றார். வெறுமனே 40 ரூபா பணத்தை ஆஸ்பத்திரிக்கு செலுத்த முடியாததால் சகோதரிகளை அவர்கள் திருப்பியனுப்பிவிட்டார்கள். சகோதரி பிறகு நோய் தீவிரமடைந்து சில வருடங்களில் இறந்துவிட்டார். அதே சகோதரியின் பெயரில் பின்னாளில் சகுந்தலாதேவி ஷாம்ராஜ்பேட்டையில் ஒரு ஆஸ்பத்திரியையே கட்டினார் என்பது குறிப்பிடத்தக்கது.

இளவயதில் பெரும் கஷ்டங்களை அனுபவித்தார் என்பதற்காக சகுந்தலாதேவி எவர் மீதும் வெறுப்பை வெளிக்காட்டவில்லை. சோதிடர் என்ற வகையில் மக்களுக்கு அவர் பெரிதும் உதவினார். தனக்கு கிடைத்திருக்கக்கூடிய ஆற்றலை மற்றவர்களை மகிழ்ச்சிப்படுத்துவதற்காக பயன்படுத்தினார் அவர். ■

– சாரதா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# லால்குடி ஜெயராமன்
## (1930 -2013)

ஜெயராமன் வாசிப்பதைக்கண்டே பலர் வயலினையும் கர்நாடக இசையையும் கற்க ஆசைப்பட்டனர். அவர் தனது இசைப்புலமையை ஒரு குழுவாகவிருந்து அடுத்த தலைமுறைக்கு கையளிக்கவும் ஒழுங்கு முறைகள் சார்ந்து நிதானமாக அர்ப்பணிப்புடன் இயங்கியவர்

தமிழ்ச் சூழலில் பிரபல வயலின் இசைக்கலைஞராக, இசை மேதையாக நன்கு அறியப்பட்டவர் லால்குடி ஜெயராமன். இவர் தனது 82 ஆவது வயதில் கடந்த மாதம் 22 ஏப்ரல் 2013 அன்று காலமானார். இவர் தனது 12ஆவது வயதில் ஒரு பக்கவாத்தியக் கலைஞராக தனது இசைப்பயணத்தை ஆரம்பித்து 70 ஆண்டுகள் இசை உலகில் பிரகாச மாக விளங்கிவந்தவர்.

ஜெயராமன் திருச்சி மாவட்டம் லால்குடியில் 17.09.1930 இல் பிறந் தவர். இசை மும்மூர்த்திகளுள் ஒரு வரான தியாகராசரின் சிஷ்ய பரம் பரையில் உருவானவர். ஜெயராம னின் கொள்ளுத்தாத்தா ராம ஐயர் தியாகராசரிடம் நேரடியாக இசை யைக் கற்கும் பாக்கியம் பெற்றவர். இவரது தாத்தா, தந்தை யாவரும் இசைக்கலைஞராகவே வாழ்ந்து வந்தனர். இவ்வாறான இசைச்சூழ லில் தான் ஜெயராமன் வாழ்ந்துவந் தார். இவர் தந்தையாரி டம் இருந்து பல்வேறு நுணுக்கமான இசையறிவு, இசைப்புலமை, இசையனுபவம் யாவற்றையும் முழுமையாகவும் ஆழமாகவும் கற்றுத்தேறி வந்தார். தொடர்ந்து தனது கடின உழைப்பால் இசைமேதையாக வாழ்ந்தார்.

ஜெயராமன் வயலின் வாசிப்பில் லால்குடி பாணி எனும் முறைமையை உருவாக்கியவர். இவரது வயலின் வாசிப்பு ஏறத்தாழ பாடுவது போலவே இருக்கும். இருபதாம் நூற் றாண்டில் வாழ்ந்துவந்த பல்வேறு இசைக்கலைஞர்களுக்கும் இசை மேதைகளுக்கும் இவர் பக்கவாத்தி யம் வாசித்து தனது ஆளுமையை பல்வேறு சந்தர்ப்பங்களிலும் நிரூபித் தவர்.

கர்நாடக இசைத்துறையில் பெரும் ஆளுமை செலுத்திவந்த டைகர் வரதாச்சாரியார், மழவராயநேந்தல் சுப்பராம பாகவதர், அரியக்குடி பாப நாசம் சிவன், செம்பை மகா ராஜபுரம் விஸ்வநாத ஐயர், ஜி.என்.பி.முசிறி எம்.என்.தண்டபாணிதேசிகர், மதுரை சோமு, மகாராஜபுரம் சந்தானம் முத

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லான புகழ்பெற்ற பல இசைக்கலைஞர்களுடன் லால்குடி இணைந்து பணியாற்றினார். இவர் பக்கவாத்தியம் வாசிக்காத ஜாம்பவான்களே இல்லை என்றே கூறலாம்.

கச்சேரி செய்யும் கலைஞரின் இசைப்போக்கினை தனித்தன்மையை முன்னறியும் திறன்கொண்டு ஒரு பக்கவாத்திய கலைஞராகவும் தமது அழியா முத்திரையைப் பதித்துள்ளார். எப்போதும் கச்சேரி செய்யும் கலைஞரை தான் விஞ்சிவிடாத படி பார்த்துக்கொண்டார். இதன் மூலம் ஒரு பக்கவாத்தியக் கலைஞர் எத்தகைய கச்சேரி தர்மத்தைப் பின்பற்ற வேண்டும் என்பதற்கும் தானே எடுத்துக்காட்டாகவும் இருந்துள்ளார். லால்குடி பாணி என்று தனியாக அடையாளப்படுத்தும் பண்புகள் வெளிப்பட்டன. வயலின் மீதான இவரது பிசகற்ற ஆளுமை வசீகரிக்கக் கூடிய தான ஆழ்ந்த ஞானமிக்க பாணி என் பது இசை ஆய்வாளர்களின் கருத்து.



இதைவிட ஜெயராமன் ஆயிரத்திற்கும் மேற்பட்ட தனிக்கச்சேரியையும் நிகழ்த்தியுள்ளார். இதன் மூலம் உலகெங்கும் தனது தனித்த வயலின் இசையினை நீக்கமற நிறைந்திருக்கச் செய்திருந்தவர். எந்த கீர்த்தனையை எந்த காலப் பிரமாணத்தில் வாசித்தால் சுகம் கிடைக்கும் என்பதற்கு லால்குடி அகராதி போன்றவர். தனித் துவமான ஒப்பற்ற இசைப்பாணியை யும் உருவாக்கி பாடும் வயலின் மூலம் புதிய இசைக்கோலத்தை - லால்பாணியை இசைமரபில் இயக்க எழுச்சிகொண்ட விசையாக தள மாற்றம் செய்துள்ளார்.

இவரது வயலின் உள் இழைந்த பாவம் மற்றும் உணர்ச்சிகளுடன் வார்த்தைகளுக்கு உயிரூட்டி வாய்ப்பாட்டினை அப்படியே செவிக்கு கடத்தும் ஆற்றல் கொண்டது. கற்பனை மிகு ராக ஆலாபனைகள்.

பாவம் கூடிய இசை வரிகள் யாவும் ஆழ்ந்த ஈடுபாட்டுடன் இசைக்கப்படும் கிருதிகள் லயத்தினை தன்கட்டுக்குள் வைத்திருக்கும் நுட்பமறிந்தவர். இசையை ஓர் அளிக்கையாக மாற்றும் ஆக்கத்தன்மை கொண்டவர்.

ஜெயராமன் கீர்த்தனையை வாசிக்கும்போது நாமும் வரிக்கு வரி வார்த்தைக்கு வார்த்தை சேர்ந்து பாடலாமா? என்பது போல அப்படி ஒரு சாகித்திய தெளிவு இருக்கும். நிரவலாக இருக்கட்டும், எத்தனை லய வித்தைகள் உண்டோ அனைத்தையும் செய்வார். இவ்வாறு லால்குடியின் இசைப்பரிமாணத்தை விளக்கும் இசை ரசிகர்கள் நம்மத்தியில் உள்ளனர்.

ஜெயராமன் தனி வாசிப்பு, பக்கவாத்தியம் என்பதற்கு அப்பாற்பட்டு வயலின், வீணை, புல்லாங்குழல் ஆகிய வாத்தியங்களையும் ஒரே நேரத்தில் வாசிக்கும் திறமை கொண்டவர். வீணா- வேணு-வய லின் எனும் ஒரு புதிய கச்சேரி வகை யையும் தமிழ்ச்சூழலுக்கு அறிமுகப் படுத்தியுள்ளார். லால்குடி ஜெயராமனின் வயலினும் புல்லாங்குழல் ரமணியின் வேணுகானமும் ஆர். வெங்கட்ராமனின் வீணையும் இணைந்து ஒரு திரிவேணி சங்கமம் போல ஹரஹரப் பிரியாவில் சங்கமிப்பது நம் உடலை விட்டு உயிர் பிரிந்து வான்வெளியில் மிதக்கும் அனுபவம். ''ராம நீ சமான மெவரு'' வை மூவரும் இணைந்து வாசித்துள்ளதை வர்ணிக்க அந்த தியாக பிரம்மம் தான் மறுபடி பிறந்து வர வேண்டும் என்று இசை விமர்சகர் ஒருவர் குறிப்பிட்டதை நாம் இங்கு நினைவுபடுத்தலாம்.

லால்குடி இசையுலகிற்கு ஆற்றிய பங்களிப்புகளில் ஒன்று தென்னிந்திய கர்நாடக இசையையும் அதன் வழி வயலினையும் மேற்கத்திய நாடுகளில் பிரபல்யப்படுத்தியதாகும். ரஷ்யாவில் நடந்த இந்திய சர்வதேச இசை விழா, அமெரிக்க மற்றும் லண்டனில் நடந்த இந்திய விழா முதலானவற்றிலெல்லாம் பங்கேற்று இசை வழங்கியுள்ளார். 1965 ஆம் ஆண்டு நடந்த எடின்பர்க் இசை விழாவில் ஜெயராமனின் வயலின் இசையையும் இவரது வாசிக்கும் திறனையும் கண்டு வியந்த புகழ் பெற்ற வயலின் இசைக்கலைஞர் எஹூத் மெனுஹின் லால்குடி அவர்களுக்கு இத்தாலிய வயலின் ஒன்றினை பரிசளித்தார். லால்குடி சிங்கப்பூர், மலேசியா, மணிலா மற்றும் கிழக்கு ஐரோப்பிய நாடுகள் பலவற்றிலும் எண்ணற்ற கச்சேரிகள் செய்துள்ளார். பாக்தாத்திலுள்ள சர்வதேச இசைக்கழகம், ஆசிய பசுபிக் இசையரங்கு, ஈரான் ஒலிபரப்பு நிறுவனம் முதலானவற்றிலும் தமது இசையை இசைத்துள்ளார்.

1979ஆம் ஆண்டு 77 போட்டியாளர்களில் ஜெயராமனின் இசை முதலாவதாக தேர்ந்தெடுக்கப்பட்டது. பிரிட்டன், ஜேர்மன், இத்தாலி ஆகிய நாடுகளில் இவர் வழங்கிய ''ஜுகல் பந்தி'' கச்சேரிகள் பெரும் வரவேற்பைப் பெற்றன. ஜெயராமன் உருவாக்கிய ''ஜெய ஜெய தேவி'' என்ற நாட்டிய நாடகம் 1994 இல் அமெரிக்காவில் க்ளிவ்லேண்டில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரங்கேற்றப்பட்டது. இதன் பிறகு அமெரிக்காவின் ஏனைய நகரங்களிலும் இந்த நாட்டிய நாடகம் நடத்தப்பட்டது.

ஜெயராமனிடம் பாம்பே ஜெயஸ்ரீ, எஸ்.பி.ராம், சங்கரி கிருஷ்ணன், சாகேத ராம் வித்தியா சுப்ரமணியம், சரஸ்வதி பாபு ஆகியோர் வாய்ப்பாட்டு இசையைக் கற்றவர்கள். இதுபோல் இவரது பிள்ளைகளான ஜி.ஜெ.ஆர். கிருஸ்ணன், ஜெ.விஜயலட்சுமி மற்றும் விட்டர் ராமமூர்த்தி, பத்மாசங்கர், உசா ராஜகோபாலன் ஆகியோர் இவரிடம் முறையாக வயலின் கற்றவர்கள். தனது பரந்த இசையறிவை மற்ற இசைக்கலைஞருடன் பகிர்ந்துகொள்ளத் தயங்காத பெருந்தன்மை உடையவர் என்று இவர் காலத்து கலைஞர்கள் கருத்துரைக்கின்றனர்.

ஜெயராமன் வாசிப்பதைக் கண்டே பலர் வயலினும் கர்நாடக இசையும் கற்க ஆசைப்பட்டனர். இதுவொரு யதார்த்தமான அசைவுப்போக்காகவும் மாறியது. தொழில்முறைக் கலைஞராக தமது தொழிலின் மீது ஈடுபாடும் அர்ப்பணிப்பும் மிக்கவர். தனது இசைப்புலமையை ஒரு குழுவாக இருந்து அடுத்த தலைமுறைக்கு கையளிக்கவும் ஒழுங்கு முறைகள் சார்ந்து நிதானமாக அர்ப்பணிப்புடன் இயங்கியவர். இவரது இசைவாழ்வு பல தலைமுறைகள் அளவிற்கு பரந்ததாக உள்ளது. சமகால ஒத்திசைவுடன் புத்தெழுச்சி பெறும் பண்பு கொண்டதாக புதுப்புது இசைக்கோலம் உருவாக்கிச் செல்வதாகவும் உள்ளது.

ஜெயராமன் இந்திய மத்திய அரசின் பத்மஸ்ரீ விருது, மாநில அரசின் அவைக்கலைஞர் விருது, பல்வேறு இசைமன்றங்களின் விருதுகள் என அவர் வாழ்ந்துகொண்டிருந்த காலத்திலேயே கௌரவங்களும் விருதுகளும் குவிந்துகொண்டிருந்தன.

இன்றைய காலகட்டத்தில் கர்நாடக இசைக்கச்சேரிகளில் மேலைநாட்டு வாத்தியமான வயலின் பிரதான இடத்தை வகித்து வருகின்றது. இதற்குப் பெரிதும் காரணம் எட்டயபுர சமஸ்தான வித்துவானாக சிறந்து விளங்கிவரும் திருவாரூர் மூவரில் ஒருவருமாகிய ஸ்ரீ முத்துஸ்வாமி தீட்சிதரின் சகோதரருமான பாலுஸ்வாமி தீட்சிதரேயாவார். இவர் மேற்கத்தையவர்கள் வாசித்த வயலின் இசை ஒலியினால் பெரிதும் கவரப்பட்டவர். பின்னர் பாலுஸ்வாமி ஆங்கிலேயரிடமே மேற்கத்தைய இசையை சிறப்புடன் கற்றுக்கொண்டவர். இதன் பின்னர் தான் வயலினை தனது கர்நாடக இசைக்கு ஏற்றவாறு சுருதி சேர்க்கும் முறையை உருவாக்கி நமது இசையினை வாசித்து வாசித்து நுணுக்கங்களை அறிந்து அப்படியே கர்நாடக இசையை வாசிக்கும் முறையில் தேர்ச்சியும் பெற்ற முதல் வித்துவான் என்ற பெருமையையும் அடைந்தார்.

இவருக்குப் பிறகு தான் கர்நாடக இசைப்பாடகருக்கு பக்கவாத்தியமாகவும் மேலும் தனிப்பிரதான கச்சேரியாக வாசிக்கும் முறையாகவும் வயலின் இடம்பெற்று வருகின்றது. 19ஆம், 20ஆம் நூற்றாண்டுகளில் எண்ணற்ற பாடகர்களின் கச்சேரிகளுக்கு பெரிய வயலின் மேதைகள் பக்கவாத்தியம் வாசித்து பெரும் புகழைப்பெற்று வாழ்ந்துள்ளனர். இவ்வாறான மரபில் வந்தவர்தான் லால்குடி ஜெயராமன் என்பதும் குறிப்பிடத்தக்கது. ■

–சேனாதி

---

*(03ஆம் பக்கத்தொடர்ச்சி...)*

சம்பந்தனின் அனுபவமும் அறிவுப் பக்குவமும் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பைக் குலையவிடாமல் பாதுகாக்கும் என்று நம்புகிறோம். அடுத்துவரும் காலத்தில் தமிழ் மக்களுக்குத் தலைமை தாங்கக்கூடிய அரசியல் சக்தி எத்தகையாக இருக்கும் என்பதைப் பொறுத்தே சம்பந்தன் அவர்களின் தலைமைத்துவத்தை வரலாறு மதிப்பிடும். கீர்த்தி மிக்க மரபொன்றுக்கு வழிவகுக்கக்கூடியதாக தமிழ் அரசியல் சக்திகளை ஐக்கியப்படுத்தி வைத்திருக்கக் கூடியதாக கூட்டமைப்பை அவர் வழிநடத்த வேண்டும். ■

---

*(கடைசிப்பக்கத் தொடர்ச்சி...)*

திரும்பவும் நெளியவும் முணுமுணுக்கவும் அலுத்துப் போகவும்... இந்தச் சங்கடங்களுடன் இச்சடங்கு இனிதே அரங்கேறுகிறது. உரையாற்றுவோரும் தன்னுடைய பணி எந்த வரையறைக்குள் அடங்க வேண்டும் என்று சரியாக நிர்ணயித்துக் கொள்ள வேண்டும்.

அப்படி ஒருவர் திடமாக இருந்தாலும் அவருக்கு முன் பேசியவர் இவருடைய எல்லைக்குள் பிரவேசித்து விட்டால், சில சந்தர்ப்பங்களில் இவரும் தனது பேச்சுத் திறனை நிரூபிக்க மற்றவர்களின் எல்லைக்குள் கை போடுவதும் இடம்பெறுவது சகஜம். இத்தகைய சிக்கல்களால் நூல்வெளியீட்டு விழாவைச் சிறப்பித்து மகிழவென வந்தோர் இந்த அவஸ்தைகளையெல்லாம் எங்கே சொல்லி வைப்பது? இவர்கள் நிலையில் இருந்து நாம் எப்போவாவது சிந்தித்து இருக்கிறோமா? எங்கள் கூட்டங்களை அல்லது நிகழ்ச்சிகளை நாம் ஆரோக்கியமாக திட்டமிட்டு நடத்த எப்படிச் சிந்திக்கிறோம். இதுபற்றிய சிந்தனை நமக்கு வேண்டாமா? ■

---

*(31ஆம் பக்கத் தொடர்ச்சி...)*

ஐரோப்பிய ஒன்றியத்தில் சேர்பியாவை சேர அனுமதிப்பதில் அதன் பெரிய நாடுகள் காட்டுகின்ற ஆர்வம், இறுதியில் கொசோவோவின் சட்ட பூர்வமான பிரிவினையை உறுதிப்படுத்துவதற்கு நிர்ப்பந்தத்தைக் கொடுப்பதற்கான பரந்தளவிலான மேற்குலக தந்திரோபாயத்தின் ஒரு அங்கமாக இருக்கக்கூடும். ஒரு காலத்தில் உலகின் மிகவும் துடிப்பான பல்லின அரசுகளில் ஒன்றாக விளங்கிய முன்னாள் யூகோஸ்லாவியா பல நாடுகளாகச் சிதறியமை, இனத்துவ மேலாதிக்க நிலை நிறுத்துவதற்கான நாட்டம் எப்போதுமே இனவாதிகளையே திருப்பித்தாக்குகிறது என்பதற்கான சான்றாகும்.! ■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சாகப்போகும் அன்புக்குரிய நாய்க்குப் பதிலாக அதே போன்ற குளோனிங் குட்டி வேண்டுமா?

அந்தக் குழந்தைக்கு சில நாட்களாகப் பசியில்லை, உற்சாகமில்லை, விளையாடுவதில்லை. எதையோ பறிகொடுத்தான சோகத்தில் மாய் ந்து கிடந்தது.

இரவில் கண்விழித்தெழுந்து ''ரெமி ரெமி'' கத்துகிறது. பெற்றோர்களுக்கு என்ன செய்வது என்று புரியவில்லை. எவ்வாறு தமது குழந்தையை அமைதிப்படுத்துவது, தூங்க வைப்பது எப்படி, உண்ண வைப்பது எவ்வாறு எனப் புரியாது அல்லலுறுகிறார்கள்.


ஆம் ரெமி அவர்களது வளர்ப்பு நாய். நாய் என்று சொன்னால் கோபிப்பார்கள். தமது இரண்டாவது குழந்தை போல வளர்த்தார்கள். திடீரென நோய்வாய்ப்பட்டது. மிருக வைத்திய நிபுணர் வந்து ஊசி போட்டு, சேலைன் ஏற்றி முழு முயற்சி செய்தார். முடியவில்லை. அவர்களது இரண்டாவது குழந்தையும், அந்தப் பிள்ளையின் சகோதரனும் ஆன ரெமி இப்பொழுது இல்லை.

பிரிவுத் துயரில் மூழ்கிக் கிடக்கும் அந்தக் குழந்தைக்கு அதே ரெமியை மீண்டெடுத்துக் கொடுக்க முடியுமா?

ஒரு இலட்சம் அமெரிக்க டொலரைத் தாருங்கள் (சுமார் 6,000 பவுண்ட்ஸ்) நாய்க்குட்டியைத் தருகிறேன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குளோனிங் ஆரவாரங்களும் சவால்களும்




என்கிறார் Insung Hwang என்பவர். நாய் மரணிப்பதற்கு ஓரிரு நாட்கள் முன்பாகக் கொடுக்க வேண்டும்.

யார் இவர்? தென் கொரியாவைச் சார்ந்த ஒரு விஞ்ஞானி. அங்குள்ள Sooam Foundation என்ற நிறுவனத்தில் வேலை செய்கிறார். இந்த நிறுவனம் மற்றொரு விஞ்ஞானியான Hwang WooSuk என்பவரால் நடாத்தப்படுகிறது. 2006ஆம் ஆண்டின் மனித குளோனிங் பிரச்சினையோடு தொடர்புடையவர். ஒரு கோடி ரூபாய் என்பது எங்களில் பலருக்கு மிகப் பெரிய தொகை. விஜய் ரி.வி.யின் வெல்லுங்கள் ஒரு கோடி நிகழ்ச்சியில் மட்டும் அந்தத் தொகையைக் காணக் கிடைத்திருக்கும்.

ஆனால் கோடிகளில் தவளும் பல அமெரிக்கர்களுக்கு அது சுளுவான காசு. சென்ற வருடம் அதாவது 2012 இல் 12 நாய்க்குட்டிகளை இவரது அமெரிக்க நிறுவனமான Insung Hwang's laboratory தனது வாடிக்கையாளர்களுக்கு வழங்கியுள்ளது. இவை யாவும் இறக்கவிருந்த அவர்களது நாய்களின் திசுக்களைக் கொண்டு குளோனிங் முறையில் பிறந்த நாய்க் குட்டிகளாகும்.

ஜல்லிக் கட்டு நாம் எல்லோரும் அறிந்த விளையாட்டு. காளைச் சண்டையில் பிரசித்தமான மற்றொரு நாடு ஸ்பெயின் ஆகும். அங்குள்ள 16 வயதான Alcalde என்ற காளை பல காளைகளை வென்று பெரும் புகழ் பெற்றதாகும். அதன் உரிமையாளரான Victoriano del Rio சுமார் 400 காளைகளை தனது பண்ணையில் வளர்த்து போட்டிக்கு விடுபவர். இருந்தபோதும் Alcaldeயின் ஆற்றலில் அவருக்கு அபார நம்பிக்கை உள்ளது. வயதாகும் அதன் ஆற்றலை என்றென்றைக்கும் பேணுவதற்காக குளோனிங் செயன்முறையை இப்பொழுது நாடியுள்ளார்.

ஆம் பண்பாடு, ஆன்மிகம், தொழில் நெறி போன்றவற்றின் அடிப்படையிலான சர்ச்சைகள் அவ்வப்போது எழுந்தபோதும் மிருகங்களை குளோனிங் முறை மூலம் உருவாக்கம் செய்கின்ற விஞ்ஞான தொழில்முறை ஆர்ப்பாட்டமில்லாமல் எமது வாழ்வில் நுழைந்துவிட்டது.

### குளோனிங்

குளோனிங் என்பது என்னவென அறியாதவர்கள் இப்பொழுது இருக்க முடியாது. டொலி என்ற ஸ்கொட்லன்ட் ஆட்டுக் குட்டியின் வரவிற்குப் பின்னர் அது உலகளாவிய ரீதியில் பிரபலமாகிவிட்டது. ஆனால் குளோனிங் என்பது ஒரு மிருகத்தின் அல்லது உயிரினத்தின் அச்சுப் போன்ற பிரதியை உருவாக்குகிற உயிரியல் விஞ்ஞான தொழில் நுட்பம் என்றே பலரும் கருதுகிறார்கள். அதாவது மரபியல் ரீதியாக மூல உயிரினத்தின் பிரதிமையை ஏற்படுத்துவதாகும்.

சற்று விரிவான தளத்தில் குளோனிங் என்பதை உயிரியல் நகலெடுத்தல் எனச் சொல்லலாம். இதில் மூன்று முக்கிய வகைகள் உண்டு.


''மரபணு குளோனிங் - ஒரு உயிரினத்தின் ஒரு மரபணுவை மட்டும் அல்லது டிஎன்ஏ (DNA) யின் ஒரு பகுதியை மட்டும் பிரதிகள் எடுப்பதாகும்.'' இனப் பெருக்கத்திற்கான குளோனிங் இது பற்றித்தான் பேசிக் கொண்டிருக்கிறோம். ஒரு மிருகத்தை அல்லது வேறு உயிரினத்தின் முழுமையான பிரதிமையை உருவாக்கல்.

''சிகிச்சை முறையான குளோனிங் - இது உடலிலுள்ள மூலக் கலங்களான ஸ்டெம் செல்ஸ் மூலம் ஒருவரது உடலிலுள்ள பழுதடைந்த கலங்களுக்குப் பதிலாக அதேபோன்ற அச்சொட்டான ஆரோக்கியமான கலங்களை உருவாக்குவதாகும். உதாரணமாக நீரிழிவு நோயாளரில் பீட்டா செல்சை உருவாக்கும் முயற்சியைச் சொல்லலாம்.

### இனப் பெருக்கத்திற்கான குளோனிங் இது எவ்வாறு செய்யப்படுகிறது?

குறிப்பிட்ட நாய் இறப்பதற்கு

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்.



வைத்தியக் கலாநிதி
எம்.கே. முருகானந்தன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்னரான 5 நாட்களுக்குள் அந்த நாயிலிருந்து திசு மாதிரிகளை எடுத்து உறைய வைக்கிறார்கள். ஆய்வுகூட சேமிப்பறையில் ஏற்கனவே இருக்கும் இதனோடு எந்தவித தொடர்பு மற்ற வேறொரு பெண் நாயிடமிருந்து பெறப்பட்ட முட்டையில் இணைக்கிறார்கள். அதனது டிஎன்ஏ யை முழுமையாக அப்புறப்படுத்திய பின்னர் வளர்ப்பு நாயின் டிஎன்ஏ யை மாற்றீடு செய்கின்றனர். இவ்வாறு பெறப்பட்ட கருமுளையை பின்னர் ஒரு வாடகை நாய்த் தாயின் கருப்பையில் வைத்து இயற்கையாக வளரச் செய்வார்கள். காலகதியில் நாய்க்குட்டி பிறக்கும். ஒரு மாதமாகும் வரை குட்டியானது வாடகைத் தாயின் பாலைக் குடித்து வளரும்.

குளோனிங் செய்யப்பட்ட கருவைச் சுமக்கும் தாய் நாயானது அதே இனத்தைச் சார்ந்ததாக இருக்க வேண்டியது அவசியமல்ல. இருந்தபோதும் ஒத்த அளவுள்ள இனங்களிலிருந்து தேர்வு செய்தார்கள். பொதுவாக ஒரு குட்டி கிடைக்கும். ஆனால் சில தருணங்களில் அதே மாதிரியான இரண்டு மூன்று குட்டிகள் கிடைப்பதுண்டு. அவ்வாறு கிடைத்தால் ஓடர் கொடுத்த வாடிக்கையாளர் அவை அனைத்தையும் மகிழ்ச்சியோடு எடுத்துச் சென்று விடுவார்கள் என In-sung Hwang மகிழ்வோடு சொல்கிறார்.

### குளோனிங் சவால்கள்

"..பிள்ளை பெற்ற ராஜா ஒரு நாயை வளர்த்தார். அதை பிள்ளைக்கு மேல் கண்களைப் போல் காத்து வளர்த்தார்.."

எனப் படிக்காத மேதையின் ஒரு பாடல் வருகிறது. ஆம் பலர் தமது பிள்ளையை விடத் தமது வளர்ப்பு மிருகத்திலேயே அதிக பாசம் வைத்திருப்பார்கள். வளர்ப்பு மிருகங்கள் அவற்றை வளர்ப்போரின் உணர்வோடு ஒன்றியவை.

தமயந்தியின் அன்னம், சீதையின் மான் போன்ற ஒரு சில குறிப்புகள் தவிர தமிழ் இலக்கியத்தில் மனிதனுக்கும் மிருகங்களுக்கும் இடையேயான உறவு பற்றி அதிகம் பேசப்பட்டதாகத் தெரியவில்லை.

ஆனால் மேலைநாட்டு இலக்கியங்களில் குதிரைக்கும் மனிதனுக்கும் இடையேயான உறவு பற்றிய அருமையான படைப்புகள் உள்ளன. ஐத் மதேவ் குல்சாரியில் மிக அற்புதமாக அந்த உறவின் ஆழத்தைச் சொல்லியிருக்கிறார். மகனுடன் இருக்கப் பிரியப்படாது தனது கிராமத்திற்கு தனது குதிரையுடன் பயணப்படுகிறார் ஒரு வயோதிபர். வழியில் அது நோய்வாய்ப்படுகிறது. இறந்துவிடுமோ என்ற அச்சத்தில் ஏங்குகிறார். அதற்கும் தனக்கும் இடையேயான உறவின் நினைவுகளில் மூழ்குகிறார்.

இன்று மேலை நாடுகளில் நாய், பூனை போன்றவற்றிக்கு அப்பால் முதலை ஈறான மிருகங்களையும் நேசத்தோடு வளர்க்கிறார்கள். குடும்ப உறவுகள் முறிந்து தனிமையில் வாழும் அவர்களுக்கு அதற்கான தேவை எம்மைவிட அதிகமாகவே இருக்கிறது எனத் தோன்றுகிறது. அவற்றில் அதீத பாசம் வைத்திருக்கிறார்கள்.

அவ்வாறு பாசம் வைத்திருப்பவர்களிடம் தமது பாசத்திற்கு உரிய மிருகம் மரணத்தை நெருங்கும்போது குளோனிங் குட்டியை நாட முடியும். போதிய பண வசதி இருந்தால் மட்டுமே இது சாத்தியமாகும்.

### அவர்களது எதிர்பார்ப்புகள் எவ்வாறு இருக்கும்?

குளோனிங் முறையில் கிடைப்பது தமது ஒரிஜினல் வளர்ப்பு மிருகம் போலவே நிறத்திலும் பார்வையிலும் இருக்க வேண்டும் என விரும்புவார்கள். உணவு விருப்பங்கள், தங்களுடனான உறவு நெருக்கம் போன்ற அதனுடைய பழக்க வழங்கங்களும் அசலானதைப் போலவே இருக்க வேண்டும் என அவாவுவார்கள். அத்தோடு அதைப்போன்ற குணநலங்களும் உள்ளதாக இருப்பதையே நாடுவார்கள்.

### ஒத்த இரட்டையர் போன்றது

குளோனிங் குட்டி முற்று முழுதாக அசலை ஒத்ததாகவே இருக்குமா?

"அது ஒருபோதும் உங்களது அசலான வளர்ப்பு மிருகமாகவோ அதன் அச்சொட்டாக இருக்க முடியாது. 100% அவ்வாறு இருப்பது சாத்தியமல்ல. குளோனிங்கில் கிடைப்பது ஒத்த இரட்டையர் போலவே இருக்கும்" என்கிறார் Hwang. ஆனால் வெள்ளையில் கரும் புள்ளிகள் உள்ள டல்மேசியன் இனத்தில் புள்ளிகள் அச்சொட்டாக இருப்பதை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எதிர்பார்க்க முடியாது. ஆனால் அத்தகைய தெளிவான அடையாளங்கள் இல்லாத ஏனைய இனங்களில் வேறுபாடுகளை இனங்காண்பது சிரமம் என்கிறார்.

''வாடிக்கையாளர்களும் அவ்வாறான தூய இனங்களை விட கலப்பு இன நாய்களில் குளோனிங் இனங்களையே வேண்டுகிறார்கள்'' என்றார். காரணம் தெளிவாகவில்லை.

''அவற்றின் இயல்பான பண்பு உளப்பாங்கு அசலானது போல இருக்காது'' என்பதையும் ஒத்துக் கொள்கிறார். ஆனால் சில வாடிக்கையாளர்கள் அவை ஒத்த குணமுள்ளதாக இருந்ததாகச் சொல்லி மகிழ்ந்தார்களாம். உதாரணமான உணவைக் கோப்பையில் போட்டால் அவை இரண்டுமே உணவை கோப்பையிலிருந்து எடுத்துச் சென்று சில மீற்றர் தூரத்தில் வைத்தே உண்டதாகச் சொன்னார்களாம்.

### வெற்றி விகிதம்

தாங்கள் 2005இல் இந்த குளோனிங் முறையை ஆரம்பித்தபோது 2 சதவிகித வெற்றி மட்டுமே கிடைத்ததாம். இப்பொழுது அது 30 சதவிகித மளவிற்கு அதிகரித்துள்ளதாம். இற்றை வரை IVF (டெஸ் டியுப் குழந்தை) முறையில் குழந்தை பெறுவதில் கூட இந்தளவு வெற்றி இல்லையே என ஆச்சரியப்பட்டேன்.

அவர்களது அறிக்கையை நுணுகி ஆய்ந்தபோது விடை கிட்டியது. இவர் சொன்ன வெற்றி வீதம் என்பது குட்டிகள் கிடைப்பது பற்றியது அல்ல. அது கர்ப்ப விகிதம் (pregnancy rate) அதாவது கருமுளையத்தை கருப்பையில் வைத்தபோது அது கர்ப்பமாக உருவெடுத்தமை பற்றியது. கருவான பின் எத்தனை கருச்சிதைவுகள் ஏற்பட்டன. காலத்திற்கு முந்திப் பிறந்து அழிந்தவை எத்தனை. நோயோடு பிறந்து இறந்தவை எத்தனை போன்றவை பற்றி அவை பேசவில்லை.

உலகளாவிய ரீதியில் குளோனிங் முறையின் வெற்றிவிகிதம் 0.1 முதல் 3 சதவிகிதம் மட்டுமே இருப்பதாக பரவலான அறிக்கைகள் கூறுகின்றன. இதை சற்றுத் தெளிவாக இவ்வாறு கூறலாம். ஆயிரம் தடவைகள் முயற்சி செய்தால் 1 முதல் 30 குளோனிங் குட்டி உருவாகலாம். மீதி 970 முதல் 999 வரை அழிந்து போகின்றன.

### தோல்வி விகிதம் ஏன் அதிகம்

தோல்வி விகிதம் குளோனிங்கில் இவ்வாறு அதிகமாக இருப்பதற்கு பல காரணங்களைச் சொல்லலாம்.

''இச் சிகிச்சை முறையின் முதற்படியானது சேமிப்பிலிருந்து முட்டையின் டிஎன்ஏ யை முழுமையாக அப்புறப்படுத்தி மரணிக்க இருக்கும் மிருகத்தின் டிஎன்ஏயை வைப்பதாகும். இவை இரண்டும் ஒன்றுக்கு ஒன்று ஏற்புடையதாக இல்லாத விடத்து அது முட்டைக் கலத்தால் நிராகரிக்கப்பட்டு அழிந்து விடும்.

''புதிதாக மாற்றப்பட்ட கருவானது ஏற்புடையதாக இருந்தாலும் அம் முட்டை பிரிந்து பல கலங்களாக வளர்வதில் சிக்கல் ஏற்பட்டு அழிந்து போகலாம்.

''அதை மீறி வளர்ந்தாலும் கருமுளையை வாடகைத் தாயின் கருப்பையில் வைக்கும்போது அது பொருந்தி வளர மறுத்துச் சிதைந்துவிடலாம்.

''இவை யாவும் சரியானாலும் தெரியாத காரணங்களால் கர்ப்பம் சிதையலாம்.

### பிறந்த பின்னும் பிரச்சினைகள்

''பிறந்தாலும் சில தருணங்களில் குட்டிகள் வழமையை விட மிக பெரிய அளவில் பிறக்கின்றன. இதை விஞ்ஞானிகள் Large Offspring Syndrome என்பார்கள்.

''உருவத்தில மாத்திரமன்றி உள்ளுறுப்புகளும் பெரிய அளவில் இருக்கலாம்.

''இதனால் அவற்றிற்கு சுவாசப் பிரச்சினை, குருதி ஓட்டத்தில் பிரச்சினை போன்றவை ஏற்பட்டு இறந்து போகின்றன.

''வேறு சிலவற்றுக்கு மூளை, சிறுநீரகம் போன்றவற்றில் குறைபாடு இருப்பதுண்டு. இன்னும் சிலவற்றிற்கு நோயெதிர்ப்பு வலு குறைவாக இருந்து வாழ முடியாது இறந்து போகின்றன.

இக் காரணங்களால்தான் குளோனிங் முறையை இன்னமும் விவசாயத் துறையிலோ மிருக வளர்ப்புத் துறையிலோ பெரிய அளவில் செயற்படுத்த முடியவில்லை.

மேற்கூறிய தனியார் நிறுவனம் போன்ற அமைப்புகள் இறந்த வளர்ப்பு மிருகங்களை ஒத்த குளோனிங் குட்டிகளை பெற்றுக் கொடுக்கும் முயற்சியில் உள்ளதே பெரிதாகப் பேசப்படுகிறது.

### குளோனிங்கின் எதிர்காலம்

உண்மையில் குளோனிங் என்பது ஒரு பெரிய அற்புதமான விஞ்ஞான முன்னேற்றமாகவே தெரிகிறது. இருந்தாலும், அதை நடைமுறை வாழ்வில் பயன்படுத்த தெளிவான வெற்றிகரமான நடைமுறைகள் இன்னமும் தென்படவில்லை.

குளோனிங் முறையில் முழு விலங்குகளை உற்பத்தி செய்வது அதீத விளம்பரங்களையும் புகழையும் திடீரெனக் கொண்டுவரலாம். ஆனால் அதுவும் 100 விகிதம் சாத்தியமில்லை என்பதை ஏற்றுக்கொண்டே ஆக வேண்டும். ஓரிரு வெற்றிகள் பேசப்படும்போது ஆயிரக்கணக்கான அழிவுகள் கண்டு கொள்ளப் படுவதில்லை.

ஆனால் மற்றொரு கிளை வழியில் அது பெரு வெற்றி தரக் கூடும். இப்போது, ஸ்டெம் செல் ஆராய்ச்சியில் நம்பிக்கைக் கூறுகள் தென்படுகின்றன. குளோனிங் முறையில் நோயால் சிதைந்த உடல் பாகங்களுக்குப் பதிலாக புதிதானவற்றை ஸ்டெம் செல் ஊடாக உருவாக்குவதில் அக்கறை காண்பிக்கப்படுகிறது.

குளோனிங் அறிவியலானது இப்போது ஸ்டெம் செல் ஆய்வுகள் நோக்கி விரைவது அதன் செயலாற்றலை மேம்படுத்தி மானிடத்தின் செழுமைக்கு கைகொடுக்கும் என நம்பலாம். ■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரைவிமர்சனம்

# டேவிட்

## தமிழ் சினிமாவில் இன்னொரு திருப்பம்

நடுத்தரவர்க்க சாதிப் பெருமையும் இந்துமதச் சார்பும் தமிழ் சினிமாவில் ஊடாடிக் கொண்டிருப்பது புதிதானதல்ல. எனினும் எண்பதுகளுக்குப்பின் வெளிவந்த ஒருசில திரைப்படங்களில் இந்த சாதி, மத ஆதிக்கக் கூறுகள் கேள்விக்குள்ளாக்கப்பட்டன. குறிப்பாகக் காதலை மையப்படுத்தி வந்த பல்வேறு திரைக்கதைகள் இதைச் செம்மையாய்ச் செய்தன. சாதியப் பெருமைகளைப் பின்னுக்குத் தள்ளின. ஆனால், தமிழ்த் திரைப்படங்களில் ஊடாடி நிற்கும் இந்துமதச்சார்பு தொடர்ந்தது. இத்தோடு தொண்ணூறுகளுக்குப் பின் தொடர்ச்சியாக இஸ்லாம் மீது தீவிரவாத முத்திரை குத்தும் நிலை ஏற்பட்டது. நான் கடவுள், விஸ்வரூபம் போன்ற படங்களின் மூலம் கட்டமைக்கப்படும் புனிதம், தீவிரவாதம் என்ற எதிர்வுகள் ஒருபுறம் இருக்க, சமீபத்திய கடல், பரதேசி படங்களின் மூலம் அடுத்த இலக்காக கிறிஸ்துவம் நிறுத்தப்படுவது கவனிக்கத்தக்கது. இப்படியான சூழலில் கடல் படத்தை யொட்டி வெளிவந்து விமர்சகர்களால் பெரிதாகக் கண்டுகொள்ளப்படாத டேவிட் படம் குறித்து விவாதிக்க வேண்டியது முக்கியமாகிறது.




### டேவிட் :

ஒரே பெயர்கொண்ட இருவேறு நபர்களின் வாழ்க்கைப் பின்னல். ஒருவர் மும்பை. இன்னொருவர் கோவா. இசைத்துறையில் ஆர்வம் மிக்க ஒரு கிற்றாரிஸ்ட் கலைஞனாக வரும் மும்பை டேவிட் (ஜீவா), எப்படியேனும் இசைத்துறையில் ஒரு நல்ல வாய்ப்பைப் பெற்று தனது மிடில் கிளாஸ் நிலையை உயர்த்தத் துடிப்பவன்.

திருமண நாளன்று மணப்பெண் தன்னைவிட்டு ஓடிப்போனதால் ஒரு "bad luck personality" ஆகத் தன்னை உணர்ந்து மது, போதை அவற்றிற்கே உரித்தான ஊதாரித்தனம் ஆகியவற்றோடு கிறுக்கு சாண்டாவாக சுற்றித் திரிபவன் கோவா டேவிட் (விக்ரம்). இவர்கள் இருவரின் வாழ்வில் நிகழும் எதிர்பா


மீனா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ராத சம்பவங்கள் தான் கதையின் திருப்பம்.

ஒரு பெரிய மியூசிக் டைரக்டரான திரிலோக் சாருடன் ஒரு "Leading Guitarist"ஆக உலக அளவில் பயணிப்பதற்கான அரிய வாய்ப்பு ஒன்று ஜீவாவிற்குக் கிடைக்கிறது. கனவுகளெல்லாம் வசப்பட்ட மகிழ்ச்சியோடு வீட்டிற்குள் நுழைகிற அதே வேளை, அவர்களது வீட்டை நோக்கி, மதம் மாற்றாதே மதம் மாற்றாதே எங்கள் மதத்தை மாற்றாதே என்கிற முழக்கத்தோடு பெரும் கும்பலொ ன்று கையில் கொடிகளுடன் வருகிறது. திகைத்துப் போய் வெளியே வந்தால், அந்தப் பகுதி எம்.எல்.ஏ மாலதி தாய் தனது கரசேவகர்கள் புடைசூழ நின்றுகொண்டு, ஜீவாவின் தந்தை யும் கிறிஸ்தவப் பாதிரியாருமான ஃபாதர் நோயல், கொடிய கலாசாரத்தை ஆயுதமாக்கிக் கொண்டு நமது மதத்தை அழித்துக் கொண்டிருக்கிறார் என்றும் தமது இந்து, முசல்மான் சகோதரர்களைக் கட்டாயப்படுத்தி லஞ்சத்தைத் திணித்து மதம் மாற்றுகிறார் என்றும் இவர்கள் கட்டாயம் தண்டிக்கப்பட வேண்டும் என்றும் வன்முறையைத் தூண்டுகிறார்.

கொந்தளித்துக் கொண்டிருந்த அவரது சேவக் கும்பல் தாயின் கட்டளையை ஏற்று, ஃபாதர் நோயலை தரதரவென இழுத்துவந்து, செருப்புக் கால்களால் எட்டி உதைத்து, தலை மயிரை இழுத்து, முகத்தில் கரியைப் பூசி தனது வெறியாட்டத்தை நிகழ்த்துகிறது. வயது வந்த இரு மகள்களுக்குத் திருமணம் செய்விப்பதைப் பற்றிய கவலை கூட இல்லாமல் அன்பு, கருணை, கர்த்தரின் வாக்குகள் ஆகியவற்றைப் பிரசாரம் செய்வதையும், பாதிக்கப்படுகிற மக்களுக்காக சாதி, மதம் பாராது தனது சொற்ப சம்பளத்தைக் கூட அள்ளிக்கொடுப்பதையும் வாழ்க்கையாகக் கொண்ட தனது தந்தையை நடுத்தெருவில் இழுத்துப் போட்டு அசிங்கப்படுத்தியது டேவிட்டையும் அவனது தங்கைகளையும் நிலைகுலையச் செய்கிறது. டேவிட்டின் "world tour" கனவு தவிடுபொடியாகிறது. தந்தைக்கு நேர்ந்த அவமானத்தை ஜீரணிக்கவே முடியாமல் ஏன் அவர்மீது இந்தக் குற்றச்சாட்டு வந்தது என்கிற தலை வெடித்துப் போகிற கேள்வியைச் சுமந்து கொண்டு தவிக்கிறான் டேவிட். அடிதடி, காவல்நிலையத்தில் புகார், வழக்குரைஞரிடம் ஆலோசனை என எந்தவழியில் சென்றாலும் அரசியலில் இதெல்லாம் சகஜம்பா என்பது மாதிரியான பதில்தான் கிடைக்கிறது. இறுதியாக எம்.எல்.ஏ மாலதியை

**பிஜோய் நம்பியாரின் இந்தப்படம் தமிழ் சினிமாவின் திசை வழியை மாற்றியிருக்கிறது என்பதை புறக்கணித்து விட முடியாது. மணிரத்தினத்திடம் பணியாற்றிய ஒருவர் இப்படி குருவை மிஞ்சிய சீடராக இருப்பது ஆச்சரியமளிக்கிறது. இயக்குநர்களுக்காகவே படத்திற்கு போவது என்ற நம்பிக்கைகள் எல்லாம் தளர்ந்து கொண்டிருந்த சமயத்தில் சமீப கால புதுமுக இயக்குநர்கள் அரசியல் பார்வைகளுக்கும் சினிமாத் தனத்திற்குமான இடைவெளியை குறைத்துக் கொண்டு வருவது தமிழ் சினிமா மீது நம்பிக்கையை துளிர்க்கச் செய்கிறது**

நேரடியாகச் சந்தித்து, அந்தக் குற்றச்சாட்டுக்கு ஆதாரம் என்ன? அப்பாவை அடித்ததன் காரணம் என்ன? என்று கேட்கிறான். உங்கள் அப்பா நிரபராதியாகவே இருந்தாலும் நாங்கள் செய்தது சரி தான். இது மற்றவர்களுக்கும் ஒரு எச்சரிக்கையாக இருக்கும் என்று மாலதி தாய் பதில் சொல்ல, கொதித்துப் போகிறான். நடுரோட்டில் நின்று தனது ஆற்றாமைகளைக் கொட்டித்தீர்க்கிறான். அப்போது, ஏற்கனவே இந்த கும்பலால் பாதிக்கப்பட்ட ஒருவன், இவர்களைத் திருப்பி அடிக்கவேண்டும், அவர்கள் நம்மேல் கைவைப்பதற்கு முன் நாம அவங்க மேல கைவைக்கணும் என்கிறான். டேவிட்டிற்கும் இதுதான் சரியெனப்படுகிறது. மாலதி தாயின் கட்சிக்கூட்டம்மொன்று பிரம்மாண்ட பொதுமேடையில் நடக்கிறது. டேவிட் முதல்வரிசையில் மாலதியைக் குறிவைக்கக் கத்தியோடு காத்திருக்கிறான்.

பெண்கள் மீது பெரிய ஈர்ப்பு எதுவும் இல்லாமல் சுற்றிக்கொண்டிருந்த கோவா டேவிட் (விக்ரம்),ரோமாவை முதல்முறை தரிசிக்கும் போதே காதல்வயப்படுகிறான். ரோமா, தனது நண்பன் பீட்டரின் காதலி என்பதும் அவள் காதுகேளாத, வாய்பேச முடியாத மாற்றுத்திறனாளி என்பதும் தெரியவருகிறது. ரோமா, நட்புரீதியாக கன்னத்தில் கொடுக்கும் முத்தத்தைக் காதல் என்று தவறாகப் புரிந்து கொள்ளும் டேவிட், பணத்துக்காக பீட்டர் ரோமாவை ஏமாற்றுவதாக நினைத்துக்கொள்வதோடு, ரோமாவைக் காப்பாற்றித் தானே திருமணம் செய்துகொள்ள வேண்டும் என்றும் திட்டமிடுகிறான். அதற்காகப் பல்வேறு முயற்சிகள் எடுத்தும் எதுவும் வொர்க் அவுட் ஆகவில்லை. இறுதியாகத் தனது தோழி ஃபெனியின் ஆலோசனைப்படி திருமண நாளன்று, இவர்களின் திருமணத்தில் தனக்கு உடன்பாடு இல்லை என்று சொல்லித் திருமணத்தை நிறுத்தத் தயாராகிறான். ஃபெனி ஒரு மசாஜ் பார்லர் வைத்திருப்பவள். பாலியல் தொழில் எனக் குற்றம் சாட்டப்பட்டு அடிக்கடி சிறை செல்ல நேர்பவள். தோன்றும் காட்சிகள் எதிலும் வசனம் ஏதுமின்றி அவர்களின் குழந்தையைச் சுமந்து திரிவான் அவளது கணவன்.

மும்பையும் கோவாவும் மாறிமாறி காட்சியாக்கப்பட்டுள்ள போதும் இரண்டும் வெவ்வேறு காலகட்டத்தில் நடப்பவை. மும்பை 1998இலும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


கோவா 2010 இலும் நடக்கிறது. இறுதியாக மாலதி தாயைத் தாக்குவதற்கு டேவிட் தயாராகும் போது, ஏற்கனவே பாதிக்கப்பட்ட அந்த நபர் மாலதியைக் குறிவைத்துத் தோள்பட்டையில் சுடுகிறார். மாலதி தாய் ஜீவாவின் முன்பு சரிந்து விழுகிறாள்.

கோவாவில் ரோமா, பீட்டர் திருமணம் நடக்க இருக்கிறது. திருமணத்தை நிறுத்துவதற்காகச் சொல்ல வேண்டிய டயலாக் குறிப்புகளுடன் டேவிட் தயாராக இருக்கிறான். கண்களால் அவனை ஊக்குவித்தவாறே ஃபெனி அங்கே அமர்ந்திருக்கிறாள். ஆனால் மணக்கோலத்தில் இருக்கும் ரோமாவும் பீட்டரும் பார்த்ததும் ஒருவரையொருவர் மனதார நேசிப்பதை உணர்ந்து தன் முடிவைக் கைவிடுகிறான். ஃபாதர் டேவிட், ஆமாம் மும்பையில் இருந்த அதே டேவிட் இப்போது ஃபாதராகி ரோமா,பீட்டர் திருமணத்தை நடத்தி வைக்கிறான். இரண்டு டேவிட்களும் ஒருவரையொருவர் சந்தித்துக் கொள்கிறார்கள். தந்தையின் எந்தப் பாதிரி வாழ்வை விமர்சித்தானோ அதே வாழ்வைத் தத்துவமாக ஒருவன் புரிந்துகொள்ள இன்னொருவன் மீண்டும் கிறுக்கு சாண்டாவாகி தமது பயணத்தைத் தொடர்கிறான். இருவரது வாழ்விலும் ஏற்பட்ட திடீர்த் திருப்பங்களின் ஊடாக அவர்கள் எடுத்த தீவிர முடிவுகள் நேரெதிராக மாறிவிடுகின்றன. அன்பும் கருணையும் வென்றுவிடுகிறது.

ஆக மதவன்முறை, அவமதிப்புகள், காதல் தோல்வி, சமூக ஏளனம் போன்ற எல்லா வலிகளையும் அன்பு, நேசம், மன்னிப்பு, ஊதாரித்தனம் போன்ற விழுமியங்களால் கடந்துபோவதும் பழியுணர்ச்சிகளைப் புறந்தள்ளி சகமனித நேசத்தை வளர்ப்பதும் தான் படத்தின் மையக்கரு என்பதாகக் கதைச்சுருக்கத்தைச் சொல்லிவிடலாம். ஆனால் திரைக்கதையமைப்பும் காட்சிகளும் வசனங்களும் போகிறபோக்கில் கொட்டித் தீர்க்கும் அரசியலை சில பத்திகளுக்குள் விளக்கிவிட முடியாது.

மும்பையின் கதைக்களம் இந்திய சமூகத்தில் இந்துத்துவ வன்மத்தை ஒரு அசாத்தியத் துணிச்சலுடன் பகிரங்கப்படுத்தியிருப்பதோடு இந்திய தேசத்தின் ஒற்றுமையின், ஆகப் பெரும் எதிரிகளாக தலிபான், முஸ்லிம் தீவிரவாதிகளை மட்டுமே முன்னிறுத்தி தேசப்பற்றைக் கொழுந்துவிட்டு எரியச்செய்யும் அயோக்கியத்தனங்களையும் புரட்டிப் போட்டிருக்கிறது. பிரசார நெடி இல்லாமல் அரசியலைக் கலைப் படைப்பாக்குவதும் கத்தியும் இரத்தமும் இல்லாமலேயே வன்முறையின் வலிகளை உணரச்செய்வதும் நுட்பமான பணி. அந்தப் பணியை டேவிட் திறம்பட செய்திருக்கிறார்.எந்தக் குற்றமும் செய்யாதவராக இருந்தும் தனது தந்தை அவமதிக்கப்பட்ட பிறகு, மண்டையைப் பிளக்கும் கேள்விகளுடன் மாலதிதாயின் அடியாள் (குஜராத் 2002 புகழ் பாபு பஜ்ரங்கியை நினைவுபடுத்தும்) ரானடேவைச் சந்திக்கும் போது, உங்க அப்பனை அடிச்சதுக்குக் காரணம் பிஸினஸ், வியாபாரம். ஒரு நல்ல வியாபாரிக்கு ஸ்டாக் தீராம பாத்துக்கணும். ஒரு நல்ல அரசியல்வாதிக்கு பிரச்சினை தீராம பாத்துக்கணும். இதெல்லாம் உன்ன மாதிரி மிடில் கிளாசுக்கு தெரியாது. சொன்னாலும் புரியாது என்று ரானடே அரசியல் வகுப்பெடுப்பதும் சட்டத்தை நம்பி காவல்துறையில் புகார் அளிக்கச் சென்றால், ஏற இறங்கப் பார்க்கும் பொலிஸ்காரர், ஒரு கன்னத்தில் அறைஞ்சா மறுகன்னத்தைக் காட்டுனு உன் சாமிதான சொல்லுச்சு. கம்ப்ளெயிண்டா குடுக்க சொல்லுச்சி? என்று முகத்தில் அறைவதும் இந்துத்துவத்தின் அரசியலையும் அரசு எந்திரம் முழுவதும் நீக்கமற நிறைந்து நிற்கும் இந்து மனநிலையையும் தோலுரித்துக் காட்டுகின்றன.

காட்சிகள் ரொம்பவும் பூடகமாக இல்லாமல் வெளிப்படையாக மத வன்முறையை அம்பலப்படுத்துவது, மாலதி தாயின் தோற்றம் ஒருவகையில் சுஷ்மா சுவராஜ் அல்லது உமா பாரதியை ஒத்திருப்பது, ஃபாதர் நோயலின் மீதான தாக்குதல் 1998 ஆம் ஆண்டு ஒரிசாவில் கிறிஸ்துவப் பாதிரியார் எரித்துக் கொல்லப்பட்டதை நினைவுபடுத்துவது, இவையெல்லாம் டேவிட் கதைத்தளமானது ஒரு துல்லியமான வரலாற்றுப் பின்னணியை கொண்டிருப்பதை அறிவிக்கிறது.



அந்தக் கும்பலால் நடுரோட்டில் இழுத்துவைத்து உதைக்கப்பட்ட அவமானத்திற்குப் பிறகு, ஃபாதர் நோயல் (நாசர்) கூனிக்குறுகுவதும், இறுகிப்போன மௌனத்தில் கரைவதும், கரிபூசப்பட்ட முகத்தைக் கண்ணாடியில் பார்க்கும்போது சவரன்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

செய்துகொண்டிருக்கும் பிளேடால் முகத்தைக் கிழித்து ரத்தம் கசியச் சிதைந்து போவதும், பிறகு திடீரென்று வீட்டிலிருந்து காணாமல் போய் விட பதறிப் போன பிள்ளைகள் எங்கெங்கோ தேடியலைந்த பின்பு, அமைதியை இழந்து தவிக்கிற இந்த உலகத்துல சந்தோஷத்தைத் திரும்பக் கொண்டுவரணும்னா மன்னிக்கணும். உங்களுக்கு யார் என்ன தீங்கு செஞ்சாலும், உங்க கூட சண்டை போட்டாலும் அவங்களை மன்னிச்சி விட்ருங்க. மனித குலத்திலேயே மிகச் சிறந்த குணம் மன்னிப்பு. கர்த்தருடைய குணம் மன்னிப்பு. இன்றைக்கு நாம் மன்னித்தால் கர்த்தர் சரியான நேரத்தில் நம்மை மன்னிப்பார். ஆக மன்னிப்பு மட்டும் தான் வாழ்க்கையில் சந்தோஷத்தைக் கொண்டுவரும் என்று குழந்தைகளிடம் பிரசாரம் செய்துகொண்டிருக்கும் தந்தையை பிள்ளைகள் ஓடிவந்து அணைத்துக் கொள்வதுமான காட்சிகளைப் பார்க்கும்போது மனித விழுமியங்கள் நிரம்பிய ஒரு அற்புதமான நாவலை வாசித்துமுடித்த அனுபவம் கிட்டுகிறது.

குவார்ட்டரும் கையுமாக இல்லையில்லை ஃபுல்லும் கையுமாகவே சுற்றிக் கொண்டிருக்கும் கோவா டேவிட்டிற்கு தனது காதலி ரோமாவுடன் சேர்வதற்கு ஒரு அரிய வாய்ப்புக் கிடைக்கிறது. ரோமா- பீட்டர் திருமணத்திற்கு முன்னாள் இரவு கடற்கரையின் உச்சிப்பாறையின் மேல் உட்கார்ந்து வழக்கம்போல தண்ணி அடித்துக்கொண்டிருக்கும் டேவிட்டைத் தேடி பீட்டர் மேலேறி வருகிறான். திடீரென்று பாறை வழுக்கி அதன் விளிம்பில் உயிருக்குப் போராடுகிறான். இங்கே இப்படியே பீட்டரை கைவிட்டுவிட்டால் ரோமாவை எளிதாகத் திருமணம் செய்துகொள்ளலாம் என்று நினைத்தாலும் அடுத்த கணம் தனது வன்மத்தை மாற்றிக் கொண்டு நண்பனைக் காப்பாற்றுகிறான். தனது வேட்கையை விடவும் சக உயிரின் முக்கியத்துவம் உணர்த்தப்படுகிறது. திரைக்கதை முழுக்க இப்படி மனிதத்தன்மையும் வன்முறையற்ற மனங்களும் நடமாடுகின்றன.

கதை முழுக்க முக்கியத்துவம் பெறும் பெண்களின் பாத்திரங்கள் இத்திரைப்படத்தின் இன்னொரு குறிப்பிடத்தக்க அம்சம். தமிழ் சினிமா தொழில்நுட்ப ரீதியாக எத்தனையோ மாற்றங்களை அடைந்த போதும், பெண் பற்றிய பிம்பத்தில்



அப்படியொன்றும் பெரிய மாறுதல்கள் இல்லை. படத்தில் வசூலை அள்ளிக்குவிக்க, குத்துப்பாட்டு வைத்து டூ- பீஸில் ஆடவிடும் சினிமாக்காரர்கள் அதே பெண்கள் நாயகிகளாக வரும்போது மட்டும் ஊட்டுக்காரனுக்குக் காட்ட வேண்டியதை ஊருக்கெல்லாம் காட்டாதே என்று ஹீரோயிசடயலாக் வைத்துக் கலாசாரத்தைக் கக்குகிறார்கள். இந்த ஆணாதிக்கவாதங்களைப் புறந்தள்ளி, பெண்ணுடலைக் கொண்டாடுவது, காதலைக் கொண்டாடுவது, தாய், தந்தை, தங்கை, தோழி ஆகிய உறவுகள் குறித்த புதிய பரிமாணத்தை வெளிப்படுத்துவது என டேவிட் பல்வேறு முன்னெடுப்புகளைச் செய்திருக்கிறது.

டேவிட்டின் (விக்ரம்) செத்துப் போன தந்தை ஆவியாக வந்து பெண்கள் மீது ஈர்ப்பே இல்லாமல் இருக்கும் தனது மகனிடம் , இந்த உலகத்திலேயே சிறப்பான விடயம் பொண்ணுங்க தான். பொண்ணோட குரல், பொண்ணோட சிரிப்பு, பொண்ணோட அந்த டச், அவங்க வேர்வை வாசனை... என்று வர்ணித்துக் கொண்டே போவதும், விக்ரமின் தோழி ஃபெனி (தபு), இங்க பாரு டேவிட், இந்த உலகத்துல லவ் என்ற பேர்ல ஒரே ஒரு எமோஷன் தான். மத்ததெல்லாம் லூஸ்மோஷன் தான் என்று எடுத்துரைப்பதும் தனது மகன் ஒரு பெண்ணை விரும்புகிறான் என்று தெரிந்ததும் புளகாங்கிதப் பட்டு யாருடா அந்தப் பொண்ணு, விபச்சாரியா, குடிகாரியா, நெட்டை, குட்டை, அவளுக்கு மீசை இருக்கா பரவாயில்லை, நீ கல்யாணம் பண்ணிக்கோ என்று விக்ரமின் தாய் அதிரடிப்பதும் ஜீவாவும் அவரது தங்கையும் ஒரே சிகரெட்டை மாற்றி மாற்றி இழுத்து தம் அடிப்பதும் தமிழ் சினிமா அடுத்தகட்டத்திற்கு நகர்ந்திருப்பதை உறுதிப்படுத்துகின்றன. முன்பின் அறியாமல், டேவிட்டிற்கு டிக்கெட் வாங்கிவிடும் நமது கலாசார வாதிகளின் கதி அதோகதி தான்.


பெண்கள் வெறும் கதாப்பாத்திரங்களாக இட்டு நிரப்பப்படாமல், ஹீரோயினிச ஸ்திரத்தன்மையோடு படைக்கப்பட்டுள்ளது குறிப்பிட்டுச் சொல்லவேண்டிய ஒன்று. ஜீவா, விக்ரம் ஆகிய இரண்டு டேவிட்களுக்கும் உற்ற தோழிகளாக வரும் லாரா தத்தா (காயத்ரி), தபு (ஃபெனி) இருவருமே, ஹீரோக்கள் துவண்டுபோகும் போது தோள்கொடுப்பவர்கள். கண்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லங்கும் போது கண்ணீரைத் துடைப்பவர்கள். அறிவுரை சொல்லி நெறிப்படுத்துபவர்கள். ஆறுதல் சொல்லி ஊக்கப்படுத்துபவர்கள். மொத்தத்தில், இவர்கள் இருவரும் (வழக்கம் போல) ஹீரோக்களுக்கு முதுகு சொறிந்து கொண்டு இருக்காமல், அவர்களின் 'secrect of energy' ஆக இருக்கும் ஹீரோயின்கள். இங்கு லாரா தத்தா, தபு இருவருக்கும் உள்ள இடைவெளியின் யதார்த்தம் கவனிக்கத்தக்கது. தபு தனது நண்பனோடு குளியலறைக்கு அருகில் மட்டுமல்ல தனது படுக்கையறையிலும் கூட வைத்து உரையாடுபவள், ஆனால் லாரா தத்தா, தனது நண்பனின் சோகத்திற்கு ஆரத்தழுவி ஆறுதல் சொல்லிய கணத்தை தந்தை முறைத்துப் பார்த்துவிட்டுச் சென்ற பிறகு, டேவிட்டை மீண்டும் வீட்டிற்குள் அனுமதிக்கக் கூடத் திராணியற்றவள். இது வெறுமனே இருவேறு பெண்களுக்கிடையிலான வேறுபாடு அன்று. ஒரு குடும்பப் பெண்ணிற்கும், மசாஜ் பார்லர் நடத்தும் வெளிப்படையாகச் சொல்வதானால் பாலியல் தொழில் நடத்தும் பாலியல் தொழிலாளிக்கும் இடையிலான சுதந்திரத்தின் இடைவெளி. இந்த வகையில் தான், ஜீவா - லாரா நட்பை விட விக்ரம்-தபுவின் நட்பு விசாலமானதாய் இருக்கிறது. லாரா தத்தாவைப் போல், தனது தந்தையின் ஓரக்கண் பார்வைக்கே நடுங்கிவிடும் பெண்ணாக இல்லாமல், தன் தொழிலை ஒட்டி கைது செய்து சிறையில் அடைத்திருக்கும் போது கூட, சீக்கிரம் போப்பா என்று விரட்டும் பொலிஸ் காரரிடம், ஏ! ஃபிராடு ஓசில மசாஜ் பண்ணிட்டு ரெய்டு வேற பண்றயா? உன் பொண்டாட்டி கிட்ட சொன்னா தொலைஞ்ச நீ என்று அதிகாரத்தை எதிர்த்துக் குரலுயர்த்த முடிகிறது.

இந்தப் படத்தின் கதை சொல்லும் உத்தி (Narrative Technic) குறித்து சில அம்சங்களைச் சொல்லவேண்டும். முற்றிலும் வன்முறையான இன்றைய இந்தியச் சூழலைப் (மும்பை) பற்றிப் பேசும் இந்தத் திரைப்படம் எந்தவகையிலும் வன்முறையின் கோரத்தாண்டவங்களைத் தத்ரூபமாக்காமல் அதாவது கமல்ஹாசன், மணிரத்னம் படங்களில் வருவதைப் போல தீவிரவாதிகள் தலையை அப்படியே அரிந்து எடுப்பவர்களாகவோ மூளை சிதற தோட்டாக்களை வெடிக்க வைப்பவர்களாகவோ ரத்த ஆறை பெருக்கெடுத்து ஓடச்செய்பவர்களாகவோ இல்லாமல், இங்கு இந்துமதவாதிகள் வன்முறையை ஒரு எல்லையோடு நிறுத்துபவர்களாக இருக்கிறார்கள்.

ஜீவா தனியாக மாட்டிக் கொள்ளும்போது கூட அவனை கொஞ்சம் தட்டிவிட்டு, அரசியல் வகுப்பெடுத்து உயிரோடுதான் அனுப்புகிறார்கள். மனிதர்களுக்கிடையே இன்னும் கூட உரையாடலுக்கு சாத்தியம் இருக்கிறது என்பதைத்தான் அந்த மாலதி தாய் மற்றும் அவளது தளபதி (பாபு பஜ்ரங்கி) யுடனான ஜீவாவின் உரையாடல் காட்டுகிறது. படத்திலுள்ள



உச்சபட்சமான கொடும் வன்முறை மாலதி சுடப்படுவது மட்டும்தான். அது கூட கதாநாயகன் அல்லது வில்லனின் வீரச் செயல் அன்று. பாதிக்கப்பட்ட ஒருவன் ஒரே ஒருமுறை சுடுகிறான். அந்தப் பெண் ஒற்றைக் குண்டில் வீழ்கிறாள். அவளும் கூட இறந்திருக்க வாய்ப்பில்லை.

இந்துத்துவ வன்முறையை அதன் கொடூரங்களின் மீது கவனத்தைக் குவிக்காமல், குஜராத் படுகொலை போன்ற வன்முறை வெறியாட்டங்களைக் கண்முன் நிறுத்தி நமது நெஞ்சை உறையச் செய்யாமல், கிறிஸ்தவப் பாதிரியார் தனது குழந்தைகளோடு காரில் வைத்து உயிரோடு எரிக்கப்பட்ட கொடூரத்தைக் காட்சியாக்காமல், மதவாதம் எப்படி இத்தகைய வெறுப்பு அரசியல்களுக்கு (hate politics) அடிப்படையாக இருக்கிறது என்பதையும் மதமாற்றம் குறித்த சொல்லாடல்கள் எப்படி வியாபாரியின் ஸ்டாக் போல வெறுப்பு அரசியலுக்கான ஸ்டாக்காக வைக்கப்படுகிறது என்பதையும் குறித்த சிந்தனை உசுப்பலாக இது உள்ளது. வெட்டப்பட்ட தலைகளையும் சிதறிப்போன மூளைகளையும் மட்டுமே காட்டியிருந்தால் இந்த சிந்தனை உசுப்பல்களுக்கு வாய்ப்பிருந்திருக்காது. இந்தச் சிந்தனை உசுப்பல் இந்த வெறுப்பு அரசியலின் கொடுமுடி குஜராத் 2002 ஆகத்தான் இருக்கும் என்பதை நமக்கு உணர்த்திவிடுகிறது.

இதேபோல் கோவாவின் கதைக் களமும் ஒரு வேறுபட்ட தளத்தில் அமைக்கப்பட்டிருக்கிறது. அங்கே எந்த உணர்வுகளும் சீரியஸாக்கப்படுவதில்லை. தனக்கான மணப்பெண் ஓடிப்போன சோகம், காதல் தோல்வி எல்லாமே கஸுவலாக எடுத்துக் கொள்ளப்படுகிறது. உணர்ச்சிக் கொந்தளிப்பில் பார்வையாளர்களை மூளை மழுங்கச் செய்யும் அபத்தங்கள் இங்கு இல்லை. கதாநாயகன் முதல் கோவாவின் கிறிஸ்துவப் பாதிரியார் வரை எல்லோருமே காமெடி பீஸ்கள் தான்.

படத்தில் விக்ரமின் இறந்துபோன தந்தை ஆவியாக வந்து ஒரு பாத்திரம் வகிப்பது அற்புதமான கதையாடல் நுட்பம். இப்படியான கதையாடல் உத்தி ப்ரெக்டின் மாற்று நாடக உத்திகளை ஒரு வெகுஜன சினிமாத் தளத்தில் முயற்சித்ததைப் போல் இருக்கிறது. பார்வையாளரைக் காட்சியுடன் ஒன்ற வைத்துப் பாத்திரங்களுடன் அழுதுவிட்டும் சிரித்துவிட்டும் போவது பழைய பாணி நாடகம். எனது காவிய பாணி நாடகம் இதிலிருந்து வேறுபட்டது. அது பார்வை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாளரை காட்சியிலிருந்து விலகி நின்று காட்சி குறித்து சிந்திக்க வைப்பது என்பார் ப்ரெக்ட். அது அரங்கிலும் திரையிலும் பல்வேறு வடிவங்களில் செயல்படுத்தப்படும். இங்கு ஒரு அப்பாவின் ஆவி அப்படிச் செயல்படுகிறது.

இந்த உலகின் துன்ப துயரங்களோடும் அவற்றைத் தீர்க்கிற வழிமுறைகளோடும் பார்வையாளரை உண ர்வு ஒன்றவைத்து வீட்டிற்கு அனுப்பிவிடுவதால் அவர் இந்த நிலையை மாற்றுகிற மனிதராக ஆகிவிடமாட்டார். துன்பப்படுபவர்களுக்கு அனுதாபப்படுவோம், போராடுபவர்களின் வீரத்தைப் போற்றுவோம், அவர்கள் சிந்தும் ரத்தத்திற்காக நாம் இரு சொட்டு கண்ணீர் வடிப்போம் என்று எழுந்து செல்வதாக இல்லாமல் அவர்களை அதிர்ச்சிக்குள்ளாக்க வேண்டும். இந்த உலகம் இப்படியே இயங்கிக் கொண்டிருப்பதில்லை என்ற இயல்புணர்வு நீக்கம் (Defamiliarisation) செய்ய வேண்டும் என்பார் பிரெக்ட்.

இந்த மாற்று நாடக உத்திகள் டேவிட் போன்ற ஒரு வெகுஜன சினிமாவில் சாத்தியப்பட்டிருப்பது கவனிக்கத்தக்கது. டேவிட்டிலும் கூட, பார்வையாளர்கள் காட்சிகளுடன் ஒன்றிப்போவது, இரண்டறக் கலப்பது என்பதற்கப்பால், இந்தச் சமூகம் எல்லோருக்கும் எல்லா மதத்தினருக்கும் ஒரேமாதிரி புலர்ந்து மறைவதில்லை என்ற நிதர்சனத்தை உணர்ந்து இயல்புணர்வில் இருந்து நீக்கம் பெறுகிறார்கள். பார்வையாளர்கள் அவர்களாகவே இருந்து படத்தைச் சிந்திக்கிறார்கள். ஆம், அவர்கள் படத்தைப் பார்ப்பதில்லை சிந்திக்கிறார்கள்.

படத்தின் அத்தனை கதாப்பாத்திரங்களும் சிறப்பாக நடித்திருக்கிறார்கள். ஃபாதராக வரும் நாசர், காது கேளாத, வாய் பேச முடியாத பெண்ணாக வரும் இஷா செர்வானியின் மௌனமான நடிப்பு, தபு, பீட்டர் எல்லோருடையதும் கனகச்சிதமான நடிப்பு. என்ன இருந்தாலும் இப்படி ஒரு ரிஸ்க்கான கதையைத் தேர்ந்தெடுத்து நடித்ததற்காக விக்ரம், ஜீவா இருவரையும் எவ்வளவு பாராட்டினாலும் தகும். பின்னணி இசையும் பாடல்களும் சிறப்பாக அமைந்துள்ளன. தீராது போகப் போக வானம் வருவாயோ வெண்ணிலாவே என்னோடு நீ மனதை வருடுபவை. விக்ரம் ரோமாவைச் சந்திக்கும் போதெல்லாம் ஒளிக்கும் அற்புதமான பின்னணி இசைக்காகவே படத்திற்குக் காசைக் கொடுத்துவிட்டு வரலாம் போலிருக்கிறது. ஒரு குழுவாகச் சேர்ந்து இசையமைத்திருக்கும் கலைஞர்கள் பாராட்டிற்குரியவர்கள்.

படத்தில் உள்ள சில பலவீனங்களையும் சொல்லவேண்டும். மனித விழுமியங்களையும் அரசியலையும் மிக நேர்த்தியாக வெளிப்படுத்திய இந்தப்படத்தின் முதல் பத்துநிமிடக் காட்சிகளில் மாற்றுத் திறனாளிகள் கேலிக்குள்ளாக்கப்படுவது, உன் தங்கச்சி ஒடம்புல பதினாலு மச்சம் இருக்கு, பத்து இந்த ஊர்ல எல்லாரும் பார்த்திருக்காங்க. அதுல 3 அவளால தான் பார்க்கமுடியும் என்று கொச்சை வசனம் பேசுவது போன்றவற்றைத் தவிர்த்திருக்கலாம். ஒரு மாற்றுத் திறனாளியை முக்கிய பாத்திரமாக அமைத்தபோதும் படத்தில் இந்தத் தவறு நிகழ்ந்து விடுகிறது. இரண்டு டேவிட்களும் ஒருவரையொருவர் சந்தித்தே தீரவேண்டும் என்பதற்காக, மும்பை டேவிட்டைப் ஃபாதராக்கி கோவாவிற்குக் கொண்டு வந்ததும் நெருடுகிறது. அவர் ஒரு கிடாரிஸ்டாகாவே பயணத்தைத் தொடர்வது இயல்பாக இருந்திருக்கும். அந்த ஃபாதர் என்ற தோற்றம் ஜீவாவிற்குக் கொஞ்சம் கூட பொருந்தாமல் துருத்திக்கொண்டு நிற்கிறது. ஒருவேளை விக்ரமை ஃபாதராக்கி, ஜீவாவை கிறுக்கு சாண்டாவாக்கி இருந்தால் பரவாயில்லாமல் இருந்திருக்கும்.


இந்தப் படம் 'popular' ஆக வெற்றியடையாமற் போனதற்கு பொதுவாக இங்குள்ள ஒரு வகையான இந்து மனப்பாங்கு காரணமாக அமையலாம். இந்த மனப்பாங்கு ஒரு அன்னை வேளாங்கண்ணியை ஏற்றுக் கொள்ளும். ஆனால் இந்தப் படத்தில் காட்சிப்படுத்தப்படும் கிறிஸ்தவச் சூழலை ஏற்காது. இன்னொன்றையும் இங்கு குறிப்பிட வேண்டும். தந்தையின் ஆவி ஒரு பாத்திரமாக வருவது என்கிற அந்நிய மாதல் உத்தி வெகுஜன சினிமாப் பார்வையாளருக்கு எளிதில் புரியும் வண்ணம் 'narration' ஐச் சற்று எளிமை ஆக்கியிருக்கலாம். இது போன்ற உத்திகள் வெகுஜன தளத்திற்குப் பொருந்தாது என எண்ணத் தேவையில்லை. நமது தெருக்கூத்துகளிலேயே கூட இத்தகைய உத்திகள் உள்ளன என அரங்க ஆய்வாளர்கள் கூறியுள்ளது குறிப்பிடத்தக்கது. எனினும் சினிமாவின் எதார்த்தங்களுக்குப் பழக்கப்பட்டுப்போன நமது பார்வையாளர்களுக்கு இதைக் கதையாடலின் அழகியலைப் பாதிக்காமல் சற்று எளிமையாக்கியிருக்கலாம்.

Popular இதழ்களால் இது புறக்கணிக்கப்பட்டது புரிகிறது. ஆனால் சீரியஸ் விமர்சகர்கள் கண்ணில் டேவிட் ஏன் படவில்லை? அவர்களும் கூட கமல், பாலா,மணிரத்தினத்தைத்தான் கவனம் கொள்கின்றனர். எப்படிப் பார்த்தாலும் பிஜோய் நம்பியாரின் இந்தப்படம் தமிழ்சினிமாவின் திசைவழியை மாற்றியிருக்கிறது என்பதைப் புறக்கணித்துவிட முடியாது. மணிரத்தினத்திடம் பணியாற்றிய ஒருவர் இப்படிக் குருவை மிஞ்சிய சீடராக இருப்பது ஆச்சரியம் அளிக்கிறது. டேவிட் டீமும் பிஜோய் நம்பியாரும் பாராட்டுக்குரியவர்கள். இயக்குனர்களுக்காகவே படத்திற்குப் போவது என்ற நம்பிக்கைகளெல்லாம் தளர்ந்து கொண்டிருந்த சமயத்தில் சமீபகாலப் புதுமுக இயக்குனர்கள், அரசியல் பார்வைகளுக்கும் சினிமாத்தனத்திற்குமான இடைவெளியை குறைத்துக்கொண்டு வருவது அவர்கள் மீது மட்டுமல்ல, தமிழ் சினிமாவின் மீதும் நம்பிக்கையைத் துளிர்க்கச்செய்கிறது. ■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பனுவல் பார்வை






மு.பொ.

# வன்னியிலிருந்தோர் நாவல்

கடந்த 21.04.13 இல் கொழும்பு தமிழ்ச் சங்கத்தில் இடம்பெற்ற ''கருணைநதி'' என்ற நாவல் வெளியீட்டு விழாபற்றி யாரும் மறந்திருக்க மாட்டார்கள் என்றே நம்புகிறேன். இந்நாவலை எழுதியவர் வன்னி நிலத்தைச் சேர்ந்த 'கானவி' என்ற புனைப் பெயரைக் கொண்ட மிதிலா என்ற இளம்பெண் எழுத்தாளர் ஆவார். இப்படி நாம் அவரை வெறுமனே அறிமுகப்படுத்திவிட்டுப் போவது அவருக்கு நாம் செய்யும் துரோகம் என்றே கூறவேண்டும். காரணம் இவர் எழுத்துலகிற்கு புதியவராக இருந்த போதிலும் போர்க்கால வன்னி நிலத்தில் இவரை அறியாதவர் வெகு சிலரே எனலாம். முள்ளிவாய்க்கால் மனித பேரழிவின் போது இவர் ஆற்றிய மருத்துவப் பணி பற்றி வைத்திய கலாநிதி சிவதாஸ் மற்றும் கணேசமூர்த்தி ஆகியோர் கூறியவற்றை நான் வாய் விழக்கேட்டிருந்தபோது எனது மயிர்க் கால் ஒவ்வொன்றும் சில்லிட்டு விறைத்தன.

தான் பணியாற்றிக் கொண்டிருந்த மருத்துவமனையிலேயே குண்டுகள் வந்து விழுந்த வண்ணமிருக்க காயப்பட்டு வரும் சிறுவர், பெரியவர், வயோதிபர் என்று வித்தியாசம் பாராது தனது உயிர் பற்றிய பதற்றம் எதுவுமற்று பணிசெய்துகொண்டிருந்தவர் இந்த கானவி. கூடவே சில வேளைகளில் தனது இரத்தத்தையும் தானம்பண்ணி பலரை பிழைக்க வைத்திருக்கிறார் என்பதும் எவரையும் வியக்கவைக்கும் உண்மையே.

இதோ இவர் பற்றி ''கானவியும் நானும்'' என்னும் நூலின் முன்னுரையில் இவரது தோழி வேலு சந்திரகலா பின்வருமாறு கூறுகிறார்:

''எனக்கு அவர் அறிமுகமான போது அவளுக்கென ஒரு குழந்தையும் கணவனும் இருந்தார்கள். மருத்துவமனையில் அவளது பிரதான பணி குருதி சேகரிப்பு, குருதி வழங்கல், குருதிப் பரிசோதனை என்பவற்றோடு தலைமை மருத்துவரோடு சேர்ந்து சத்திர சிகிச்சைக் கூடத்திலும் கடமையாற்றும் பணியிலும் ஈடுபட்டிருந்தாள். அவள் இரண்டாவது குழந்தைக்குத் தாயான போதும் தனது கடமைகளைச் செய்வதில் கருத்தாக இருந்தார்... இளைய மகளை தனது தோளில் தொட்டில் கட்டி போட்டுக் கொண்டு மூத்த மகளை முன்பள்ளியில் இறக்கிவிட்டு மோட்டார் சைக்கிளில் போவார்... போரின் காரணமாக வன்னி மாந்தர்களின் அதீத மருத்துவ தேவையை உணர்ந்து அயராது ஈடுபட்ட பலருள் கானவியும் ஒருவர். எனினும் அன்றைய நாட்களில் கானவியால் மட்டும் தான் ஒரு சீனத்து வீராங்கனையைப் போல் தோளில் தொட்டில் கட்டி குழந்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தையையும் சுமந்துகொண்டு கடமையைச் செய்ய முடிந்தது. அவளொரு வித்தியாசமான பெண்ணாக இருந்தாள்'' என்று கானவி பற்றி கூறிச் செல்லும் சந்திரகலா மேலும் பின்வருமாறு அவரது உன்னதப் பணியை சுருக்கித் தருகிறார்.

''யுத்தத்தின் இறுதி நாட்களில் கானவி வன்னி மக்களுக்குச் செய்த தொண்டுகள் அளப்பரியவை. இவளது தியாகத்தால் காப்பாற்றப்பட்டவர்கள் இப்போதும் வாழ்கிறார்கள். இவளது குருதியால் உயிர் பிழைத்தவர்கள் பலர் இன்னும் உயிரோடு வாழ்வது அவளைப் போலவே எனக்கும் மட்டற்ற மகிழ்ச்சி.''

* முள்ளிவாய்க்கால் மனித பேரவலத்தின் போது கானவி ஓர் சிறு நொடிப்பொழுதுதானும் ஓய்ந்திருக்க முடியாத நிலையில் - ஓர் மிடருதேநீர் அருந்தி வறண்டு போகும் தொண்டையை நனைக்க முடியாத நிலையில் இயங்கியவர். அத்தகைய ஒருவர் எழுதிய நாவலில் அங்கு நடந்த பேரழிவுகள் அனைத்தும் இலக்கிய வடிவம் பெற்றிருக்கலாம் என்பதில் நாம் நினைப்பது தப்பில்லை. இந் நாவலுக்கு அணிந்துரை வழங்கிய வேலணையூர் தாஸ் (சோதிதாசன்) பின்வருமாறு சொல்கிறார்.

''இந்தவகையில் முள்ளிவாய்க்கால் மக்களின் பேரவலமும் மருத்துவப் பணியாளர்களது அர்ப்பணிப்பான சேவையும் இவரது குரு நாவலில் பதிவுசெய்யப்படுகிறது.''

இவ்வாறு அவர் கூறியபோதும் முற்றுமுழுதாக அவற்றை வெளிக் கொணராது ஆசிரியர் சுயதணிக்கை செய்திருக்கிறார் என்பது புலப்பட்டது. அதற்கான காரணத்தை நான் கானவியிடம் வினவிய போது ''அச்சம் தான் காரணம்'' என்று கூறிவிட்டு ''வேறொரு சமயத்தில் இவை வெளிவரும்'' என்றும் அழுத்தமாகக் கூறினார்.

அவர் அப்படி கூறியபோது எனக்கு ஹிட்லரின் ஆட்சியின் போது யூத மக்கள் ஆடு, மாடுகள் போல் ட்ரக்குகளில் ஏற்றப்பட்டு நச்சுவாயு நிலையங்களுக்கு கொண்டு செல்லப்படுவதை அடிப்படையாக வைத்து எழுதப்பட்ட NIGHT என்ற உலகப் புகழ்பெற்ற குறுநாவலே நினைவுக்கு வந்தது. அப்படிக்கொண்டு போகப்படும் வாகனம் ஒன்றில் இருந்த பெண் போகும் வழியெல்லாம் ''நெருப்பு நெருப்பு'' என்று கத்துகிறார். அவர்களுக்கு நடக்கப்போகும் பேரவலம் அவள் சூட்சுமமான பார்வைக்கு தரிசனமாவதை ஆசிரியர் கூறிச்செல்லும் விதம் அற்புதமானது. அவள் அலறுவதைக் கேட்கும் ஒவ்வொருவரும் அந்த அவலத்தால் பீடிக்கப்படுகின்றனர்- அந்த நாவலை வாசிப்பவர் உட்பட.

கருணை நதி நாவலை எழுதிய ஆசிரியர் ஒரு போராளி அல்ல. அவர் அங்கு காயப்பட்டு வந்து கொண்டிருக்கும் குழந்தைகள், முதியவர்கள், இளவயதினர்கள் சகலருக்கும் எந்தவித பாரபட்சமுமின்றி மருத்துவர்களோடு ஒன்றிணைந்து தனது மருத்துவப் பணியை மேற்கொண்ட வித்தியாசமான முப்பணியாளர். இவர் பணிக்கு ஆதார சுருதியாக இருந்து உந்துதல் கொடுத்தவை அன்பும் கருணையுமே. இக் கதை மேலோட்டமாகப் பார்ப்பவர்களுக்கு காதல் கதை போல் தோற்றம் தரினும் உண்மையில் அந்த வரையறைகளைத் தாண்டி நிற்பது இது. முள்ளிவாய்க்காலில் அத்தகைய பேரவலம் நடந்துகொண்டிருக்கும் பின்னணியில், பல வடுக்களைத் தாங்கிய வன்னி மக்கள், இனி எதுவுமே தேவையில்லை, உயிர் மட்டும் ஒட்டிக்கொண்டால் போதும் என்ற வாய் அந்தரப்பட்டுக்கொண்டிருக்க, தன்னுயிரைச் துச்சமாக மதித்து ஒரு பெண், அங்கு வரும் ஒவ்வொருவருக்கும் உயிரூட்டி விடுகிறாள் என்றால் அவள் நெஞ்சில் பிரவாகிக்கும் அன்புக்கும் கருணைக்கும் எல்லையில்லாது போகிறது.

அவள் பணிபுரியும் இடத்தைச் சுற்றி சன்னங்கள் கூவிக்கொண்டு பறக்கின்றன. அவள் வேலையில் மும்முரமாக ஈடுபட்டுக்கொண்டிருக்கிறாள்.

''கஜன் அண்ணா ரீ தருவியளோ?'' என்று அப்போது பொறுப்பாய் இருந்த மருத்துவரிடம் அவள் கேட்கிறாள். அவன் தண்ணீரைக் கொதிக்க வைக்கப்போகிறான்.

''அண்ணா ரவுன்ஸ் கீசுது பார்த்துப் போங்கோ'' என்கிறாள்.

ஒழுங்காக கொதிக்காத தண்ணீரில் அவர் போட்டுத்தந்த ரீயை அவள் குடித்து சற்று நேரத்தில் கஜன் அண்ணாவே காயப்பட்டு விழுகிறார். அவள் துடித்துப் போகிறாள். ஆயினும் காயப்பட்டவரை மனம் தளர விடாது தேற்றுகிறாள்.

அவள் தோழி காயமடைந்து அவள் கைகளிலேயே உயிரை விட்டபோது ''போய்விட்டாயா? நீயும் போய்விட்டாயா? இனி என்னோடு சேர்ந்து உயிர்களைக் காப்பாற்ற என் கூட வரப்போகிறவர் யார்?'' என்று அவளின் உடலைக் கட்டிக்கொண்டு அழுகிறாள்.

ஆனால் இவற்றால் அவள் இயக்கம் தடைப்படவில்லை. அவள் தொடர்ந்தும் இயங்கிக் கொண்டே இருக்கிறாள்.

இவ்வாறு இவள் தரிக்காது இயங்கிக் கொண்டிருப்பதை காயமடைந்து அவள் மருத்துவமனையில் கிடந்து பார்த்துக்கொண்டிருந்த இளைஞன் ஒருவன் இவள் மீது தீரா பெருங்காதல் கொள்கிறான். ஆனால் அவளோ சேவைபற்றி ஏதும் அறியாள். தன் வன்னிப் பிரதேச மக்களுக்கே மருத்துவப்பணி என்கிற வாய்க்கால் வெட்டி தன்னிடம் இருந்து பெருக்கெடுக்கும் கருணை நதியை பாய்ந்தோட விடுகிறாள்.

இந்நூல் பற்றிய இச்சிறு அறிமுகக் குறிப்பை வேலணையூர் தாஸ் கூறியதை மேற்கோள்காட்டி குறிப்பது விஷய விளக்கத்திற்கு மேலும் உதவுமென நம்புகிறேன்.

''உண்மையான காதலின் ஏக்கமும் தேடலுமே கதையின் கருவென விரிந்தாலும் மருத்துவப் பணியின் மனித நேய அணுகுமுறை கருணை நதியாக கதை எங்கும் பரவுகிறது.'' ■


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கடைசிப் பக்கம்

# நூல்வெளியீடும் நுகர்வோர் அவதிகளும்

இன்றைய உலகில் மாற்றங்கள் மேலது கீழாய் கீழது மேலாய் மிக வேகமாக மாறிக்கொண்டே இருக்கின்றன. என்ன தான் மாற்றங்கள், ஏற்றங்கள், எழுச்சிகள், வீழ்ச்சிகள் என சமூகம் ஓடிக்கொண்டிருந்தாலும் அடிக்கடி இடம் பெறும் விழாக்கள், கொண்டாட்டங்கள், ஆலய கும்பாபிஷேகங்கள், நூல் வெளியீடுகள் என்பன நடைபெற்றபடியே இருக்கின்றன. இத்தகை உற்சாகத்தை நாம் மகிழ்வோடு வரவேற்கவே வேண்டும்.

ஆனால் அடிக்கடி வெளிவரும் நூல்கள் வெளியீடுகள் பற்றி நினைக்கும் போது மனம் திடுக்கிடுகிறது. காரணம் எல்லோருமே பேனாவை கையில் எடுத்ததும் ஏதோ எழுதி அதனை நூலாக்கி வெளியீடு செய்து விட்டால் அது பெரிய சாதனை போல் எண்ணுகின்றனர் போலும்.



பத்மா சோமகாந்தன்

புதுப்புது விடயங்கள் புதிய கோணங்களில் அரிய சிந்தனைகளை தாங்கி நூல்கள் வெளிவருவதும் மிக மிக ஆரோக்கியமானதே. வெளியாகும் நூல் அதன் தரம், அதுகொண்டிருக்கும் புதிய செய்திகள், சிந்தனைகள் அவற்றிற்கான சமூகப் பெறுமானம் என்ன என்பதையும் நாம் சிறிது மனம் கொள்ள வேண்டும். அல்லாமலும் புதிதாக வெளியாகும் இந்நூல்கள் எமது சமூகத் தேவைகளை எந்தளவு பூர்த்தி செய்யும் எனவும் எண்ணிப்பார்ப்பது நல்ல பலனைத் தரும். இவற்றையெல்லாம் ஓரம் கட்டிவிட்டு எழுத்தாளெனென இணைந்து கொள்ளவும் எண்ணிக்கையில் இத்தனை நூல்களுக்கு நான் ஆசிரியர் எனக் கணிப்புக் கூறவும் போலி விளம்பரங்களுக்காகவும் நூலாக்கத்தில் ஈடுபடலும் எழுத்தாளர் சமூகத்தின் அறிவு ஜீவி என்னும் கருத்தை அடித்து விடும்.

இவற்றையெல்லாம் தாண்டி நூல் வெளியீடு செய்யும் சடங்கு இருக்கிறதே, அது பெரிய திருவிழா தான். திருமணம், புதுமனை புகுவிழா, ஆண்டுப் பூர்த்தி விழா என்பது போல நூல்வெளியீட்டு விழாவும் பல சம்பிரதாயங்களைக் கொண்ட நிகழ்ச்சிகளோடு இடம்பெறுவது ஒரு வழக்கமாகி வருகிறது.

நூல் வெளியீட்டு விழாக்களிலேயே தலைமையுரை, ஆசியுரை, தொடக்க உரை, வெளியீட்டுரை, கருத்துரை, நய உரை என பல்வேறு உரைகள் நிகழ்த்தப்படுகின்றன. இவ்வுரைகள் அந்நூலைப்பற்றியும் அதன் ஆசிரியரோடு தொடர்புபடுத்திப் பேசப்பட்டாலும் இத்தனை உரைகளிலும் உள்ளடங்கியுள்ள சாராம்சங்கள் தான் என்ன? இவற்றைக் கேட்டு அனுபவிக்கும் சபையோரில் அநேகமானோருக்கு நூல்களோடும் எழுத்துகளோடும் பரீட்சயமோ அல்லது அதிக நெருக்கமோ ஈடுபாடோ உண்டென்றால் அதுவும் கேள்விக்குறிதான்.

இந்த விழாக்களுக்கு தலைமை தாங்குவோர் சிறந்த ஆளுமையுள்ள இலக்கியவாதியாகவும் அறிவாளியாகவும் இருந்தாலும் சில கூட்டங்களிலே நிகழ்ச்சிகளைத் தொகுத்து வழங்க எனவும் ஒருவர் பங்கேற்பார். அவர் உரையாற்றுவோரை அறிமுகப்படுத்தி வைப்பதோடு, முன்பேசியவருடைய உரையின் சாராம்சத்தை ஓரிரு வரிகளில் குறிப்பிட்டுச் சொல்வார். அந்தளவே அவருடைய பணியாக இருந்தால் நலம். ஆனால் அதுக்குப் பதிலாக அங்கு உரையாற்றுவோர் பேச்சுகள் முழுவதையும் அவர் சொல்லாததையும் தன் கருத்தையும் இன்னும் கூட்டி தானும் ஒரு பெரும் பேச்சை நிகழ்த்தி முடிப்பார். இங்கு அதிக நேரத்தை தான் கொள்ளையடிக்கிறேனே என்ற எண்ணமே இவருக்குக் கெஞ்சித்தும் கிடையாது.


சபையில் இருப்போர் எல்லோருமே இலக்கியவாதிகளோ, நூல் படைப்போரோ அல்ல. அவர்கள் நூல்வெளியிடுவோரின் நண்பர்கள், உறவினர்கள், உடன் பணியாற்றுவோர் என பல தரப்பட்டவராகவும் இருப்பர். எனவே இங்கு உரைக்கும் உரைகள் அரைத்த மாவை அரைப்பது போல அமைய சபையோர் எந்த உரையை எப்படி ரசிப்பது எனத் தெரியாமல் இடம் வலமாக

*(51ஆம் பக்கம் பார்க்க...)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Printed and published by Express Newspapers (Ceylon) (Pvt) Ltd, at No.185, Grandpass road, Colombo -14, Sri Lanka.